Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, மார்கழி 4- ஆம் நாள. ஜமாதிலானி பிறை 18 (19-12-59) சனிக்கிழமை இதழ் 46.

தினக்குறிப்பு
— 1960 —
மாணவர்களுக்கும், மற்றோருக்கும் உபயோகமானது.
( அளவு 4″ × 6½″ )
விலை சதம் 75 தபால் செலவு சதம் 35
கலாநிலைய பதிப்பகம்
யாழ்ப்பாணம்.

## இரு காங்கிரஸ்களும் ஒன்ருக இணைய முடிவு

### மலை நாட்டுத் தமிழருக்கு ஒரு நற் செய்தி

### கொழும்பு மத்திய தொகுதியில் அஸீஸ் போட்டியிடலாம்

— நமது அரசியல் நிருபர் —

**"உங்களுக்கு ஒரு நல்ல செய்தி. மலை நாட்டுத் தமிழர் மீண்டும் ஒன்று பட்டு விட்டனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸும் ஒன்ருகி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் இணைந்து விட்டன" என்று வியாழனன்று ஒரு டெலிபோன் செய்தி கிடைத்தது.**

சென்ற சில வாரங்களாக நாவலப்பிட்டி காங்கிரஸுக்குப் பின் தொண்டமான் கட்சியினருக்கும் அஸீஸ் கட்சியினருக்கும் பலமுறைபேச்சுக்கள் நடந்தன. ஒற்றுமை ஏற்படவேண்டும் என்ற ஆவல் மலைநாட்டுத் தமிழரிடையே வரவர அதிகரித்து வந்தது. இதையுணர்ந்து தலைவர்களும், பலமுறை கூடிப் பேசி பரஸ்பரம் விட்டுக் கொடுத்து, மீண்டும் இணைவதென்று தீர்மானித்து விட்டனர். இனி இத்தீர்மானம் நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டியதே.

இதை நான் எழுதுகையில் நிர்வாக விஷயமாகச் சில சில்லறை விஷயங்கள் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளதாயும், அதைத்தவிர இரு ஸ்தாபனங்களும் இணைந்துவிடுமென்றே நம்பலாமென்றும், காங்கிரஸ் தலைவர் சோமசுந்தரத்தை விசாரித்ததில் தெரியவந்தது.

### ஒருகட்சியாக

இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் வருகிற பொதுத்தேர்தலிற் போட்டியிடத்தீர்மானித்து ஒரு கட்சியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இதன் தேர்தல் அடையாளம் மரமாகும்.

மலைநாட்டிலே 10 இலட்சம் தமிழர் வாழுகின்ருர்கள் என்ருலும் அவர்களில் சில ஆயிரம் பேர்களுக்குத்தான் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் உண்டு. அவர்களும் பல தொகுதிகளில் சிதறி வசிக்கின்றனர். ஆகவே எந்தத் தொகுதியிலும் தமிழருக்குப் பெரும்பான்மைப் பலமில்லை. என்ருலும் மூன்று அல்லது நான்கு தொகுதிகளில் அதிகமான சிங்கள அபேட்சகர்கள் போட்டியிட்டால், ஒரு தமிழர் வெற்றிபெறச் "சான்ஸ்" உள்ளதாகக் கூறப்படுகிறது. என்ருலும் எதுவும் நிச்சயம் இல்லை.

### மத்தியதொகுதி

கொழும்பு மத்திய தொகுதியில் தமிழ்பேசும் மக்களும் சிறப்பாக முஸ்லிம்களும் அதிகம். இது மூன்று பிரதிநிதிகள் தொகுதியாகும். இங்குஏ.அஸீஸ் ஓர் அபேட்சகராக நிற்கச் சம்மதித்தால், தமிழரசுக் கட்சியின் ஆதரவும் அவருக்குக் கிடைக்கலாமென்றும் பேச்சுகள் அடிபடுகின்றன. இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் இவ் விஷயமாகச் சீக்கிரத்தில் ஒரு முடிவைச் செய்யுமென்று அறிகிறேன்.

வேறுசில தொகுதிகளில் இ. ஜ. காங்கிரஸ் உசிதமாயின் தங்களை ஆதரிக்கும் சிங்கள அபேட்சகர்களை நியமிக்கலாம் என்றும் தெரியவருகிறது.

## சமஷ்டிக் கட்சி

### கொழும்பிலும் போட்டியிடும்

### கிழக்கு மாகாணத்தில் மூன்று தொகுதிகளில் போட்டியிடாது

சமஷ்டிக் கட்சியினர், வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி, புத்தளம், கொழும்பு மத்திய, தெற்கு, வடக்கு தொகுதிகளிலும் அபேட்சகர்களை நிறுத்தக் கூடுமென்றும் கட்சிக் காரியதரிசி டக்டர் நாகநாதன் தெரிவித்தார்.

வியாழன்வரை கீழ்க்கண்டவர்கள் கட்சி அபேட்சகர்களாகத் தீர்மானிக்கப்பட்டனர்.

காங்கேசன்துறை-எஸ். ஜே. வி. செல்வநாயகம், நல்லூர்-டக்டர் நாகநாதன், சாவகச்சேரி-வி. என். நவரத்தினம், மட்டக்களப்பு-ஸி. ராஜதுரை, திருக்கோணமலை-என். ஆர். ராஜவரோதயம், மன்னர்-அழக்கோன்; பட்டிருப்பு-ராஜமாணிக்கம், மூதூர்-டீ. ஏகாம்பரம், கல்குடா-மாணிக்கவாசகர்.

இவர்களைத் தவிர தீவுப் பகுதிகளுக்கு வி. ஏ. கந்தையா, வட்டுக்கோட்டைக்கு அமிர்தலிங்கம் இவர்கள் அநேகமாக நியமிக்கப்படலாமென்றும், கோப்பாய் தொகுதியில் ஸ்ரீமதி வன்னியசிங்கம் போட்டியிட விரும்பவில்லை என்றும், என்ருலும் அவரைப் போட்டியிடுமாறு பலர் கேட்டுக்கொள்வதாகவும், இத்தொகுதிக்கும் இதுவரை கட்சி அபேட்சகர் முடிவாகத் தீர்மானிக்கப்படவில்லை என்றும் தெரிகிறது.

இவற்றைத் தவிர புத்தளம், கொழும்பு மத்திய, வடக்கு, தெற்கு தொகுதிகளுக்கு கட்சியின் அபேட்சகராகப் பலர் மனுச் செய்துள்ளதாகவும் ஆனல், முடிவாக எதுவும்தீர்மானிக்கப்படவில்லை. ஒரு வாரத்துக்குள்ளாக எல்லாம் தீர்மானிக்கப்பட்டு விடுமாம்.

கட்சி அபேட்சகராகத்தேர்தலில் போட்டியிடப் பலர் மனுச் செய்துள்ளதாகவும், இதனல் கட்சி அபேட்சகரை நியமிப்பது அதிக சங்கடமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. சில எதிர்பாராத பிரமுகர்களின் பெயர்களும் அடிபடுகின்றன.

கல்முனை, நிந்தாவூர், பொத்துவில் தொகுதிகளுக்கு போட்டியிடுவதில்லை என்றும் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

## தேர்தல் அரங்கில் தீ. மு. க. வும் குதிக்கின்றது

### கட்சியின் சின்னம் அன்னசிப்பழம்

அகில இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் வருகிற தேர்தலில் ஐந்து தொகுதிகளில் அநேகமாகப் போட்டியிடுமெனக் கூறப்படுகிறது.


இலங்கைப் பொதுத் தேர்தலில் தி. மு. க முதல் முதலாகப் போட்டியிட முன் வந்தது பலரும் எதிர்பாராததாகும்.

ஐந்து வருடங்களுக்கு மேலாக இக்கட்சி செயலாற்றி வருவதாய் இதன் தலைவர் ஏ. எம். அந்தோனிமுத்து தேர்தல் அதிகாரியிடம் அத்தாட்சி காட்டியதன் மீது இக்கட்சியும் கட்சி முறையால் போட்டியிடும் 18 கட்சிகளில் ஒன்ருக அங்கீகரிக்கப்பட்டதாம். கட்சியின் தேர்தல் சின்னம் அன்னசிப்பழமாகும்.

கட்சித்தலைவரான அந்தோனிமுத்து கொழும்பில் ஓர் அச்ச

[9ஆம் பக்கம் பார்க்க]

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




BRIDGESTONE TIRES

பிரிட்ஜ்ஸ்டோன் டயர்கள்

*Distributors:*


**Tuckers Autodrome**

ஏகவினியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்.

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"



அமெரிக்க ஜனதிபதி ஐசனேவர், புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜனதிபதி வரவேற்புக்கு நன்றி அளிக்கின்ருர். அவரின் இரு மருங்கிலும் இந்தியக் குடியரசுத் தலைவர் இராஜன்பாபுவும் பிரதமர் நேருவும் காட்சியளிக்கின்றனர்.

**தி என்ஜினியரிங் அன்ட் இன்டஸ்ரியல் கொம்பனி லிமிட்டெட்**

**யாழ்ப்பாணம்.**

கப்பல் கட்டுதல், கட்டட அமைப்பாளருக்கேற்ற மர வேலை, வீட்டுத் தளபாடங்கள் செய்தல் இவற்றில் அநுபவம் வாய்ந்த, திறமை மிக்க தச்சுத்தொழிலாளர் தேவை. அநுபவம், திறமை இவைக்கேற்பச் சம்பளம் கொடுக்கப்படும். அத்துடன், தச்சு வேலை பயில மாணவரும் தேவை. பயிற்சிக்காலத்தில் தகுந்த செலவுப்படி அளிக்கப்படும். தகுதிவாய்ந்தவர்களே பின்னர் தொழிலில் அமர்த்தப்படுவர்.

விண்ணப்பங்கள்:

"சிற்றெடல்"

சுண்டுக்குளி,

21 யாழ்ப்பாணம்.


## ORDER NISI

IN THE DISTRICT COURT OF BATTICALOA.

*Testamentary Jurisdiction* } No. 737.

In the matter of the intestate estate and effects of the late Sinniah Sathasivam of No. 155 Main Street Trincomalee.

Deceased

Annapuranam Sathasivam of Arasadi Junction Batticaloa.

Petitioner.

Vs.

1. Sathasivam Pathmanathan and 2. Sathasivam Inthiranathan of Arasadi Junction, Batticaloa.

MINORS by their Guardian ad litem the 3rd respondent;

3. Kathiramathamby Nagarajah of Arasadi Junction Batticaloa as Guardian ad Litem over the minors the 1st and 2nd respondents abovenamed .........Respondents.

This matter coming on for disposal before D. S. L. P. Abeyasekara Esquire District Judge of Batticaloa on the 15th day of September 1959 in the presence of Mr. R. B. Kadramer Proctor on the part of the petitioner the petition and affidavit dated 21st March 1959 and 19th March 1959 respectively of the petitioner and the motion dated 15th September 1959 having been read. It is ordered that the 3rd respondent abovenamed be and he is hereby appointed as Guardian ad Litem over the minors the 1st and 2nd respondents that the petitioner as widow of the deceased declared entitled to have letters of administration to the intestate estate of the deceased and the same be issued to her accordingly unless the respondents or any person or persons shall on 29th October 1959 show sufficient cause to the contrary.

Sgd. D.S.L.P. ABEYASEKARA
District Judge.

Batticaloa,
15th September 1959.

The above Order Nisi is extended for showing cause to the contrary on the 1st December, 1959.

Sgd. D.S.L.P. Abeyasekara
District Judge.

29th October, 1959.

The above Order Nisi is extended for showing cause to the contrary on the 31st day of December, 1959.

Sgd. D.S.L.P. Abeyasekara
District Judge.

1st December, 1959.

தமிழ் பேசும் மக்கள் நன்கு சிந்தனை செய்து செயலாற்ற வேண்டிய கட்டம் வந்துவிட்டது. அதாவது பார்லிமெண்ட் தேர்தல் நெருங்கிவிட்டது. தமிழ் பேசும் மக்கள் தமது கடந்துபோன அரசியல் வரலாறுகளையெல்லாம் நினைவுபடுத்திக்கொள்வது உண்மையான அரசியற் பாதையை நிலைப்படுத்த பெரிதும் உதவியாக இருக்கும். அவ்வாறு நாம் தேர்ந்தெடுக்கும் மார்க்கத்தில் தமிழ் பேசும் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டியது மிக அவசியமாகும். தமிழினம் ஒரு தாபன முறையிலே, கொள்கை அடிப்படையிலே ஒன்றுபட்டு கட்டுப்பாடாகத் தமது குறிக்கோளை முன்வைத்து நடக்கத் தவறிய காரணத்தால் தமிழினத்தின் அரசியல் ஆரம்பத்திலேயே பாழடைந்துவிட்டது என்பதை நாம் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. எமது தவறுகளை நாம் நினைவு படுத்துவது, இனிமேலும் அவ்வாறான தவறுகளைச் செய்யாது எமது உரிமையைப் பெறுவதற்கு ஏற்ற தோர் பாதையில் செல்வதற்கு ஏதுவாக இருக்கும். டொனமூர்த்திட்டம் சிறுபான்மைத் தமிழினத்துக்குப் பாதகமாகக் காரியங்களைச் செய்துவிட்டது.

இவ்வாட்சி முறையில் அரசியல் அதிகாரங்கள் முழுவதும் பெரும்பான்மையினரின் கையில் கொடுக்கப்பட்டன. தம்முள் வேறுபட்ட தமிழ்ப் பிரதிநிதிகள், இதனை எதிர்த்தார்கள். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இங்கிலாந்து சென்று இத்திட்டத்தை எதிர்த்து வாதாடிக்கொண்டிருந்தார். அவர்களின் பேச்சைக் கேட்டு, உண்மையை உணர்ந்துகொண்டிருக்கும் நேரம் இங்குள்ள மற்றைய தமிழ்ப் பிரதிநிதிகள் அத்திட்டத்துக்கு ஆதரவு கொடுத்தார்கள்.

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## ஒன்று பட்டு உரிமை பெறுவோம்

தமிழினத்தின் உரிமைகளைப் பெற வேண்டுமானால் கொள்கையில் கட்சியில் ஒழுங்குமுறையாகக் கட்டுப்பட்டிருக்கவேண்டியது மிக அவசியம் என்பதை நாம் எப்பொழுதாவது மறந்து விடலாகாது. பின்னர் அத்திட்டப்படி நடைபெற்ற தேர்தலில் அத்திட்டத்தை ஆதரித்தவர்களை எல்லாம் புறக்கணித்து திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தைத் தலைவராகக் கொண்ட தமிழ்க் காங்கிரசைத் தெரிவு செய்தார்கள். இக்கட்சியின் கொள்கை சோல்பரி அரசியல் முறையை நீக்குவதே ஆகும். ஆனால் துரதிஷ்டவசமாக காங்கிரஸ் ஆளும் கட்சியோடு சேர்ந்து கொண்டது. எனவே, அக்கட்சியிலுள்ள ஒரு சிலர் தாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படியே நடக்க வேண்டும் என்பதை உணர்ந்து அக்கட்சியில் இருந்து பிரிந்தார்கள். தமிழரசுக் கட்சியை (சமஷ்டிக் கட்சி) நிறுவினார்கள். இன்று வரை தம் கொள்கையில், குறிக்கோளில் பிசகாதது இக்கட்சியேயாகும்.

எமது இனத்தின் உரிமைகளைப் பெறுவது ஒரு சுலபமான காரியமன்று. அது தமிழ் பேசும் மக்களின் ஓயாத உழைப்பினால் தான் கைகூடும். மற்றைய நாடுகள்—இனங்கள் தத்தமது உரிமைகளைப் பெறுவதற்கு எவ்வளவு தூரம் அரும்பாடுபட்டுள்ளன என்பதை எமக்குச் சரித்திரம் சொல்லுகின்றது.

தமிழ் பேசும் மக்கள் தமது அரசியற் கருத்தை மீண்டும் நிலைநாட்டவேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கின்றார்கள். திரு. சுந்தரலிங்கம் மூன்று வழிகளைச் சொல்லி தமிழ் பேசும் மக்கள் எதை ஏற்றுக்கொள்ளப் போகின்றார்கள் என்று கேட்டிருக்கின்றார். முதலாவது, இன்றைய ஒற்றை ஆட்சியில் மந்திரிப் பதவிகளைப் பெற்று சலுகைகளைப் பெறுவது. இரண்டாவது, இரு இன மக்களும் இணைந்து வாழ்வதற்கு ஏற்ற கூட்டாட்சியை ஏற்படுத்துவது. மூன்றாவது, தனித் தமிழ் நாட்டை ஏற்படுத்துவது. இம்மூன்றில் எது எமக்குச் சரி என்பதை இத்தேர்தல் மூலம் வெளிப்படுத்த வேண்டுமாம். ஒற்றை ஆட்சியில் சேர்ந்துழைப்பது எம்மினத்தை முற்றாக அழித்துவிடும் என்பதை யாவரும் நன்குணர்ந்துள்ளார்கள். கூட்டாட்சியா, தனிநாடா? இதை நிதானிப்பது மிகவும் சுலபமானது. 'கூட்டாட்சி ஏற்படாத இறுதி முடிவில் தனிநாடு கோருவதைத் தவிரவேறு வழி இல்லை' என்று எமது காலஞ்சென்ற தலைவர் வன்னியசிங்கம் அடிக்கடி சொல்லி இருக்கின்றார். நமக்கு ஏற்பட்டிருக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் நிவர்த்திப்பதற்கு ஒரு உண்மையான வழியை கூட்டாட்சிமூலம் நாம் அடையலாம். இங்கு வாழும் இரு இனங்களும் தத்தமது மொழி, கலை, கலாச்சாரம் பண்புகளையெல்லாம் பாதுகாத்து ஐக்கிய இலங்கையை உருவாக்கலாம் என்பதே கருத்து. இதுதான் இரு இனத்துக்கும் நேர்மையான வழி. இது நிலைக்கவில்லை என்றால் நாம் தனியாட்சி புரிவது முறையாகும். இவற்றை சமஷ்டிக் கட்சி ஒப்புக்கொள்ளும்போது சமஷ்டியா? தனிநாடா? என்றபிரச்சினை தேவையில்லாதது.

ஆகவே தமிழினத்தின் உரிமைகளைப் பெறும் வரையில் தமிழ் பேசும் மக்கள் யாவரும் கொள்கையில் — கட்சியில் ஒன்றுபட்டு கட்டுப்பாடாக ஒரே நோக்கோடு போராட வேண்டியது அவசியமாகும். தமிழினத்தின் உரிமைகளைப் பெறுவதே எமது தலையாய கடமையாகும்.

**தி. பஞ்சாட்சரம்.**

மண்டைதீவு.

## தமிழரும் ஆசார சீலங்களும்

சென்றவார "ஈழநாடு" இதழில் இந்துக்களுக்கென ஓர் இந்து பல்கலைக் கழகம் அவசியமென வற்புறுத்தி கொழும்பு நேயர் யூ. தம்மஜோதி என்ற பௌத்த பிக்கு எழுதிய கடிதத்தை வாசித்துப் பேருவகை கொண்டேன்.

திருக்கோணமலை தமிழ் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானம், சட்டம், வைத்தியம், பொருளாதாரம் முதலிய துறைகளில் மேல் படிப்பு படித்து பட்டம் பெறுவதற்கான வசதிகள் செய்யப்படலாம். இதில் தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர் எவரும் தாராளமாகச் சேர்ந்து கல்வி பயிலலாம். ஆனால் தமிழரின் புராதன பண்பாட்டையும் சைவ ஆசாரத்தையும் பேணி வளர்ப்பதற்கு ஓர் இந்து பல்கலைக் கழகம் தனித்தியங்க வேண்டும்.

இக்காலத்தில் எம் கண்ணெதிராகவே தமிழர் பெருமையுடன் கடைப்பிடித்து வந்த பழக்க வழக்கங்களும், ஆசார சீலங்களும், வாழையடி வாழையாக வந்த பண்பாடுகளும் பொடி பொடியாகிப் போவதைக் கண்ணீர்த் திரைக்கூடாகக் காண்கிறோம். இதுவரை, அதாவது இலங்கை சுதந்திர நாடாகும் வரை, மேனாட்டு மோகமும் உத்தியோகப் பற்றும் இவற்றைப் புறக்கணித்து நடத்தும்படி செய்துவிட்டன வென்று ஆறுதல் கூறி வந்தோம். இனிமேல் என்ன சாட்டுச் சொல்லப் போகிறோம்?

ஆலய உற்சவங்களுக்குப் போவது மதியீனம் என்று இக்கால வாலிபர்களும் மங்கையரும் கருதுகின்றனர். இல்லங்களில் செய்ய வேண்டிய கிரியைகள் பலவற்றை மறந்துவிட்டோம். விரதம் அனுட்டிப்பது, வீட்டை மெழுகிக் கழுவித் தோரணம் கட்டுவது, விபூதி தரிப்பது—இவையெல்லாம் மறைந்து கொண்டே வருகின்றன. தமிழ் ஆசாரப்படி பிரேதத்தைப் பின் தொடர்ந்து வாசல் படிக்கப்பால் போகாத தமிழ்ப் பெண்மணிகள் இன்று மயானம் வரை போகிறார்களென்றால் சொல்லவும் வேண்டுமா?

இந்து பல்கலைக் கழகத்தை எதிர்ப்பவர்கள் உண்மையான தமிழர்களாயிருக்க முடியாது. ஒன்றில் அது அவர்களுடைய நிதானத்தைத் தளரச் செய்யும். அல்லது வேறு சக்திகள் இன்று நாட்டில் உலவுகின்றன என்றே கூறவேண்டும். பேணுவாரற்று மறைந்து போகும் தமிழ் ஆசாரங்கள் ஒரேயடியாக மூழ்கிப்போகாமல் தடுப்பதற்கு, இதுபோன்ற ஒரு கழகம் மிக மிக அவசியமானது. தமிழர்கள், யாழ்ப்பாணத்தவர்களாயினும் சரி, கொழும்புத் தமிழர்களாயினும் சரி, கீழ் மாகாண தமிழராயினும் சரி இந்த இயக்கத்துக்குத் தங்கள் பூரண ஆதரவையும் அளிப்பார்களென்று நம்புகிறேன்.

**வே. க. பொன்னம்பலம்.**

வட்டுக்கோட்டை

12-12-59.

# நகரசபைத் தேர்தல் முடிந்தது

## தலைவர் தேடும் படலம் ஆரம்பம்

**கிழக்குத் தபால் :: நமது நிருபர்**

மட்டக்களப்பு.

பட்டினசபை அங்கத்தவர் தேர்தலுக்கான வேலைகள் சென்ற ஒரு மாதமாகத் தொடர்ந்து நடை பெற்றன. குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தில் ஒரு மத குருவும், ஒரு கட்சியும் கடுமையான முயற்சிகள் செய்தன. பல ஆயிரம் ரூபாய்களைப் பலிவாங்கிவிட்டுத்தேர்தல்முடிவடைந்துள்ளது. மூன்று புது முகங்களும் ஏழு பழைய முகங்களும் நகரசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. புது நகரசபையில் நாலு ஆசிரியர்களும் ஒரு நியாயவாதியும், மூன்று தொழிலதிபர்களும், இரண்டு படமாளிகை உத்தியோகஸ்தர்களும் இடம் பெற்றுள்ளார்கள்.

இப்போது நகரசபைத் தலைவருக்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. திரு. ஜே. எல். திசவீரசிங்கம்; திரு. ஏ. எஸ். ரி. கனகசபை ஆகிய இருவருமே தலைவர் பதவிக்காகப் போட்டியிட விருக்கிறார்கள்.

### பார்லிமெண்ட் தேர்தல்

நகரசபைத் தேர்தல் முடிந்ததும் பார்லிமெண்ட் கலைக்கப்பட்ட செய்தி வெளியாகியுள்ளது. கட்சிகளும் தனிப்பட்டவர்களும் தேர்தலுக்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ளார்கள். முதன் முறையாக இடதுசாரிக் கட்சி அபேட்சகர்கள் மட்டக்களப்புப் பகுதியில் போட்டியிடுவார்களெனத்தெரிகிறது.

பார்லிமெண்ட் திடீரெனக் கலைந்தது பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

### மழையும் பயிரும்

கடந்த மாதம் தொடர்ந்து மழை பெய்தும் முகத்துவாரம் நேரத்தோடு வெட்டப்பட்டதால்பலஆயிரக்கணக்கான ஏக்கர்வயல்நிலம்உப்புவெள்ளத்திலிருந்து தப்பியுள்ளது. மழை தொடர்ந்து பெய்தமையால் பயிர்கள் செழிப்பாக வளர முடியாமற் போய்விட்டது.

இன்னும் வெள்ள பயம் மக்கள்மனத்தைவிட்டுநீங்கவில்லை. அரசாங்கம் வெள்ளத்தால் பஞ்சமேற்படாது தடுக்கப் போதிய உணவுப் பொருட்களைச் சேமித்தற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### புதிய அரசாங்க அதிபர்

நீண்டகாலத்தின் பின் ஒரு தமிழர் இம்மாகாண அதிபர் பதவியை ஏற்றுள்ளார். அவர் தான்விற்பனை விருத்திக் கொமிஷனராகவிருந்த திரு. பி. ஆர். தேவராஜன். இவர் முன்னரே இப்பகுதியில் கடமையாற்றியவராதலால் இம்மாவட்ட மக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

# திருமலையில் சுகாதாரப் பணி

## தேர்தல் ஆயத்தங்களில் மாற்றம்

— நமது நிருபர் —

அனுராதபுரம்.

திருக்கோணமலைப் பகுதியை அனுராதபுரச் சுகாதாரப் பிரிவுடன் இணைத்த பின்னர் அனுராதபுரச் சுகாதார அதிகாரிகள் அப்பகுதியில் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்துள்ளனர். சமீபத்தில் திருக்கோணமலைக்கு அருகில் உள்ள உப்பு வெளியில் அர்ச். சூசையப்பர் குரு மடத்திலும். சிவானந்த அனாதை ஆசிரமத்திலும், கந்தளாய் வான் ராஸன் கொலனியிலும் சுகாதார வகுப்புக்கள் தொடங்கப் பெற்றன.

சூசையப்பர் குரு மடத்தில் சுகாதார வகுப்புக்களைத் தொடக்கி வைத்த பிரதேச சுகாதாரப் பரிசோதகர் திரு. நவநாயகம் தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:

"சமயத் தலைவர்களுக்கு நாட்டுக்குச் சேவை செய்யும் பெரும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அதைப் பயன் படுத்தி மக்களது சுகாதாரத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அதற்கு முன்னர் சுகாதாரக் கல்வி பெறக் கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது உங்கள் கடமையாகும்."

அதன் பின்னர் சிவானந்த ஆசிரமத்திலும் வான் ராஸன் கொலனியிலும் சுகாதார வகுப்புக்களை அனுராதபுரச் சுகாதாரப் போதனாசிரியர் திரு. எம். கதிரவேலு நடாத்தினார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கு மாகாணங்களில்

## 21 தேர்தல் தொகுதிகள் 24 பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம்.

1960ஆம் ஆண்டு மார்ச் 30-ந்திகதி புதியபார்லிமெண்ட் கூடும் பொழுது, 151 மக்கள் பிரதிநிதிகள் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள். இவர்களுடன் 6 பேர் நியமிக்கப்படலாம். இலங்கைப் பார்லிமெண்டில் இதுவரை 95 பிரதிநிதிகளே இருந்துவந்தனர்

இவ்வாண்டு தொடக்கத்திலே இலங்கையின் குடிசன மதிப்பிற்கிணங்க புதிய பார்லிமெண்ட் தேர்தல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்கென அரசாங்கத்தால் திரு. வால்டர் தல்கொடப்பிட்டியாவின் தலைமையில் மூவரடங்கிய ஒரு தொகுதி நிர்ணயக் கொமிஷன் ஏற்படுத்தப்பட்டது.

இந்தக் கொமிஷனின் சிபார்சின் பேரில் 75,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில்126அங்கத்தினரையும் 1000 சதுர மைலுக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையிலே மேலும் 25 பிரதிநிதிகளையும் தெரிவு செய்ய முடியும்.

புதிய தொகுதிகளை நிர்ணயம் செய்யும்பொழுது, பிரஜா உரிமை உள்ளவர்களின் தொகையை மாத்திரம் கணக்கிடாது, பிரஜா உரிமை இல்லாமலிருப்பவரின் தொகையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படியில்லாவிட்டால் கண்டிப் பிரதேசத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை மிகவும் குறையும்.

தகுந்த அளவு சிறுபான்மைச் சமூகத்தினர் வாழும் சில பகுதிகளில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைத்தெரிவு செய்வதற்கும் இத்தொகுதி நிர்ணயக் கொமிஷன் வகை செய்துள்ளது.

### தமிழர்

தமிழர் நாடெங்கணும் பரவியிருப்பினும் இவர்களுக்காக வடமாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியவற்றைத்தவிர வேறெந்தப் பகுதிகளிலும் தனித் தொகுதிகள்ஏற்படுத்தப்படவில்லை.

கிழக்கு மாகாணத்தில் முன்னர் நான்கு தமிழ்ப் பிரதிநிதிகளையும், மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

புதிய நிர்ணயத்தின் பிரகாரம் இப்பகுதிகளிலிருந்து, பதினொருபிரதிநிதிகள்தெரிவு செய்யலாம். இங்கு முஸ்லிம்களுக்காக மூன்று தொகுதிகளும், தமிழருக்கென மூன்று தொகுதிகளும் மேலும் இரண்டு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யக்கூடிய இரட்டைத் தொகுதியும் இடம் பெறுகின்றன. அவையாவன:

| | |
|---|---|
| திருக்கோணமலை | 1 |
| மூதூர் | 2 |
| கல்குடா | 1 |
| மட்டக்களப்பு | 2 |
| அம்பாறை | 1 |
| பதுரிப்பு | 1 |
| கல்முனை | 1 |
| நிந்தவூர் | 1 |
| பொத்துவில் | 1 |
| | 11 |

இந்தப் பிரிவின்படி தமிழரும், முஸ்லிம்களும் ஐவ்வைந்து பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முடியும்.

தமிழர் கொழும்புப் பகுதியில் சிற்சில இடங்களில் சேர்ந்து வாழ்ந்தாலும், தனியாக ஒரு தொகுதி பெறக்கூடிய அளவிற்கு இருக்கவில்லை.

ஆனால் இதே நிலையிலேயே முஸ்லிம்களும் இருந்தாலும் சில இடங்களில் இவர்களுக்குத்தனிப்பிரதிநிதியைத்தெரிவு செய்யக்கூடிய அளவிற்குத் திரண்டுள்ளனர். அவ்விடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்துவத் தொகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவை கொழும்பு மத்திய தொகுதி, மட்டக்களப்பு, மூதூர், அக்குறன ஆகிய தொகுதிகளாகும்.

### தாழ்த்தப்பட்டோர்

தொகுதி நிர்ணயக் கொமிஷனர், தாழ்த்தப்பட்டோருக்கெனப் பிரத்தியேகமாகத் தொகுதிகளை ஏற்படுத்துவதை ஏற்கவில்லை. இது 'தாழ்த்தப்பட்டோர்' என்று கூறப்படுவோரை அதே நிலையில் வைத்திருக்க உதவுமென அவர்கள் கருதினர். ஆனால், 'தாழ்த்தப்பட்டோர்' எனப்படும் சமூகத்தினருக்கு, சிங்கள, தமிழ்த் தொகுதிகள் இரண்டிலும் தகுந்த அளவுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய வகையில் தாம் தொகுதிகளைப்பிரித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

### வடக்கிலும் கிழக்கிலும்

வடமாகாணத்தில் 13 தொகுதிகள் வகுக்கப்பட்டுள்ளன. இதில் வவனியா, மன்னர் ஆகிய தொகுதிகளும் சேருகின்றன. வடமாகாணத் தொகுதிகள் எல்லாம் ஒரே

(6ஆம் பக்கம் பார்க்க)

மாநகரசபை மாதாந்தக் கூட்டம்

# 'படமுடியா தீனித் துயரம்'

## பாலங்களின் ஓலம்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணத் தெருக்களின் அலங்கோல நிலை சென்ற பல வருடங்களாக உலகப்பிரசித்தி பெற்று வந்தது. இன்று அது கொஞ்சம் தரம்குறைந்து இலங்கைப் பிரசித்திபெற்றதாய் விளங்குகிறது! யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிராமப்பகுதிகளைத்தான் விட்டுவிடுவோம். பட்டினத்திலுமா இந்த அலங்கோலம்? எத்தனையோ நூற்றூண்டுகளுக்கு முன்பு, கார்களும் லொறிகளும் 'மலைவிழுங்கி' ட்ராக்டர்களும் இல்லாத அந்தப்பொற் காலத்தில்அமைக்கப்பட்ட குறுகிய வீதிகள் நெருக்கடி தாங்க மாட்டாமல் தவிக்கின்றன. மாட்டு வண்டிலைத் தாங்குவதற்கு கட்டப்பட்ட பாலங்கள் லொறிகள் ஏறி மிதிக்கும்போது 'படமுடியா தினித்துயரம்' என்று கூறித் தலை குனிந்து சரிந்து விடுகின்றன. மழை தூறிவிட்டால் சேறும் சகதியும் பொட்டுப் பொட்டாகக் குட்டைகளும். காலையில் புத்தாடை உடுத்தி அலங்கரித்துக் கொண்டு பள்ளிக்கூடம் செல்லும் இள நங்கையர் மாலையில் வீடு திரும்பும்போது மோட்டார் வாகனங்கள் தெளித்த சேற்றுச் சித்திரங்களோடு வருகின்றனர். மழை விட்டு ஒரு நாள் வெய்யில் காய்ந்தால் சேறெல்லாம் தூசியாய்மாறிக் கண்களையும் மூக்குகளையும் 'கப்'பென்று அடைத்து விடுகிறது. கால் நடையாகச்செல்லும் பாதசாரிகளுக்கென்று அமைக்கப்படும் 'பேவ்மென்ட்' முழு யாழ்ப்பாணத்திலும் ஆக ஒரே ஒரு வீதியில் தான் காணப்படுகிறது. சனத்தொகையும் நாகரிகமும் வளர வளரப் போக்குவரத்து வாகனங்களின் தொகையும் நாளொருகாராயும் பொழுதொரு 'டக்ஸி'யாயும் வளர்ந்துகொண்டு வருகிறது. இந்த வாகனங்களின் தொகைக்கேற்றூற்போல தெருக்களும் அடிக்கடி பழுதுபார்க்கப்பட்டுச் சீரான நிலையில் இல்லாவிட்டால், மேற் கூறிய கோளாறுகள் வர வர மோசமாகும்.

### மேலிடத்து உதவி...

கஷ்டம் தாங்க முடியாத பொது மக்கள் நகர பிதாக்களிடம் முறையிடுவார்கள். நகர சபையென்ன செய்வது, பாவம்! 'குழவி தாய் முகம் நோக்க, தாய் என் முகம் நோக்க, யான் நின் முகம் நோக்கி வந்தனன்' என்றவாறு நகரசபையும் மேலிடத்து உதவியையேநாடும். அதாவது, மத்திய அரசாங்கத்தின் உதவியை நாடுவார்கள். நகர சபைக்கூட்டங்களில், தீர்மானத்துக்குப்பின் தீர்மானமாக நிறைவேற்றித்தள்ளி மேலிடத்துக்கு அனுப்புவார்கள். இனி மேலிடம் திருவுளங்கொண்டபோது கண்டுகொள்ளுங்கள்!

### அற்புதமான காட்சி

பட்டினத்திலே முட்டாசுக் கடைச் சந்தி தெரியுமல்லவா? அதுதான் காங்கேசன்துறை வீதியும் மானிப்பாய் வீதியும் சந்திக்குமிடம். சில வருடங்களுக்கு முன்பு இச்சந்தியில் வந்துகொண்டிருந்த ஒருலொறி எக்கச்சக்கமாக வாகனங்கள் நாலு புறத்தாலும் வந்துவிடவே வேறு வழியில்லாமல் பெருந்திகிலுற்று எதிரேயிருந்த கடைக்குள் தஞ்சம் புகுந்துவிட்டது. கடையும் அதை அன்புடன் வரவேற்கவே கடைக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டன. ஆனலும் அது முற்றுகச் சாகவில்லை. இன்றும் அது இருந்த இடத்திலேயே கைகால் ஒடிந்துபோய்ப் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறது. இவ்வற்புதமான காட்சியை இன்றும் யாராவது பார்க்கலாம். கட்டணம் தேவையில்லை. (உல்லாசப் பிரயாணிகள் வழிகாட்டி நூல் தயாரிக்கும் யாழ்ப்பாண மேயர் இதை மறந்துவிடக் கூடாது.)

### எதிர்ப்பில்லை

சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாநகரசபைப் பிதாக்கள் ஒன்றுகூடி, மேலே கூறியவாறு, ஒன்றுக்குப்பின் ஒன்ருக 15 தீர்மானங்களை நிறைவேற்றித் தள்ளினர்கள். ஒன்றையாவது எவரும் எதிர்க்கவில்லை. எல்லாம் ஏகமனதாக நிறைவேறின. (யார் சொன்னது தமிழர்களுக்குள்ளே ஒற்றுமை இல்லையென்று?) இந்தக் கூட்டத்தில், மதகுகள் வடிகால்களைப் பழுதுபார்த்தல், பண்ணையிலிருந்து நாவாந்துறைக்குப் போகும் வீதியை அகலித்துத் தார் ஊற்றிச் செப்பனிடுதல், காங்கேசன்

[6ஆம் பக்கம் பார்க்க]

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

ஏகாதிபத்திய ஆட்சி இலங்கையில் நடைபெற்றபோது மலைநாட்டுத் தமிழ் மக்கள் நாயிலுங் கேடாக மதிக்கப்பட்டனர். இப்போது நிலைமை சீரடைந்து வருகின்றதாயினும் கல்வித்துறையில் அவர்கள் முன்னேறுவதற்குச் சந்தர்ப்பங்கள் மிக மிகக் குறைவென்றே கூறவேண்டும். அங்குள்ள தமிழ் மாணவர்கள் பலர் விவேகம் மிகுந்தவர்கள். ஆனல் பெற்ருேரிடம் போதிய பணவசதி இல்லாத காரணத்தால் அவர்கள் தொடர்ந்து படிப்பதில்லை. இதனல் மலைநாட்டுத் தமிழ்மக்களின் கல்வி முன்னேற்றம் ஓரளவுக்குத் தடைப்படுகின்றது. இந்த வில்லங்கத்தை யறிந்த சில தமிழ்ப் பெரியார்கள் மலைநாட்டுத் தமிழ் மாணவர்கள் சிலர் யாழ்ப்பாணத்துக் கல்லூரிகளில் இலவசமாகக் கல்வி பயில்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். இங்குள்ள சில கல்லூரிகள் அம் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளித்து வருகின்றனவாயினும் மலைநாட்டுத் தமிழ் மாணவர்களின் தொகை மிகக் குறைவு.

சென்ற சனிக்கிழமை நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் கூட்டமொன்றில் மலைநாட்டுத் தமிழ் மாணவர்களுக்கு இங்குள்ள கல்லூரிகள் இந்த உதவியை அடுத்த வருடமும் செய்யவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 'இந்த வருடம், அடுத்த வருடம்' என்றிராது இந்த உதவி தொடர்ந்து நடைபெற்று வரவேண்டுமென்பதே பதுமனின் விருப்பமாகும். அத்துடன் மட்டக்களப்பு, திருக்கோணமலைப் பகுதிகளில் உள்ள சில கல்லூரிகளிலும் அம்மாணவர்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைக்க வேண்டும். தமிழ்ப் பிரமுகர்கள் நினைத்தால் கொழும்பிலுள்ள சில கல்லூரிகளிலும் மலைநாட்டு மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்க முடியும். எல்லாத்தானங்களிலும் வித்தியாதானமே சிறந்ததாகையால் தமிழ் பேசும் மக்கள் இத்துறையில் மிகுந்த கவனம் செலுத்துவார்கள் என்பதிற் சந்தேகமேயில்லை.

### விசர் நாய்கள்

விடுகாலிமாடுகளின் சண்டித்தனத்தைப் பற்றிச் சென்றவாரம் இங்கு எழுதியதைப் படித்தவர்கள் அதனை அப்படியே நறுக்கி மாநகரசபை அங்கத்தவர்கள் சிலருக்கு அனுப்பி வைத்தனரெனக் கேள்வி. ஐயோ! அந்தமாடுகளின் கதியாதாகுமோ? இவ்வாரம் நாய்கள் வந்து 'வள் வள்' என்று குலைக்கின்றன. குலைக்கிற நாய் கடியாதென்பது ஏதோ உண்மைதான். ஆனல் இந்த விசர் நாய்கள் இருக்கின்றனவே, அவை மெதுவாக வந்து தங்கள் பற்களைப் பதிய வைத்து விடுகின்றன. விசர் நாய்க்கடியாற் சமீபத்தில் ஆறு பேர் வரை உயிர்நீத்தனர் என யாழ்ப்பாணத்து மரண விசாரணை அதிகாரி மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்திருக்கின்ருர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள உயர்தர மருந்து கூட விசர்நாய் கடித்த ஒருவருக்கு உயிர்ப்பிச்சை அளிக்க முடியாது போயிற்றே என இவர் கவலையுறுகின்ருர். விசர் நாய்களால் ஏற்படும் ஆபத்தை அதிகாரிகள் இன்னுந் தான் உணராமல் இருப்பது ஏனே? விடுகாலி மாடுகள் பாட்டைசாரிகளுக்கும் மோட்டோர் சாரதிகளுக்கும் கொடுக்கும் தலையிடியைத் தாங்கினலும், விசர் நாய்களின் கோரப் பற்கள் உயிரையே வாங்கி விடுகின்றனவே!

### அரசியல் விஷ(ய)ம்!

விசர் நாய்களைப் பற்றிப் பேசும்போது ஈழவள நாட்டிலே கொதித்துக் கொந்தளிக்கும் அரசியல் விஷம் நினைவுக்கு வருகின்றது. நாட்டின் பிரதமர் ஒருவரையே இவ்விஷம் கொன்று தொலைத்து விட்டதென்ருல் சாமானிய வாக்காளர் என்ன கொடுமைக்குள்ளாவார்களோ! மூக்கைப் பிடித்தால் வாயைத் திறக்கத் தெரியாத இளம் மட்டங்கள் எல்லாம் அரசியல் பேசித்திரியும் காலம் இது. ஆம், நாடு இப்போது அவ்வளவாக முன்னேறியிருக்கின்றது. இந்த முன்னேற்றம் அவர்களின் சுய புத்தியை மழுங்கச் செய்திருப்பதுடன் 'தமிழன் என்ருெரு இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு' என்ற சிறப்பையும் மறக்கச் செய்து வருகின்றது. தமிழ்ப் பெண்மணிகள் தாமும் தமக்குரிய தனிப் பண்பை இழந்து வருகின்றனர் என்ற கவலை தமிழ்த் தாய்க்குப் பெரிதும் உண்டு. ஆனல் அப் பெண்மணிகளைப் பார்த்து 'ஏன் உங்களுக்கு இந்த வேலை?' என்று கேட்டால் அவர்கள், "நாங்கள் தமில் வலர்க்கிரோம்" என்று கத்துகிருர்கள்

### அம்மா பசிக்குதே....!

அரசியல் வாதிகளுக்கு 'வெற்றி' தான் முக்கியம். இதனை அறிந்தே சில கட்சித் தலைவர்கள் பெண்மணிகளைத் தேர்தலிற் போட்டியிடச்செய்து வெற்றி ஈட்டப் பார்க்கின்றனரோ, என்னவோ.' திருமதி கோமதி வன்னியசிங்கம் கோப்பாய் இடைத் தேர்தலுக்குப் போட்டியிடச் சம்மதித்தார். பின்னர் புதிய பொதுத் தேர்தல் திடுதிப்பென்று வந்ததும் தமது முடிவை மாற்றி, வீட்டிலேயே இருந்து கொள்வதெனத் தீர்மானித்து விட்டார். திருமதி சிரிமாவோ பண்டாரநாயக்காவிடமும் அரசியற் பிச்சை கேட்டு, இழந்த பெருமையை மீண்டும் பெற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் படாதபாடு பட்டார்கள். அம்மையாரிடமும் அவர்களுடைய பாச்சா பலிக்கவில்லை. அரசியற் பசியால் தவித்து 'தாயே பிச்சை தா என்று கெஞ்சுபவர்கள் பின்னர் ஒரு சமயம் மிஞ்சிவிட்டாலோ என்ற பயம். இதனை அப்பெண்மணிகள் நேரகாலத்துடன் அறிந்து கொண்டார்கள். அந்த மட்டில் அவர்கள் கெட்டிக்காரர்கள்.

### புற்றீசல்கள்

புத்தம் புதிய அரசியற் கட்சிகள் புற்றீசல்களைப் போலக் கிளம்புகின்றன. நாட்டுக்கு நாலு நல்ல கட்சிகள் இருத்தல் அவசியம் தான். ஆனல் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் அத்தனை பேரும் தலைக்கொரு கட்சியை உருவாக்கினல் இது எங்கே போய்முடியுமோ தெரியவில்லை. சமீபத்தில் கண்டியில் தோன்றியுள்ள கட்சியானது கண்டிச் சிங்களவரின் அரசியல், பொருளாதார உரிமைகளைக் காப்பாற்றப் போவதாக 'டமாரம்' அடிக்கின்றது. வீட்டுக்கொரு தலைவரும் கிராமத்துக்கு ஒரு கட்சியும் முளைத்தெழுந்தால் நாடு உருப்பட்டாற் போலத்தான்!

### அரசியலும் எழுத்தாளரும்

அரசியலுக்கும் எழுத்தாளர்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஒரு சில எழுத்தாளர்கள் அரசியல் வானில் மின்னும் நட்சத்திரங்களாக ஒளி வீசுவதையும் வேறு சிலர் அரசியல் அரங்கில் ஏறித் தோல்வியடைவதையும் நாங்கள் பார்த்து வருகின்ருேம். சமீபத்தில் நடைபெற்ற மூதூர் கிராமச்சங்கப் பொதுத் தேர்தலில் ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான திரு. வ. அ. இராசரத்தினம் வெற்றி யீட்டியிருக்கின்ருர். தமிழ் மக்கள் பிரதேச சுயாட்சியைப் பெறலாம் என்பது திரு. வ. அ. இராசரத்தினத்தின் கருத்து. இது சம்பந்தமாக அவர் தெரிவிப்பதாவது:

"காலஞ் சென்ற பிரதமர், பிரதேச சுயாட்சியை விரும்பியதாலும், ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர்ந்த மற்றைய அரசியற் கட்சிகள் பிரதேச சுயாட்சியை வற்புறுத்துவதாலும், தலதாபன அமைச்சர் திரு. மெதிவாக்கே அவர்கள் சமீபத்தில் யாழ்ப்பாண மாநகர சபைக்குக் கொடுத்த வாக்குறுதியாலும், இக்கோரிக்கையில் நாம் வெற்றியடையலாம் என்றே நம்புகின்றேன்."




## 14. 'வட்டி'

(சென்றவாரத்தொடர்ச்சி)

அவர்களின் தாழ்வுக்கெல்லாம் குடிதான் காரணம் என்று எண்ணினான் வேலாயுதம். இப்போது மட்டுமல்ல நான்கு வருடங்களுக்கு முன்னரேயே அவன் அப்படித்தான் எண்ணினான். அதனாற்தான் கள்ளுத் தவறணைகளும், சாராயத் தவறணைகளும் பூட்ட வேண்டும் என்று 'வோட்டுப்' போட்டபோது வேலாயுதம் சிரமத்தைப் பாராமல், ஒரு நாள் வேலையையும் விட்டுவிட்டு, இரண்டு மூன்று மைல் நடந்துபோய், தவறணைகளையெல்லாம் எடுக்க வேண்டும் என்று வோட்டுப் போட்டான்.

தான் அப்படிச் செய்தது முழுப் பிழை என்று இப்போது வேலாயுதம் எண்ணினான். ஆமாம். கொட்டியாபுரப்பற்றிலே தவறணைகள் இல்லாவிட்டால் என்ன? திருக்கோணமலைப் பட்டினத்திலே வேண்டிய அளவு சாராயம் இருக்கிறதே!

கொட்டியாபுரப்பற்றிலே சாராயத் தவறணைகளை எடுத்ததால் இப்போது ஒவ்வொரு வீடுமே ஒரு தவறணையாகப் போய்விட்டது. திருக்கோணமலையிலே பத்து ரூபாய் விற்கும் ஒரு போத்தல் சாராயம் மூதூரிலே பன்னிரண்டுரூபாய் விற்கிறது. மல்லிகைத் தீவிலே பதினான்கு ரூபாய் விற்கிறது. அவ்வளவுதான்!

தான் வோட்டுப் போட்டதினால்தானே பத்து ரூபாய் விலையான சாராயம் மல்லிகைத் தீவிலே பதினான்கு ரூபாய் விற்கிறது? என்று எண்ணினான் வேலாயுதம். இந்த அரசாங்கத்திற்கென்ன புத்தியில்லையா? இலங்கை முழுவதுமே சாராயம் கள்ளு விற்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வந்தால் என்ன? அப்படி வராவிட்டால் எவரும் குடிப்பதைத் தடுக்கவே முடியாது என்று முடிவு கட்டிக்கொண்ட வேலாயுதம் தனக்கு முன்னால் வேகும் வெயிலிலே, தம்மை மறந்து படுத்துக்கொண்டிருக்கும் இருவரையும் பரிதாபகரமாகப் பார்த்தான்.

ஒரு பெருமூச்சுவிட்டுக்கொண்டே எழுந்து சென்று அவர்கள் இருவருடைய சைக்கிள்களையும் தூக்கி வள்ளத்துள் வைத்தான். அதன்பிறகு மெதுவாகக் குனிந்து அவ்விருவரையும் புரட்டி எழுப்பினான்.

அவர்களில் நெட்டையன் எழுந்துவிட்டான். அவனுக்கு மயக்கமாக இருந்தாலும், அத்தனை மோசமான நிலையில் அவன் இல்லை. ஆனாற் குட்டையனை எழுப்பவே முடியவில்லை. எதெதையோ முனகிக்கொண்டும், அதப்பிய வார்த்தைகளைப் பேசிக்கொண்டும் புரண்டு புரண்டு படுத்தான்.

இதற்குள்ளாகத் தர்மலிங்க வாத்தியாரும் வந்துவிட்டார். இருவரும் சேர்ந்து குண்டுகட்டாக அவனைத் தூக்கி வள்ளத்துள் வைத்தார்கள். நெட்டையனும் வள்ளத்தில் தட்டுத் தடுமாறி ஏறிக்கொண்டான்.

வள்ளம் போய்க்கொண்டிருக்கையிலே வேலாயுதம் "பாருங்க வாத்தியார் இந்த ஆக்கள்ர கோலத்தை" என்று பரிதாபப்பட்டான்.

வாத்தியாரும் மிகவும் பரிதாபத்தோடு சொன்னார் "இந்தப் பழக்கத்தால்தானே ஊரே குட்டிச்சுவராப் போச்சு. பொன் விளைகிற காணிகளைக் கூடக் கடன்காரனுக்கு விற்றுப்போட்டு, இப்போ விற்ற வயலிலேயே வேலை செய்து வயிற்றைக் கழுவிக்கொள்கிறார்கள்".

"உண்மையாகத்தானா?" என்று கேட்டான் வேலாயுதம்.

"பின்னே என்ன? இங்கே கட்டைமாதிரிக் கிடக்கிற செல்லப் பிள்ளைக்குப் பத்து ஏக்கர் காணியிருந்தது. போன மாதந்தான் கடனுக்குவிலைபோயிற்று. விலைப்படாமல் என்ன செய்யும்? ஒரு போத்தல் இருபத்தைஞ்சு ரூபாயல்லவா?" என்றார் வாத்தியார்.

"இருபத்தைஞ்சு ரூபாயா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் வேலாயுதம்.

"ஆம்; வெட்டுக் காலத்திலே வாங்கிக் கொள்வதற்காக விதைப்புக் காலத்திலேயே ஒரு சாக்குக்குப் பதினைந்து ரூபாய் கொடுக்கிறார்கள் அல்லவா? ஆனால் வட்டிக்குக் கொடுப்பவன் அதைக் காசாகக் கொடுப்பதில்லை. பதினைந்து ரூபாய்க்கும் ஒரு போத்தல் சாராயம் கொடுக்கிறான். வெட்டுக் காலத்தில் ஒரு சாக்கு நெல் ஒரு போத்தலுக்கு. அதாவது பத்து ரூபாய் பெறுமதியான ஒரு போத்தல் சாராயத்திற்கு மூன்றுமாசத்திற் கிடையில் இருபத்தைந்து ரூபாய் பெறுமதியான ஒரு சாக்கு நெல் கொடுக்க வேண்டும். இப்படியாக விதைப்புத் தொடக்கம், சூடடிக்கு மட்டும் எத்தனை போத்தல் வாங்கினானோ அத்தனை சாக்கு நெல்லைக் களத்திலேயே அறைந்துவிட்டுப் போக வேண்டியதுதான்! அப்படியும் போதாமற்தான் எத்தனையோ பேர் வயலை விற்றுப் போட்டார்கள்" என்று ஆசிரியர் விரிவாக விளக்கியதைக் கேட்ட வேலாயுதம் அப்படியே இடிந்து போனான்.

இதற்குள் வள்ளம் அக்கரையை அடைந்துவிட்டது. தர்மலிங்க வாத்தியார் போய்விட்டார்.

மற்றைய இருவரும் கரையில் இறங்கித் தங்கள் சைக்கிள்களையும் உருட்டிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்தார்கள்.

வேலாயுதம் அவர்களையே வைத்த கண் எடுக்காமற் பார்த்துக்கொண்டிருந்தான்!

கடும் வட்டி வாங்கும் ஊனர்களின் செய்கையே நினைவாக இருந்ததினால், மீன்பிடியைப் பற்றி வாத்தியாரிடம் கேட்க இருந்ததையும் மறந்துபோய்ப் பார்த்துக் கொண்டேயிருந்தான். (தொடரும்)

## சிறுகதை எழுத்தாளர்களுக்கு

பண்பாடு, ஒழுக்கம், வாழ்க்கைநிலை ஆகியவற்றை செம்மையாக்கும் நோக்கத்துடன் எழுதப்பெறும் சிறுகதைகளை "ஈழநாடு" வரவேற்கின்றது. கதைகள் 'பூல்ஸ்காப்' தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் தாளில் ஒரு பக்கத்தில் மையினால் எழுதப்பெற்றுமிருக்க வேண்டும்.

### வாழ்க்கைச் சம்பவங்கள்

நாளாந்த நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்ட வாழ்க்கைச் சம்பவங்களையும் எழுத்தாளர்கள் எழுதி அனுப்பலாம். இச்சம்பவங்கள் இப்பத்திரிகையில் ஒரு பத்திக்கு (கலம்) மேல் அமையக்கூடாது.


'ஹென்றலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றலி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்றலி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.


## சத்தம் போடுங்கள்!

— க. கணேசலிங்கம் —

தொட்டிலிற் கிடந்த என் ஒரு வயது மகன் அழத்தொடங்கினான். அவன் சிறிது சத்தம் போட்டாலும் பொறுக்க மாட்டாத நான் அன்று அவன் 'வீர் வீர்' என்று அழுவதையும் விரும்பிக்கேட்டேன். ஏன்? இன்னும் நன்றாக உரத்து அழமாட்டானா என்று கூட எண்ணினேன். எல்லாம் ஓர் ஆராய்ச்சியின் நோக்கம் கொண்டுதான். பத்திரிகையில் 'சத்தத்திலிருந்து மின்சார சக்தியைப் பெறலாம்' என்று வெளிவந்திருந்த செய்தியே என்னை இவ்வித ஆராய்ச்சியில் இறங்கச் செய்தது.

'அழுதால் உன்னைப் பெறலாம்' என்று ஒரு அறிஞர் பாடியதாக எனக்கு ஞாபகம். இன்று கண்டு பிடிப்பதற்கு உதவுவதற்கான மூலப் பொருளை அன்றே அந்த முற்றுமுணர்ந்த மூதறிஞர்கள் கண்டு கொண்டார்கள்.

இந்த ஆராய்ச்சியில் நல்ல பயன் பெறக்கூடியது நம்நாடுதான். பாராளுமன்றம் முதற்கொண்டு, பதிந்த கொட்டிலில் வாழுகின்றோர் வரை இதற்குப் பெரும் துணைபுரிவார்கள் என்பது எனது நம்பிக்கை. ஆகவேதான் இந்த ஆராய்ச்சியில் நானும் ஈடுபட்டேன்.

வீதிகளிலே சத்தம்
போட வேண்டும்
வீடுகளிலே மின்சாரம்
பெருக வேண்டும்
சேதியெல்லாம் மின்சாரமாய்ப்
பேசவேண்டும்
சேர்ந்த ஒருவாயே உனை
வேண்டினேனே.

என்னை அறியாமலே இப்படி விசித்திரக் கற்பனை விரிந்தது.

'சப்தமே சகல சக்தியும்' என்பதற்கேற்ப என் வீட்டில் இனி சட்டி பானை எல்லாம் மின்சாரத்தால் இயங்கப்போகின்றன. ஏனென்றால் அவை இருக்கும் இடத்திலே தான் அதிகமான மின்சார சக்தி உற்பத்தியாகும் என்பது என் அனுபவ மூலம் நான் கண்டறிந்த உண்மை.

சில நாகரிகமடைந்த பெண்கள் கைகளுக்கு 'கிளவ்ஸ்' போடுவதுபோல் இனிமேற் சில பெண்கள் வாய்க்கு இவ்வித றப்பர் "கிளவ்ஸ்' போட வேண்டி வருமென எண்ணுகின்றேன். இல்லாவிட்டால் மின்சாரம் அவர்களைத் தாக்கி விடுமல்லவா?

தம்பா எனும் நாட்டிலுள்ள விஞ்ஞானி ரசல், இந்தச் சத்தத்தின் துணைகொண்டு பட்டரி இல்லாமல் கார்களையும் ஓட வைக்கலாம் என்று கூறியிருக்கின்றார். ஆகவே உதவாது என்று தள்ளப்பட்ட கார்களும் இனித் தெருவில் உலாவத் தொடங்கலாம். கணவனும் மனைவியும் வீட்டிலிருந்து சண்டை பிடிக்காமல் காருக்குள்ளேயே ஏறியிருந்து தம் வாய்ச் சண்டைகளுக்கு அதிக வாய்ப்புக் கொடுத்தால் கார் தன்பாட்டிலேயே ஓடத் தொடங்கிவிடும். தாம் இறங்க வேண்டிய இடத்தில் ஒருவர் விட்டுக்கொடுத்துச் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டால் ஓடிக்கொண்டிருக்கும் கார் உடனே நின்று விடாதா என்ன?

இது மட்டுமென்ன?

மேடைப்பேச்சாளர் 'மைக்' காரர்களிடம் போகத் தேவையில்லை. தாமே மேடையில் ஏறி சொன்மாரி பொழியத்தொடங்கியவுடன் மின்சாரமும் பொழியத் தொடங்கிவிடும். மற்றவர்களைத் தாக்கவும் இந்தச் சக்தியை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாமே!

'வில்லே ருழவர் பகை
கொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.'

என்று வள்ளுவன் இதை என்றோ அறிந்து கூறியது போலல்லவா படுகிறது. வில் மின்சார சக்தியை உற்பத்தி செய்யுமா?

இன்னும் இந்தச் சக்தி வரவேற்கப்பட்டால் 'சத்தம்

(13ஆம் பக்கம் பார்க்க)

உரிய வயது வந்ததும் சேவையிலிருந்து இளைப்பாறியவர்கள் தமக்குச் சேரவேண்டிய தொகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

# ஊழியர் சேம நிதி

## தொழிலாளருக்கு ஓர் அரு நிதி

— செ. தனபாலசிங்கம் பி. ஏ. —

ஊழியர் சேமநிதி வயது முதிர்ந்து இளைப்பாறிய காலத்தில் அன்றேல், நோய்வாய்ப்பட்டு உழைக்கமுடியாது தத்தளிக்கும் காலங்களில் உதவுவதோர் அருநிதியாகும். உழைத்தவன் உழைக்க முடியாத காலத்தில் தன்சொந்த வாழ்க்கைக்கு, அன்றேல் தன் குடும்ப வாழ்க்கைக்குப் பிறனொருவனில் தங்கியிராவண்ணம் காப்பாற்றுவதோர் அருமருந்தாகும். தான் உழைத்த காலத்தில் தன்னாற் சேமிக்கப்பட்ட நிதிகொண்டு தன் வாழ்க்கைப் படகைச் செவ்வனே ஓட்டுவதற்கு இந்நிதி வாய்ப்பளிக்கின்றது. ஆயின் தற்காலிகமாக ஏற்படுகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தையோ அன்றி நோயைத் தவிர்க்கவோ இந்நிதி பயன்படுத்தப்பட மாட்டாது. ஆணயின் ஐம்பத்தைந்து வயது நிரம்பிய பின்னும் பெண்ணயின் ஐம்பது வயது நிரம்பிய பின்பும் இந்நிதியைப்பெறுவதற்கு உரித்தாளராவார்கள். இலங்கையில் ஓய்வு பெறும் வயது ஆண்களுக்கு ஐம்பத்தைந்தும் பெண்களுக்கு ஐம்பதுமாய் அமைந்திருப்பதனாலேயே அவ்வாறு ஊழியர் சேம நிதியையும் அவ்வயதிற் பெறும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. இதனால், ஓர் ஆண் ஐம்பத்தைந்து வயதுக்கு மேலும் பெண் ஐம்பது வயதுக்கு மேலும் கடமையாற்றக் கூடாதென்பதும், மேற்கூறப்பட்ட வயதுக்கு மேல் ஊழியர் சேம நிதிக்குத் தொடர்ந்து உதவு தொகைகள் செலுத்த முடியாதென்பதும் கருத்தாகாது. ஒரு ஆண் ஐம்பத்தைந்து வயதுக்குமேலும் பெண் ஐம்பது வயதுக்கு மேலும் தொடர்ந்து சேவையாற்றினால், அவர்கள் அல்லது அவர்தம்மை வேலைக்கமர்த்தியவர் தொடர்ந்தும் உதவு தொகைகளைச் செலுத்தலாம்.

### உரிய வயதில்

உரிய வயது வந்ததும் சேவையிலிருந்து இளைப்பாறியவர்கள் தத்தமக்குச் சேரவேண்டிய தொகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம். ஆண்கள் ஐம்பத்தைந்து வயதிலும் பெண்கள் ஐம்பது வயதிலும் முதன் முதலாக இந்நிதியிற் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. உரிய வயது வந்தபோது வேலையிலிருந்து இளைப்பாறி, தனக்குச் சேரவேண்டிய பணத்தைப் பெற்றுக்கொண்ட ஒருவர் வேறொரு தொழிலில் அமர்வதற்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால், அவர் ஊழியர் சேமநிதியில் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார். நிரந்தரமாக நோயினாற் பீடிக்கப்பட்டு சேவையாற்ற முடியாத ஒருவர், இலங்கையை விட்டுப் பின்னொரு போதும் திரும்பிவர நோக்கமற்று வெளியேறும் ஒருவர், விவாகம் செய்து கொள்ளு முகமாகச் சேவையிலிருந்து விலகிக் கொள்ளும் பெண்மணி என்போர் தமக்குச் சேரவேண்டிய தொகையைக் குறிப்பிட்ட கால எல்லைக்கு முன்பே பெற்றுக்கொள்ளச் சட்டம் வாய்ப்பளிக்கின்றது. தற்காலிகமாக ஒருவர் வேலையில்லாமற் திண்டாடினால் அக்காலங்களில் அவர் ஊழியர் சேம நிதிக்கு உதவு தொகையைச் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. அவர் முன் செலுத்திய தொகை என்றென்றும் மத்திய வங்கியில் அவர் பேரில் அழியாச் சொத்தாக நிலைத்து வட்டி உழைத்துக் கொண்டேயிருக்கும். திரும்பவும் வேலை கிடைத்தவுடன் ஊழியர் சேம நிதிக்கு முன்போற் பணம் செலுத்தவேண்டும். ஆயின் அங்ஙனம் தற்காலிகமாக வேலையில்லாமல் வாழும்காலங்களில் நிதியில் ஒரு பகுதியையோ அன்றேல் முழுவதையுமோ பெற்றுக் கொள்வதும் சாத்தியமாகாது. தொழிலில் அமர்த்தியவர் ஒருவர் தன் சேவையில் இருக்கும்போது மட்டுமே பணம் செலுத்தவேண்டும். ஒருவர் சேவையிலிருந்து விலகியதும் அவரை வேலைக்கமர்த்தியவர் தொடர்ந்து உதவு தொகைகளைச் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. ஆயின் அவரைப் புதிதாக வேலைக்கமர்த்தியவர், அமைச்சரால் தமது தொழிலை அங்கீகரிக்கப்பட்டதெனப் பிரசித்தப் படுத்தப் பட்டதாயின் தொடர்ந்து உதவு தொகைகளைச் செலுத்தியே தீர வேண்டும். குறிக்கப்பட்ட வயதுக்கு முன்பதாக ஒருவர் இறந்துவிட்டால் அவரினால் நியமிக்கப்பட்டவர் பணத்துக்கு உரித்துடையவராவர்.

### ஆதரிக்கப்படும் தொழில்

ஊழியர் சேமநிதிக்கு உதவு தொகைகளைச் செலுத்துவதற்கு ஒருவர் ஆதரிக்கப்படும் தொழிலில் (Covered Employment) வேலைக்கமர்ந்திருக்க வேண்டும். இலங்கை அரசாங்க சேவை, உள்ளூர்ஆட்சிச்சேவை, மாநகர சேவை என்பன தவிர்ந்த ஏனைய அனைத்தும் ஆதரிக்கப்படும் தொழில்களாகும். ஓர் ஆதரிக்கப்படும் தொழிலிலுள்ள ஊழியர் ஒவ்வொருவருக்கும் அவர்களை வேலைக்கமர்த்தியவருக்கும் உதவு தொகைகள் செலுத்த வேண்டிய கடமைப்பாடு தொடங்கும் திகதி இதுவெனத் தொழில் அமைச்சரால் அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்படும். அந்நாள் தொடங்கியே அந்தத் தொழிலிலுள்ள ஊழியர்கள் தத்தம் ஊழியத்தில் நான்கு வீதமும், அவர்களை வேலைக்கமர்த்தியவர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊதியத்தில் ஆறுவீதமும் செலுத்தலாம். மேற்கூறப்பட்ட வீதங்களுக்கு மேலாகச் செலுத்த விரும்பும் ஊழியர்களும் அவர்களை வேலைக்கமர்த்தியவர்களும் தொழில் அதிபரின் அநுமதியோடு அவ்வாறு கூடிய வீதங்களில் உதவு தொகைகளைச் செலுத்தலாம். ஆனால், அங்ஙனம் கூடிய வீதம் ஒரு முறை செலுத்தத் தொடங்கினால் பின் எக்காரணம் கொண்டும் அதற்குக் குறைந்த வீதம் செலுத்த முடியாது. தொழிலாளியின் ஊதியத்தில் நான்கு வீதம் கழித்தெடுக்கப்பட்டு அத்தொகையுடன் தொழிலாளியின் ஊதியத்தில் ஆறு வீதத்தைத் தாமும் உதவி அத்தியட்சகர், ஊழியர் சேமநிதி, மத்தியவங்கி, கொழும்பு என முகவரியிட்டு வேலைக்கமர்த்துபவரினால் அனுப்பப்படவேண்டும். மத்திய வங்கியில் வெவ்வேறாக ஒவ்வொருவருக்கும் கணக்குகள் பதியப்பட்டிருக்கும். ஒவ்வொரு மாதமும் அனுப்பப்படும் ஊழியரினதும் வேலைக்கமர்த்துபவரினதும் உதவு தொகைகள் அவரவர்களின் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படும். ஒவ்வொரு வருட முடிவிலும் ஊழியர் ஒவ்வொருவருடைய பெயரிலும் இருக்கும் தொகை இவ்வளவு என அனைவர்க்கும் தனித்தனியே அறிவிக்கப்படும். மத்திய வங்கியில் இருக்கும் தொகைக்கு நூற்றுக்கு இரண்டரை வீதமாக வட்டி கணக்கிடப்படும். முதல் வருடத்தில் செலுத்தப்பட்ட தொகைக்கு வட்டி கணக்கிடப்படமாட்டாது.

உதவு தொகைகள் ஒருவருடைய மொத்தச் சம்பளத்திலேயே கணக்கிடப்படும். ஒருவருடைய மூலச் சம்பளத்துடன் எல்லாவிதமான படிகளும் சேர்ந்த தொகையே மொத்தச் சம்பளமாகும். எல்லாவிதமான படிகளும் என்ற அளவில் வாழ்க்கைப்படி உயர்ந்ததனால் கொடுக்கப்படும் வெளிநாட்டுப்

(10ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழரின் எதிர் காலப் பொருளாதாரம்: 3

# தென்னிலங்கைத் தோட்ட வருவாய்

## அளிக்கும் பொருளாதார மூல தனம்

— எஸ். எஸ். பிள்ளை —

இலங்கையின் தெற்கு, கிழக்குப் பகுதிகளில் மக்கள் வாழ்க்கைத் தரம் உயர்வாக இருப்பதற்கு, தென் இலங்கையின் தோட்டவருவாயே முக்கிய காரணமாகும். இது இலங்கை மக்களின் வாழ்க்கைக்குத்தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சக்தியையும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு வேண்டிய மூலதனத்தையும் உதவுகின்றது. அத்தோட்டங்கள் பெரும்பாலும் தொழில் தாபனங்களால்நடாத்தப்பட்டு ஏற்றுமதிப் பொருள்களையே உற்பத்திசெய்கின்றன.

தமிழ்மக்களின் பிரதேசமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் நெல் உற்பத்தியே முதன்மை ஸ்தானம் பெறுகின்றது. விபரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாண மாவட்டம் | 57,800 | ஏக்கர் |
| மன்னர் ,, | 35,500 | ,, |
| வவனியா ,, | 32,100 | ,, |
| மட்டக்களப்பு ,, | 151,000 | ,, |
| திருக்கோணமலை,, | 33,100 | ,, |
| மொத்தம் | 299,500 | ஏக்கர் |

இதில் ஒரு இலட்சம் ஏக்கர் நிலத்தில்தான் ஆண்டுக்கு இருமுறை பயிர்செய்யப் படுகின்றது. ஏனைய 2 இலட்சம் ஏக்கர் நிலமும் வரண்ட பிரதேசத்தில் இருப்பதால் இன்று அவை நெல் உற்பத்திக்குத் தகுதியற்றன. வருஷத்தில் 2¼ இலட்சம் ஏக்கர் நிலம் காலபோகத்திலும் 1 இலட்சம் ஏக்கர் சிறுபோகத்திலும் பயிரிடப்பட்டாலும் இப்பிரதேசத்தில் வசிக்கும் 10 இலட்சம் மக்களுக்கு வேண்டிய உணவைக்கூட விளைவிப்பது அரிதாக இருக்கிறது. காலபோக நெற்பயிரை விளைவிப்பதற்கு ஒவ்வோர் ஏக்கர் வயலுக்கும் 12 ஏக்கர் அடி உயர நீரும் சிறுபோகப் பயிர் உற்பத்திக்கு 7 ஏக்கர் அடி உயர நீரும் தேவைப்படுகிறது. இப்பொழுது தகுதியற்ற 2 இலட்சம் ஏக்கருக்கும் மேலும் இப்பிரதேசத்தில் விவசாயத்துக்கு ஏற்றதுமான 2½ ஏக்கர் இலட்சம் ஏக்கர் நிலத்துக்கும், நெல் உற்பத்திக்கு வேண்டிய நீர்த்தேக்கங்களை அமைப்பது எங்ஙனம்? மகாபராக்கிரமபாகு மன்னர் ஆட்சிகாலந் தொடக்கம் மகா கனம் தகநாயக்க ஆட்சிகாலம்வரைக்கும் 1 இலட்சம் ஏக்கர் வயல்களுக்கு வேண்டிய நீரையே சேர்த்து வைக்கக்கூடிய நீர்த்தேக்கங்களை அமைக்க முடிந்ததென்றால், மேலும் 4 1/2 இலட்சம் ஏக்கர் நிலத்துக்கு வேண்டிய நீரைச் சேர்த்துவைக்கக்கூடிய வசதிகளமைக்க எத்தனை நூற்றுண்டுகள் செல்லும்?

மேற்கூறிய 4 1/2 இலட்சம் ஏக்கர் நிலத்தில் இருபோக நெல் விளைவிக்க வேண்டுமாயின் 90 இலட்சம் ஏக்கர் அடி உயர நீர் தேவைப்படும். அதாவது மகாவலி கங்கையில் இரண்டு வருஷ காலத்தில் ஓடக்கூடிய நீர் ஒரு வருஷ வேளாண்மைக்குத் தேவைப்படும். ஆயினும் வெளிநாட்டு நிபுணர்கள் இந்த ஆற்றுநீரைத் தக்கபடி பயன்படுத்தினால் 2 1/2 இலட்சம்முதல் 3 இலட்சம் ஏக்கர்வரை சாகுபடி நிலம் பெறலாமென்றும், தாழ்ந்த விளைநிலங்களில்வெள்ளத்தைத் தடுக்கலாமென்றும், 2 இலட்சம் கில்லோ வாட் மின்சார சக்தியும் உற்பத்திசெய்யலாமென்றும் ஆலோசனை கூறுகின்றனர். இது பூர்த்தியாக எத்தனை வருடங்கள் ஆகுமோ? இதற்கான செலவு என்ன? இச்செலவை வேறுவழிகளில் பிரயோசனப்படுத்தினால் அதிக பலன் கிடைக்காதா?

இன்று உணவுப் பொருள் வேண்டுமாயின் பணந்தான் தேவை. சென்ற வருடத்தில் உலக ஜனத்தொகை 1.6% அதிகரித்திருந்தபோது உணவு உற்பத்தி 4% ஆக உயர்ந்துள்ளது. அதிக உணவு உர்பத்தி செய்யும் நாடுகளுக்குத்தான் இப்போது உணவுப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க நாட்டிலோ இப்பிரச்சினை மிகுந்த நெருக்கடி நிலையை உண்டாக்கியிருக்கிறது.

இலங்கையின் ஏற்றுமதி வருவாயில் மூன்றுவது இடத்தை (சுமார் 10% விகிதத்தை) வகிப்பது தெங்குப் பொருட்கள். இலங்கையில் 1 1/4 இலட்சம் ஏக்கர் நிலத்தில்தான் தென்னை உற்பத்தி செய்யப்பட்டாலும், அது வெளிநாட்டு வருவாயுடன் உள்நாட்டுத் தேவைகளுக்கும் சுமார் ரூ. 16,50,00,000 பெறுமதியான பொருள்களைக் கொடுக்கிறது. தமிழ்மக்கள் பிரதேசத்தில் இன்று தென்னை உற்பத்திசெய்யப்படும் நிலப்பரப்பு வருமாறு :

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் மாவட்டம் | 10,000 | ஏக்கர் |
| மன்னுர் ,, | 400 | ,, |
| வவனியா ,, | 8,000 | ,, |
| மட்டக்களப்பு ,, | 7500 | ,, |
| திருக்கோணமலை ,, | 3,600 | ,, |
| மொத்தம் | 29,500 | ஏக்கர் |

(தொடரும்)

உத்தரவாதமுள்ள
ஜெயிஸ் பிளுயிட்
நெருப்புத் தண்ணீரையே
வாங்குங்கள்.




'ஜெயிஸ்'
— மார்க்கையும் —
'உதய சூரியன்'
அடையாளத்தையும் தாங்கிய
லேபிளையும் மூடியையுமுடைய
ஜெயிஸ் பிளுயிட்
நெருப்புத் தண்ணீரே சிறந்தது.

பண்டாரநாயக்கா கொலை வழக்கு

# சோமராமாவிடம் சென்ற பிரதமர் மறுகணம் ஓரடி பின்வாங்கினர்

—ஆனந்த தேரோ

## விசாரணையின் போது வெளியான விபரம்

**எதிரிகள்:**

1. களனி மஹா விஹாராதிபதி மாப்பிட்டிகம புத்தரகித்த தேரோ.
2. திரு. எச். பி. ஜெயவர்த்தன, அவிசாவலை தெரு, வெல்லம்பிட்டி.
3. திரு. அனுரா டி' சில்வா, பியகம தெரு, களனி.
4. தல்துவே சோமராம தேரோ, ஒபயசேகரா நகர், ராஜகிரி.
5. பொலீஸ் இன்ஸ்பெக்டர் வி.ஏ. நியூட்டன் பெரேரா, பொலீஸ் மாடிகள், மருதானை.
6. ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன, புல்லேர்ஸ் லேன், கொழும்பு.
7. திரு. ஏ. கரோலிஸ் அமரசிங்க, பேஸ்லைன் வீதி, கொழும்பு.

**குற்றச்சாட்டுகள்:**

1958ஆம் ஆண்டு ஓகஸ்ட் 25ஆம் திகதிக்கும் 1959ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதிக்குமிடையில் கொழும்பு, களனி, வெல்லம்பிட்டி, ராஜகிரி முதலிய இடங்களில் பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவைக் கொலைசெய்யச் சதித்திட்டம் செய்ததாக ஏழு எதிரிகள் மீதும், அவரைச் சுட்டுக் கொலை செய்ததாக சோமராம தேரோ மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

**வழக்கறிஞர்கள்:**

**முடிக்காக:-** உதவி சொலிசிற்றர் ஜெனரல் ஜனுப் ஏ. சி. எம். அமீர், முடிக்குரிய வழக்கறிஞர்கள் திரு. ஆனந்தா பெரேரா, திரு. எல். பி. ரி. பிரேமரத்ன, சி. ஐ. டி. யைச் சேர்ந்த திரு. எஸ். கே. ஐயர்.

எதிரிகளுக்காக:- திரு. ஏ. எச். டி' சில்வா கியூ. ஸி., திரு. ஸ்ரான்லி அலெஸ், திரு. நிமல் விக்கிரமநாயக்கா, திரு. வால்டர் டி' பெரேரா, திரு. கீர்த்தி சிறி ஜயசிங்கே ஆகியோர் முதலாவது இரண்டாவது எதிரிகளின் சார்பில் தோன்றுகின்றனர்.

திரு. ரி. கே. கேற்றிஸ், திரு. வி. செயின்ற். ஜேம்ஸ் பெரேரா இருவரும் மூன்ருவது எதிரி சார்பில்.

திரு. ரி. எஸ். பி. சேனநாயக்கா, திரு. பெலிக்ஸ் ஜயரட்னே இருவரும் நான்காவது எதிரி சார்பில்.

திரு. என். சத்தியேந்திரா, திரு. ஏ. மகேசன், திரு. என். சச்சிதானந்தம் ஆகியோர் ஐந்தாவது எதிரிசார்பில்.

திரு. ஸி. எஸ். பார்–குமாரகுலசிங்கி, திரு. ரி. டபிள்யூ. ராஜரத்தினம், திரு. மெரில் பெரெரா, திரு. எல். டி. எஸ். குணசேகரா, திரு. எஸ். ஜி. வற்ஸன் ஆகியோர் ஆருவது எதிரி சார்பில்.

திரு. ஆனந்தா கருணைத்திலக்கா, திரு. அன்ட்ரூ.டி' சில்வா, திரு. ஆர். என். ஜே. அர்த்தநாயக்க ஆகியோர் ஏழாவது எதிரி சார்பில்.

**சாட்சிகள்**

1. ஏ. சி. செனவிரத்ன (20), பொலிடெக்னிக் மாணவர், கொழும்பு, கூறியதாவது: காலஞ் சென்ற பிரதமரிடமிருந்து நற்சாட்சிப்பத்திரம் பெறுவதற்காகச் சென்ற செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி காலை அவர்வீட்டுக்குச் சென்றேன். அங்கு சுமார் 10 பேர் விருந்தையில் இருந்தார்கள். சோமராம தேரோ எனக்கருகில் உட்கார்ந்து என்னேடு பேசினர். பிரதமர் என்னிடம் வந்து நற்சாட்சிப் பத்திரம் எழுதச் சில விபரங்களைக் குறித்துத்தரும்படி கேட்டார். நான் பக்கத்திலுள்ள ஒரு அறைக்குச் சென்று எழுதிக்கொண்டிருந்தேன். அப்பொழுது விருந்தைப் பக்கமாக நாலைந்து வெடிச் சத்தங்கள் கேட்டன. சனங்கள் வாயிலை அடைத்துக் கொண்டதால் நான் வெளியில் சென்றுபார்க்க முடியவில்லை. சுட்டசம்பவத்தை நான் நேரிற் காணவில்லை.

2. ஆனந்த தேரோ (39), பிலியந்தலை கூறியதாவது: 5-ம், 7-ம் எதிரிகளைத் தவிர மற்ற எல்லோரையும் எனக்குத் தெரியும். இன்றுவரை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் நான் அங்கத்தவன். ஆனல் ஐக்கிய பிக்கு பெரமுனையில் சேரவில்லை. 1956-ம் வருடத் தேர்தலில் நான் பொலன்னறுவைக்குச் சென்று திரு. சி.பி.டி' சில்வாவுக்காகப் பிரசாரம் செய்தேன். அப்பொழுது பல விவசாயிகள் எனக்கு அறிமுகமானுர்கள். அவர்களிற் சிலர் நெல் உத்தரவாதவிலையில் 2 ரூபா குறைக்கப்பட்டதையிட்டு ஆட்சேபிப்பதற்காக என்னிடம் வந்து பிரதமரிடம் பேசுமாறு கேட்டார்கள். நான் அவர்களை அழைத்துக்கொண்டு பிரதமர் சுடப்பட்ட தினத்தன்று அவருடைய இல்லத்துக்குப் போனேன். அங்கு சோமராமாவும் இருந்தார். பிரதமர் என்னுடன் பேசிவிட்டுச் சோமராமாவின் பக்கம் திரும்பியதும் 2 வெடிகள் ஒன்றன்பின் ஒன்ருகத் தீர்ந்தன. சோமராமா ஒரு சுழல் துப்பாக்கியைப் பிரதமர்மீது குறிவைத்துக் கொண்டிருந்தார். பிரதமர் 'ஐயோ, அம்மா' என்று கத்திக்கொண்டு வீட்டுக்குள் ஓடச் சோமராமாவும் பின்தொடர்ந்தார். நான் ஓடிப்போய் வாயிலில் நின்ற காவல் பொலீஸ்காரரை அழைத்தேன். அவர் தமது துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குள் ஓடினர். சோமராமாவைப் பலர் அடித்தனர். ஆத்திரம் தாங்கமுடியாமல் நானும் அடித்தேன். பின்பு ஓர் உயர்தரப் பொலீஸ் அதிகாரி (திரு. ஸிட்னி சொய்ஸா) வந்து எல்லோரையும் வீட்டைவிட்டுப் போகும்படி கட்டளையிட்டார். நான் என்னுடன் வந்தவர்களையும் கூட்டிக்கொண்டு திரும்பிவிட்டேன். அன்று இரவு பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்தேன்.

ஆரம்பத்தில் ஆனந்த தேரோ சாட்சியமளிக்கையில், பிரதமர் தன்னுடன் பேசி முடிந்ததும், சோமராமாதேரோவிடம் சென்ருரெனவும், அப்பொழுதும் சோமராமா இருந்த இடத்திலேயே இருந்தாரெனவும், பிரதமர் சிங்களத்தில் "இந்த பிக்கு வந்தது..." என்று கூறிக் கொண்டே பின்வாங்கினரெனவும் கூறியிருந்தார்.

## இப்படியும் சொன்னுர்கள்

எங்கள் திட்டங்கள், கொள்கைகளுக்கும் தகநாயக்காவின் திட்டங்கள், கொள்கைகளுக்கும் வெகுதூரம். வானம் பூமியிலிருந்து எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாகும். பின், நாங்கள் எப்படி அவருடன் சேர முடியும்?

—கே. எம். பி. இராஜரத்தின

பதவியிலிருந்தும் ராஜினமாச் செய்யும்படி கட்சியில் உள்ளவர்கள் சிலர் என்னைக் கேட்டுள்ளனர். ஆனலும், நான் இவ்விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையாகவே நடந்து கொள்வேன். என்னுடைய நலத்திலும் நாட்டின் நலமே பெரிது.

—ஸி. ஏ. எஸ். மரிக்கார்

எதிர்வரும் பொதுத் தேர்தல், இந்நாட்டின் சரித்திரத்திலே ஒரு முக்கிய கட்டமான நேரத்தில் நடைபெறவிருக்கிறது. ஆனல், மக்கள் எவருக்கு வாக்களிக்க வேண்டுமென்பது பற்றிக் கூறுவது எனது வேலையல்ல. அரசியல் சர்ச்சைகளில் மதஸ்தாபனத்துக்கு இடமில்லை.

—வண (டக்டர்)ஜேம்ஸ். ஏ.மேதர்

அரசியற் குத்துக் கரணங்களில் தகநாயக்கா பலே நிபுணராவர்.

—பீட்டர் கெனமன்

திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையிலே, கட்சியிலுள்ள கெட்ட சக்திகளை அகற்றி அதனைப் புனிதமாக்குவேன்.

—டி. பி. இலங்கரத்தின

காலஞ் சென்ற பிரதமரின் கொள்கைகளை நிறைவேற்றவும், ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், நமது மக்களின் இன்னல்களைக் கூடியவரை போக்கவும் எனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து, பாடுபட நான் சங்கற்பம் பூணுகிறேன்.

—ஸி. பி. டி' சில்வா

பண்டாரநாயக்கா கொலை விசாரணையில் அரசியல் நோக்கத்துடன் தலையிட்டவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஐந்து மந்திரிமார் தான் என்பதை நிரூபிக்க முடியும்.

—பிரதமர் தகநாயக்கா

சென்ற ஹர்த்தாலின்போது ஒன்பது பேர் இறந்துவிட்டார்களென்று என்னைப் பலரும் குற்றம் சாட்டினர். ஆனல், இப்போதுள்ள ஆளுங் கட்சியோ ஆயிரக்கணக்கான சிங்கள, தமிழ் மக்களின் மரணத்துக்குக் காரணமாகவிருக்கிறது.

—டட்லி சேனநாயக்கா

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அங்கத்துவத் தொகுதிகள். இந்த மாகாணத்தில் 638,600 வாக்காளர்கள் இருக்கின்றனர். இவர்களில் 597,469 பேர் தமிழர். மற்ற இனத்தவர்களாகிய சிங்களவரும், முஸ்லிம்களும் மிகவும் குறைந்த அளவில், ஆங்காங்கே பிரிந்து வாழ்வதால், இப் பதின்மூன்றுதொகுதிகளும், தமிழ் பேசும் பிரதிநிதிகளையே தெரிவு செய்யும். எனவே கிழக்கு மாகாணத்தில் 11 அங்கத்தவர்களும், வட மாகாணத்தில் 13 அங்கத்தவருமாக 24 பிரதிநிதிகளைத் தமிழ் பேசும் மக்கள் அனுப்ப முடியும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரசும், மலைநாட்டுத் தமிழர்களுக்குத் தொகுதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர். இதனையொட்டி தொகுதி நிர்ணயக் கொமிஷன் அறிக்கை பின் வருமாறு கூறுகின்றது:

"தோட்டத் தொழிலாளரின் பிரதிநிதிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசும், தோட்டத் தொழிலாளரும் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யக்கூடிய வகையில் சில தொகுதிகள் அமைக்கப்பட வேண்டும்" எனக் கேட்டனர். நாங்கள் முன்னர் கூறியதைப் போல தொகுதிகள் பிரதேச வாரியாக நிர்ணயிக்கப்படுவதால், நாங்கள் தோட்டத் தொழிலாளருக்கென தனித் தொகுதிகளை ஏற்படுத்துவதற்குசக்திவாய்ந்தவர்களல்லர். ஆனல் அவர்களில் பிரஜா உரிமை பெற்றவர்கள் மற்றப் பிரஜைகளுடன் தத்தம் தொகுதிகளில் வாக்களிக்கலாம்.

"இந்திய பாகிஸ்தானியர் மசோதாவின்படி பதிவு செய்யப்பட்ட இந்தியர் பல்வேறு பாகங்களிலும் பிரிவு பட்டிருப்பதால் அவர்களுக்குத் தனித் தொகுதிகள் ஏற்படுத்துவது முடியாமற் போகின்றது.

"1948-ம் ஆண்டின் பிரஜா உரிமை மசோதா 18-ம் பிரிவின்படி இலங்கையில்சுமார் நாலரை லட்சம் இந்தியர் வம்சாவளிப் பிரஜைகளாவதற்குத் தகுதியுடையவர்கள் எனக் கூறப்பட்டது. இந்தக் கூற்று உண்மை என்பதற்கு ஆதாரமாக எவ்வித புள்ளிகளும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் வம்சாவளிப் பிரஜைகளாவதற்குத் தகுதிபெற்றிருந்தால்அவர்கள்வாக்காளர் இடாப்புகளில் தங்கள் பெயர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் இவர்கள் அதிகமாக வாழும் மத்திய, ஊவா, சப்ரகமுவா ஆகிய மாகாணங்களில் இவர்கள் தங்களின் வாக்குப்பலத்தைப் பிரயோகித்துத் தங்கள்பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய ஏதுவாக இருக்கும். இந்த மசோதாவின் பிரகாரம் பதிவுகள் எல்லாம் செய்யப்பட்டு முடிந்ததும், இவர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் மற்றவர்களுடன் வாக்களிக்க முடியும். இன்று கண்டிய மாகாணங்களில் தவிர்க்க முடியாமலிருக்கும் குடிசனத் தொகைக்கும் பிரஜைகளின் தொகைக்குமிடையிலிருக்கும் பெருத்த வித்தியாசம், பதிவுப் பிரஜைகளின் வாக்காளர் இடாப்பு வெளியானதும் வெகுவாகக் குறையும்."

மார்ச் மாதத்திலே நடைபெறவிருக்கும் தேர்தல் இந்தப் புதிய தொகுதிகளின் அடிப்படையில் நடைபெறும்.

### பார்லிமெண்ட் பொதுத் தேர்தல் கோப்பாய் தொகுதி

உப-தேர்தலில் எனக்கு ஆதரவு தர முன் வந்தவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வருகிற பொதுத் தேர்தலிற் கோப்பாய்த் தொகுதிக்கு ஓர் அபேட்சகனுகப் போட்டியிட்டுச் சேவை செய்ய முன் வந்துள்ளேன் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**எஸ். சிவசுப்பிரமணியம்**
பிறக்டர்
103|2, கோட்டடி வீதி,
கொழும்பு.
குமாரசூரியர் வளவு,
கோப்பாய்.

## படமுடியாதினித்துயரம்

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

துறை வீதி, மானிப்பாய் வீதிகளை அகலித்துப் பழுதுபார்த்தல் இவை சம்பந்தமாக உதவி மேயர் திரு. சோ. இராஜரத்தினம் கொண்டுவந்த நான்கு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. இந்தக் கடமைகள் யாவும் மத்திய அரசாங்கத்தின் போக்குவரத்து அமைச்சின்கீழுள்ள பொது வேலைப்பகுதி (P. W. D.)யைச் சார்ந்ததாகும். ஆகையால் அவர்கள் கவனம் வைத்தால் காரியம் நடக்கும்.

தனிச்சிங்கள அமைச்சர் குழுவில் முதல் முதலாகத் தமிழ் பேசும் மந்திரியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜனுப் எம். எம். முஸ்தபாவுக்கு இம்மாநகரசபை தனது பாராட்டுதலைத் தெரிவிக்க வேண்டுமென்று ஹாஜி அபூசாலிஹ் பெயரில் இருந்த தீர்மானம் அவர் கூட்டத்துக்கு வராதமையினுல் கைவிடப்பட்டது.

### பிரதேச கலை மன்றம் நாடகப் போட்டி

யாழ்ப்பாணம் பிரதேச கலைமன்றத்தின் நாடகக்குழு 1960-ம் ஆண்டின் முற்பகுதியில் ஒரு நாடகப் போட்டியை நடாத்த உத்தேசித்திருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அரசினர் பள்ளிக்கூடங்களும், உதவிபெறும் பள்ளிக்கூடங்களும், அங்கீகாரம் பெற்ற 'அமெச்சூர்' நாடக சபைகளும் இதில் கலந்து கொள்ளலாம். இதில் பங்கு பற்ற விரும்புகிறவர்கள் 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ந் திகதிக்கு முன்னர் இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுதி விண்ணப்ப பத்திரங்களையும், போட்டி நிபந்தனைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**கலையரசு க. சொர்ணலிங்கம்**
நாடகக் குழுத் தலைவர்
நவாலி,
மானிப்பாய்.

### யாழ்ப்பாணக் கச்சேரி உத்தியோகஸ்தர் முன்னேற்றக் கழகம்.

யாழ்ப்பாணக் கச்சேரி உத்தியோகஸ்தர்களுக்கு சாப்பாடு, தேநீர் தயாரித்து விற்பனை செய்வதற்கு விண்ணப்பங்கள் (ரெண்டர்கள்) கோரப்படுகின்றன. ரெண்டர் முடிவு திகதி 24-12-59 பகல் 12-00 மணி. ரெண்டர் 1-1-1960-ல் இருந்து 31-12-1960 வரைக்கும்.

மேலதிக விபரங்கட்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்:

**சி. இரத்தினசபாபதி,**
**கே சி. மகாதேவன்,**
இணைக்காரியதரிசிகள்.
யாழ்ப்பாணக் கச்சேரி உத்தியோகஸ்தர் முன்னேற்றக் கழகம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
15-12-59.
23

## பூஜ்யம் தபால்

ஸ்ரீ ஸி. பி. டி' ஸில்வா,
தலைவர்,
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி,
கொழும்பு.

தலைவரே !

வாழ்த்துக்கள்.

நில, விவசாய மந்திரி பதவியைத் தாங்கள் விட்டு விட்டதை அறிய எனக்கும் என் நண்பர்களுக்கும் மிகவும் வருத்தம்.

ஏனெனில் தாங்கள் அவசர அவசரமாக லண்டனிலிருந்து திரும்பியதும், பிரதம மந்திரி பதவியை, தகநாயக்காவிடமிருந்துபெற்று, இந்நாட்டுஆட்சிப் பொறுப்பை ஏற்பீர்களென்று ஆவலுடன் எதிர்பார்த்தேன். ஏனெனில், தாங்கள் தானே சட்டப்படி பண்டாரநாயக்காவின் அரசியல் வாரிசு!

ஆனால் தாங்கள் பிரதமர் பதவி தரும்படி கவர்னர் ஜெனரலுக்கு எழுதியும் பயனில்லாமற்போனதுடன், ஏற்கனவே இருந்த நில மந்திரிப் பதவியையும் இழக்க நேரிட்டது எங்களது 'டபிள்' துரதிருஷ்டமாகும்.

என்றாலும்நாங்கள்நம்பிக்கை இழக்கவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைமைக் கிரீடம் தங்களுக்குக் கிடைத்து விட்டது. ஆகவே தாங்களே (அக்கட்சி உயிரோடு இருப்பின்) உண்மையில் இலங்கையின் 'ராஷ்டிரபதி'!

பொதுத்தேர்தலுக்குஇன்னும் மூன்று மாதம் தான் இருக்கிறது. அதுவரை பொறுமையாக நானும் எனது அன்பர்களும் காத்துக் கொண்டிருக்கிறோம். தாங்களும் தங்கள் உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்படிக்கு
பூஜ்யம்

குறிப்பு :

தாங்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (எஸ். எல். எவ். பி.) தலைமைப் பதவி ஏற்றபோது வெளியிட்ட அறிக்கையில் "நமது மக்களின் கஷ்டங்களைக் கூடுமானவரை நீக்குவதாக" வாக்குறுதி அளித்தீர்களல்லவா! அதைப்பற்றி என் நண்பரொருவர் ஒரு சந்தேகம் தெரிவித்தார். "நமதுமக்களின்" என்றது சிங்கள மக்களா? அல்லது தமிழரும் சேர்ந்தா?" என்று அவர்சந்தேகப்பட்டார்.

அடடா! தங்கள் தேசாபிமானத்தை அறிந்த நான், தமிழரும் உள்ளிட்டுத்தான் நீங்கள் கூறியிருக்கிறீர்கள் என்றும், தங்கள் தொகுதியான பொலன்னறுவையில் சென்ற வருஷ கலகத்தில் செத்தவர்கள் போக மிஞ்சியுள்ள தமிழர்களையும் தாங்கள் அவசியம் கவனித்துக்கொள்வீர்கள்என்றும்நான் உங்கள் சார்பாக அவருக்குக் கூறினேன். சரிதானே ?

பூஜ்யம்

---

தமிழிற் கட்டுரை வளர்ச்சி : 1

## ஒரு குழப்ப நிலை

— வே. க. ந. —

இலக்கியம் ஒரு கலை. வார்த்தைகளைக் கலையழகுபடக் கையாண்டு, கலைஞனின் உணர்ச்சிகளை, அனுபவ உண்மைகளை வெளியிட உதவுவது இக்கலை. வார்த்தைகளைக் கருவியாகக்கொண்டு சமைக்கப்படும் உருவங்கள்கொண்டதுவே இலக்கியம். இலக்கியம் பல உட்பிரிவுகளைக் கொண்டது; கவிதை, நாடகம், சிறுகதை, நாவல் ஆகிய ஒவ்வொன்றும் தனித்தனி இலக்கியவகை. இவை ஒவ்வொன்றும் கலைஞனின் உணர்ச்சிகளை வெளியிட உதவும் ஒரு சாதனமாகவே அமைகிறது. இவை போலவே, கட்டுரையும் ஓர் இலக்கியவகைதான். மற்ற இலக்கியத் துறைகளில் எங்ஙனம் கலைஞன் தன் அனுபவத்தை ஒவ்வொரு வகையாக வெளியிடுகிறானோ, அவ்வாறே கட்டுரை என்ற இலக்கிய உட்பிரிவிலும், வெளியிடுகிறான். மற்ற வகைகளுக்கு உள்ள பொதுவான இலட்சணங்கள் கட்டுரைக்கும் பொருந்தும் எனலாம். எனவே, சிறுகதை அல்லது கவிதை இலக்கியமாக—கலையாக—மதிக்கப்படும் அளவுக்கு, கட்டுரையாக இலக்கியமாக—கலையாக—மதிக்கப்படவே செய்யும்.

### சமாதானம் கூறமுடியாது

மேலே குறிப்பிட்டிருப்பது ஏதோ மிகச்சாதாரண உண்மையாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாக எமக்குத் தோன்றினாலும், இங்கு கூறவேண்டியதற்குக் காரணம் உண்டு. தமிழ் இலக்கியம்பற்றிச் சமீப காலத்தில் வெளிவந்துள்ள திறனாய்வு (Literary Criticism) நூல்களில், கட்டுரை என்ற இலக்கிய வகைபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. வசன இலக்கியத்தில், சிறுகதைபற்றியும் நாவல் பற்றியும் குறிப்பிட்ட ஓர் இலக்கிய விமர்சகர் கட்டுரைபற்றி ஒரு வார்த்தையேனும் குறிப்பிடவில்லை. வேறொரு 'திறனாய்வாளர்' நாவல் (நவீனம் அல்லது புதியது!) பற்றிக்கூட எதுவும் குறிப்பிடவில்லை. முன்னோடிகளாக வெளிவந்த நூல்கள் என்ற வகையில், இவை தவிர்க்கப்பட்டிருக்கலாமென்று சமாதானம் கூற முடியாது. ஏனெனில், அவற்றின் மறுபதிப்புகளின்போதாவது, இக்குறைகள் நீக்கப்படலாம் அல்லவா? கட்டுரை ஓர் இலக்கிய வகை என்பதை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா? அல்லது தமிழில் இந்த வகையில் சேர்க்கக் கூடியது எதுவும் இல்லை என்பது இவர்கள் கொள்கையா? அப்படியென்றாலுமே, அது பற்றி ஒரு வசனம் எழுதியிருக்கலாமே! கலைக்கு அரசியான கவிதைபற்றியே விரித்துக்கூறுவதும், கவிதைகளிலிருந்தே மேற்கோள்களை எடுத்தாளுவதும் இந்த ஆசிரியர்களுக்கு உள்ள ஒரு தனிப்பண்பாக உள்ளது. இன்றைய சூழ்நிலையில் முக்கிய இலக்கிய வகைகளாக இருக்கும் கட்டுரை, சிறுகதை, நாவல் ஆகிய வசன இலக்கியங்கள் உதாசீனஞ்செய்யப்பட்டுள்ளது கவனிக்கத் தக்கது.

### காலத்துக்குக்காலம்

கட்டுரை என்ற இலக்கிய உருவம் (Literary Form) காலத்துக்குக்காலம் (ஆங்கிலத்தில்கூட) மாறுதல் அடைந்து வந்திருக்கிறது என்றாலும் (பேக்கன் காலத்தில் ஆரம்பித்திருந்தாலும், அடிஸன், ஸ்டீல் ஆகியோர் கையிலேயே இன்று ஏற்கக்கூடிய உருவத்தைப் பெற்று, சார்ல்ஸ் லாம்ப், வில்லியம் ஹஸ்லிற் ஆகிய 19-ம் நூற்றாண்டு இலக்கிய மேதைகளாலும் லிண்ட், பெல்லொக், லூகாஸ், பிறீஸ்ற்லி போன்ற சமீப காலத்திய படைப்பாளிகள் வாயிலாகவும் ஆங்கில மொழியில் கட்டுரை (Essay) சிறப்புப் பெற்றிருக்கிறது. அதன் சில இன்றியமையாத இலக்கணங்களைக் கவனித்தல் அவசியமாகும். கட்டுரைக்குப் பொருள்பற்றி வரையறை எதுவும் இல்லை. தன் மனத்திற்பட்டது எதுவாயினும்—கற்பனை விஷயங்களோ அல்லது சாதாரண வாழ்க்கையில் காணும் எந்தச் சம்பவமோ அல்லது பாத்திரமோ அல்லது அவன் மனத்தில் இருந்துவரும் எண்ணமோ கட்டுரைக்குப் பொருளாக அமையலாம். கட்டுரையை வரைவதில்தான், அது இலக்கிய உருவம் பெறுகிறது. தனியே கருத்தை வற்புறுத்துவதையே நோக்கமாகக் கொண்டு, அதற்கு மேற்கோள்கள் கூறுவதில் ஈடுபட்டால் அதன் இலக்கியத் தன்மை கெட்டுவிடும். இதர இலக்கிய உருவங்கள்போலவே, கட்டுரையிலும் கலைஞனின் எண்ணங்கள் கலையுருவம்பெற்று மிளிர வேண்டும். அதற்கு அவன் கையாளும் உத்திகள் சிறப்பாக அமையவேண்டும். மற்றைய உருவங்களிலும் பார்க்கக் கட்டுரையில், கலைஞன் ஓரளவு நேரடியாக விஷயங்களைக் கூறுவானதலால், கட்டுரைமூலம் அவனை—அவன் ரஸபேதங்கள், எண்ணப்போக்குகள் ஆகியவற்றை—வாசகன் கூடுதலாக அறிய முடியும். உண்மையில், கட்டுரை வாயிலாகவே, கலைஞனின் உள்ளத்தை நெருங்க முடிகிறது. பிரசாரம் கலந்திருந்தாலும், கலையம்சமே கூடிய முக்கியத்துவம் பெறுகிறது.

### குழப்பநிலை

"தமிழனின் மேதைக்கு நாவல்களைவிட, சிறுகதைகளைவிடக் கட்டுரைகளே ஏற்றவை" என்று கூறி, தமிழில் கட்டுரை எழுதுவதில் ஈடுபட்டோர் பெரும்பாலும் வெற்றியடைந்துவிட்டார்கள் என நகைச்சுவை எழுத்தாளர் "மகரம்" தாம் எழுதிய கட்டுரையில் தெரிவிக்கிறார். தமிழில் கட்டுரை (Essay) என்ற இலக்கிய உருவத்துக்கும், சாதாரண பத்திரிகைக் கட்டுரைக்கும் (Article) பாகுபாடு இல்லாததாலேயே இவ்விதமான குழப்பநிலை பலர் மனத்திலும் ஏற்படுகிறது. பத்திரிகைளில் வெளியாகும் பெரும்பாலான கட்டுரைகள் இலக்கிய உருவமற்றனவாக, கலையம்சம் அற்றனவாகவே காணப்படுகின்றன. இக்கட்டுரைகளை வெறும் பிரசாரக் கட்டுரைகளாகவோ (இலக்கியத்துக்காகவும் இப்பிரசாரம் நடைபெறலாம்) அல்லது தகவல் (Informative) கட்டுரைகளாகவோ கொள்ளலாமே யன்றி இவைக்கு நாம் இலக்கிய அந்தஸ்தை அளிக்கமுடியாது.

---

## 'வகுப்புக் கலவரம் இனி ஏற்படமாட்டாது'

— பிரதமர்

"கடந்த ஆண்டு நாட்டில் நடைபெற்ற வகுப்புக் கலவரங்கள் மிகவும் துர்அதிர்ஷ்டமானவை. இனி அத்தகைய சம்பவங்கள் நாட்டில் நடைபெற மாட்டாவென நம்புகின்றேன்" இவ்வாறு பிரதமர் தஹநாயக்கா தமிழ் யூனியன் வைர விழாவிற் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசும்போது சிங்களவரும் தமிழரும்நட்புறவு கொண்டாடி, ஒரு புதிய இலங்கையைச் சிருஷ்டிக்க முயலவேண்டுமெனவும் கூறினர்.

யு. என். பி. தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா, டாக்டர் என். எம். பெரேரா ஆகியோரும் இதிற் கலந்து கொண்டனர்.

---

## இந்தியக் கைதிகளைச் சீனர் துன்புறுத்தினர்

லடாக்கில் சீனரால் கைதாகி விடுதலை செய்யப்பட்ட இந்திய எல்லைப்புற பொலிஸார் கண்ணியமாக நடாத்தப்பட்டனர் என சீன அரசாங்கம் அறிக்கை வெளியிட்டிருந்ததல்லவா? விடுதலை செய்யப்பட்டு ஜம்முவிலுள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் ஹரன் சிங் என்ற பொலிஸ் உத்தியோகத்தர், சீனர்தம்மைத்துன்புறுத்திய முறைகளை விளக்கி ஒரு விபரமான அறிக்கையைப் புது டில்லிக்கு அனுப்பியிருக்கிறார். கைது செய்யப்பட்ட மறுநாள் சீனர் தம்மை வன்மையாக அடித்தனர் என்றும், மூன்று இரவுகள் பனிக்கட்டி படிந்த இடத்தில் நடந்து திரியுமாறும் படுக்கையின்றிப் படுத்துறங்குமாறும் கட்டாயப்படுத்தினர் என்றும், இருநாட்கள் உணவு தரவில்லை என்றும் — இவை போன்ற மற்றும் பல கொடூரமான விபரங்கள் இவருடைய அறிக்கையில் இடம் பெற்றிருக்கின்றன. இவருடைய அறிக்கை குறித்துக் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் நேரு இராஜிய சபையில் உரை நிகழ்த்தினர்.

இந்திய — சீன உறவு இராஜிய சபையில் இம்மாதம் 8, 9, திகதிகளில் விவாதிக்கப்பட்டது. இந்திய அரசாங்கம் கடைப்பிடித்து வரும் கொள்கைக்கு ஏகமனதாக ஆதரவு அளிக்கப்பட்டது.

வட, கிழக்கு எல்லைப்புறங்களில் சீன விமானங்கள் அத்துமீறிப் பறக்கின்றன என்று இந்திய அரசாங்கம் சீன அரசாங்கத்துக்கு ஆட்சேபக் குறிப்பு ஒன்று அனுப்பியிருக்கிறது.

பிரதமர் நேரு சமரசப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குக்கூறியயோசனைகளுக்குச் சீன அரசாங்கம் பதிலனுப்பாமல் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றது.

### இந்தியா

கடந்த வாரம் அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவருடன் பிரதமர் நேரு சீன எல்லைவிவகாரங்கள் குறித்தும் பேச்சுவார்த்தைகள் நடாத்தியிருக்கிறார்.

சீன எல்லை விவகாரம் குறித்துப் பிரதமர் நேரு பின்பற்றும் கொள்கையை யுகோஸ்லேவியாவின் அதிபர் மார்ஷல் டிட்டோ பாராட்டியிருக்கிறார்

### இந்தியா—பாகிஸ்தான் பேச்சுவார்த்தைகள்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இருந்து வரும் நிதித் தகராறு குறித்துச்

[15 ஆம் பக்கம் பார்க்க]

பயிர், செடிகளுக்குண்டாகும்
சகல வியாதிகளையும் நிச்சயமாகத் தடுப்பது

பொலிடோல்

யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பவர்கள் :
கே. எஸ். செல்லையா
ரேயல் டிஸ்பென்சரி

ஏகவிநியோகஸ்தர்கள் :
சதாம் ஹவுஸ் லிமிடெட்
தபால் பெட்டி இல. 743. கொழும்பு.
சகல தகவல்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு மார்கழி மீ 4 உ (19-12-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## மொழியும் மதமும்

தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமை ஏற்பட்டால்தான் அவர்களுக்கு விமோசனம் பிறக்க முடியுமென்றும், அப்போதுதான் பிறரும் அவர்களை மதித்து நடப்பரென்றும்சென்ற வாரம் எழுதியிருந்தோம்.

ஆனால், இந்த ஒற்றுமை ஏற்பட முடியுமா? அதை எப்படி ஏற்படுத்துவது? என்பன முக்கிய கேள்விகள்.

சமூக, பொருளாதார, கட்சி விஷயங்களில்வேற்றுமைக்கருத்துக்கள் இருப்பினும், இந்நாட்டில் தமிழர் தன் மானத்துடனே, பிறருடன் சரிநிகர் சமானமாக வாழவேண்டுமென்ற விஷயத்தில் அவர்களிடை வேற்றுமை இல்லை.

சமஷ்டியா? பிரிவினையா? என்ற விஷயத்திலும் முக்கிய வேற்றுமை யில்லை. பிரிவினையைக் கேட்டால், சமஷ்டியாவது கிடைக்கலாமென்பது பிரிவினைக் கட்சியின் எண்ணமாகும். சமஷ்டி கேட்டால், முதல்படியாக பிரதேச சுயாட்சியாவது கிடைக்கலாமென்பது சமஷ்டிக் கட்சியினரின் கருத்தாக இருக்கலாம்.

ஆனால், கேட்ட எதுவும் கிடைத்துவிடப்போவதில்லை. இப்போதுள்ள "ஜனநாயக" முறைப்படி, பெரும்பான்மைச் சமூகப் பிரதிநிதிகளின் சம்மதத்துடன்தான் சிறுபான்மையோர் எதையும் பெறமுடியும்.

தமிழர் தீவெங்கும் பரவிக் கலந்து வசிக்கிறார்கள். இனியும் வசித்துவரவேண்டியவர்களாயுள்ளனர். இதற்குப் பெரும்பான்மைச் சமூகத்தின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பெறவேண்டியது அவசியம்.

அந்த ஆதரவும் நல்லெண்ணமும் இன்று வெகுவாக இல்லை. அவற்றை எப்படிப் பெறமுடியும்? என்பது முக்கிய கேள்வி. இதைப்பற்றிப் பொறுப்புள்ள தமிழ்த் தலைவர்கள் கூடி ஆலோசித்து அதற்கான முடிவுகளைத் தீர்க்கதரிசனத்துடனும், அபிமானத்துடனும் செய்ய வேண்டும். தனிப்பட்ட, கட்சி நலனை விட சமூக நலனே முக்கியமாகும்.

தமிழர் பிளவுபட்டுப் பிரிந்து வாழ்ந்தால் பிறர் அவர்களை மதிக்கமாட்டார்கள். அரசியல் விளையாட்'டிலே தமிழரிடையே, பல பல பிளவுகளைச் செய்து, அவர்கள் பிரித்தாளப்படும் கண்றாவியைப் பார்க்கின்றோம்.

ஆகவே பிரிவினைக்கு இடம் தராமல் பார்லிமெண்டுக்குத் தெரிவுசெய்யப்படும் தமிழ்ப் பிரதிநிதிகள் ஒற்றுமையாகவும் கட்டுப்பாடாகவும் தங்கள் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள அநீதிகளை நீக்க, பிற சமூகங்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறக்கூடிய வகையிலும் இராஜதந்திரமாக நடக்க வேண்டும்.

இதற்குத் திறமையும்,கண்ணியமும், முழுநேர சேவை செய்யக்கூடிய, தன்னலமற்ற சுபாவமுமுள்ளபிரதிநிதிகளையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும். கட்சியின் பெயரால் தேர்தலில் நின்று, பல வாக்குறுதிகளையும் அளித்துவிட்டு, பின்னர் சுயநலத்தில் உந்தப்பட்டு கட்சி மாறி, தேர்தல் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு அவைக்கு நேர் மாறாக நடப்பவர்களையும் பார்க்கின்றோம். ஆகவே, கட்சிகளும் தேர்தல் அபேட்சகர்களை நியமிக்கையில் அதிக கவனம் காட்டவேண்டும்.

தேர்தலில் ஒவ்வொரு தொகுதியிலும் பல அபேட்சகர்கள் போட்டியிடக்கூடும். இதைத்தவிர்ப்பது சந்தேகமே. என்றாலும், தெரிவு செய்யப்படும் எல்லா அபேட்சகர்களும் தமிழரின் நன்மைக்கான விஷயங்களில் கட்டுப்பாடாகவும், ஒற்றுமையாகவும் காரியங்கள் செய்ய முடியுமாயின் அது சமூக நன்மைக்கு வெகுவாக உதவும்.

ஆகவே, எல்லா அபேட்சகர்களிடமும் அதற்கான வாக்குறுதிகளைப் பெற்று, பொதுவான ஒரு வேலைத்திட்டத்தையும் வகுக்கமுடிவதாயின், அது தமிழரின் ஒற்றுமைக்கும் எதிர்கால நல்வாழ்விற்கும் வழிசெய்யும். இதில் பல சங்கடங்கள் உண்டுதான். என்றாலும், தமிழ்ச்சமூகத்தின் நன்மையில் அக்கறையுள்ள தமிழ்ப் பெரியோர்கள் இச் சமயம் இதில் மிகுந்த கவனம் செலுத்தித் தகுந்த பிரதிநிதிகளையே தமிழர் சார்பாகத் தெரிவு செய்யும்படி பார்த்துக்கொண்டால்தான் தமிழருக்கும் நாட்டுக்கும் எதிர்காலத்தில் நன்மையுண்டு.

---

## தேர்தல் கால எச்சரிக்கை

புதிய பொதுத் தேர்தலில் மொழிவெறி, மதவெறி என்ற பயங்கரப் பேய்களைக் கிளப்பிவிடக் கூடாதென்று, சம்பளக் கொமிஷன் தலைவரான வில்மட் பெரேரா, பாணந்துறையிலே ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது எச்சரிக்கை செய்துள்ளார். இத்துடன் இந்திய துவேஷ வெறியையும் இப்பேய்களுடன் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

"பௌத்த சிங்களவர்களாகிய நாம் இந்நாட்டில் பெரும்பான்மையாக இருக்கிறோம். ஆகவே மற்றவர்களின் பால் நாம் நியாயமும் பெருந்தன்மையும் காட்டவேண்டியது நமது புனிதமான கடமையாகும். மற்றவர்களின் தொண்டைக்குள்ளாக மொழியையோ, மதத்தையோ கட்டாயமாகத் திணிக்க முடியாதென்று நான் கூறிவந்திருக்கின்றேன். சிங்களம் பெரும்பான்மை மக்கள் பேசும் மொழிதான். அதற்கு அரசியலிலே ஒரு மதிப்பான ஸ்தானம் அளிக்கத்தான் வேண்டும். என்றாலும், இதற்காக மற்ற மொழிகளைக் குழி தோண்டிப் புதைத்துவிட முடியாது."

இவ்வாறு கூறிய திரு. பெரேரா, சிங்களம், தமிழ், ஆங்கிலம் இம்மூன்று மொழிகளிலும் நிர்வாகம் நடைபெறும் வகையில் ஒரு வழி வகுக்கலாமென்றும், மொழி விஷயமாக நேருஜி, இந்திய பார்லிமெண்டில் கூறியதை இங்கு ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டுமென்றும் கூறினார். இப்படி நியாய புத்தியும் தீர்க்க தரிசனமுமுள்ள சிங்களவர் இலங்கையில் இல்லாமலில்லை.

ஆனால் தேர்தல் ஜுரம் அதிகரித்து வரும் நிலையில் அவரது இந்த நல்லுபதேசம், செவிடன் காதில் ஊதிய சங்கநாதமாக முடியுமோ என்று தோன்றுகிறது. மொழிவெறி, மதவெறி மட்டுமன்றி, இந்திய துவேஷ வெறியையும் கிளப்பிவிட, பல பல பெரமுனைகளும் கட்சிகளும் மழைக்காலக்காளான்கள் போலக் கிளம்பியுள்ளன.

சென்ற தேர்தலில் மொழி வெறியையும் மத வெறியையும் கிளப்பிய கட்சியால் எவ்வளவு தீங்குகள் ஏற்பட்டனவென்பதை நாம் விளக்கத் தேவையில்லை. அந்தக் கட்சி யாவது உருப்பட்டதா? அதுவும் சீர் குலைந்து செத்த பிணத்தைவிட மோசமான நிலைக்கு வந்துள்ளது. அரசியலில் கூட வெறும் தகிடு தத்தங்களால் பயனில்லை என்பதையும் "சத்தியமே முடிவில் வெல்லும்" என்பதையும் நேர்முகமாகக் காண்கின்றோம்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பமான அரசியல் நிலை, பொது மக்களுக்கும் சிறப்பாகச் சிங்கள மக்களுக்கும் நல்லதோர் பாடமாகும். திரு. வில்மெட் பெரேரா போன்ற அரசியல் ஞானிகள் தைரியமாக முன்வந்து உண்மையை உள்ளபடி எடுத்து விளக்க வேண்டும். வகுப்பு வெறியர்கள் யாராயினும் அடுத்த தேர்தலில்வெற்றிபெற முடியாமலும், நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் அதுவே பெரிதும் வழி செய்யும்.

---

## எழுத்தாளர் மாநாடு

எழுத்தாளன் தனது படைப்புக்கள் மூலம் மனித உணர்ச்சிகளுக்கு விடுதலை அளிக்க வேண்டும். இது அவன் தனக்கும் மனித குலத்துக்கும் செய்யவேண்டிய முக்கிய பணியாகும். சென்னையிற் சென்ற புதன்கிழமை ஆரம்பித்துள்ள அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய வங்கத்து எழுத்தாளர் திரு.தாராசங்கர்பானர்ஜி மேற்கூறியஅறிவுரையைஅடிப்படையாகக்கொண்டு தமது அரிய கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். எழுத்தாளர் அத்தனைபேரும் இதனை வரவேற்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. இம் மாநாட்டைக் குறித்துச் சென்னை 'ஹிந்து' அரியதொரு தலையங்கத்தை எழுதியுள்ளது. இதில் இரு முக்கிய விஷயங்களை அது குறிப்பிட்டுள்ளது. ஒன்று எழுத்தாளரின் சுதந்திரம். மற்றது மொழி முதலிய குறுகிய மனப்பான்மை எழுத்தாளருக்கு இருக்கக்கூடாதென்பது. இந்த இரு நோக்கங்களையும் நிறைவேற்றும் வகையில் அகில இந்திய எழுத்தாளர் மாநாடு ஏதும் செய்ய முடியுமாயின் அதனாற் பெரும் பயனுண்டு என 'ஹிந்து' கருதுகின்றது.

அரசியற் சுதந்திரமும் பொருளாதார சுதந்திரமும் உள்ள நாட்டிலேதான் எழுத்தாளர் பூரண சுதந்திரத்துடன் தமது சிந்தனைகளை உருவாக்க முடியும். அத்தகைய நாடுகளிலேதான் நல்ல இலக்கியங்கள் மலர்ந்து மக்களுக்கு இன்பமும் பயனும் அளிக்கும். பலகாலமாக அரசியல் அடிமைத்தனத்திற் கட்டுண்டு கிடந்த இந்தியாவிலும் இலங்கையிலும் எழுத்தாளர் தலைதூக்க முடியாமல் இருந்து வந்தனர். அரசியல் விடுதலைக்குப் பின்னர் எழுத்தாளர்கள் தங்கள்உரிமைகளுக்காகவாதாடும் பேறுகிடைத்துள்ளது. அரசாங்கமும் எழுத்தாளர்களுக்கு உற்சாகமூட்டி அவர்களின் சேவைகளை நாட்டுக்கும் மக்களுக்கும்பயன்படுத்த முன்வந்துள்ளது.

நீண்டகாலம் அடிமை வாழ்வில் தாழ்வுற்று வறுமை மிஞ்சி இருந்ததாலும்,அந்நியரின் பிரித்தாளும் தந்திரங்களுக்கு உட்பட்டிருந்தமையாலும் எழுத்தாளரின் உள்ளங்களிற் குறுகிய எண்ணங்கள் முளைகொண்டு வளர இடமேற்பட்டது. பலமொழி எழுத்தாளர்களும் ஒன்றுகூடித் தங்கள் கருத்துக்களைத் தாராளமாகப் பரிமாறக்கூடிய வாய்ப்பு சமீப காலத்திலேதான் ஏற்பட்டுள்ளது. வெறுப்பு, சுயநலம், துவேஷம், குழிபறித்தல், கண்ணியமற்ற செயல்கள் எழுத்தாளரின் உள்ளங்களிற் குடிகொண்டால் அவற்றினின்றும் கிளர்ந்தெழும் எண்ணங்கள் விஷவித்துக்களாகிச் சமூகத்துக்கே சாபத்தீடுகளாகிவிடும். ஆக்வே முதலில் எழுத்தாளர்கள் தங்கள் உள்ளங்களைப் புனிதமாக்க வேண்டியது மிக முக்கியமாகும். கள்ளங் கபடமற்ற உள்ளத்திலிருந்து எழும் இலக்கியங்களே சமூகத்தை வாட்டும் நோய்களைக் களைந்து மக்களுக்கு நன்மை பயக்கும். பல்வேறு மொழி பேசும் எழுத்தாளர் அடிக்கடி மாநாடு கூடித் தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டால் வேற்றுமையும் துவேஷ மனப்பான்மையும் அகன்று நல்லுறவும் ஒற்றுமையும் ஏற்பட வழி பிறக்கும்.

எழுத்தாளர்கள் புத்துலகின் முன்னோடிகள். அவர்களுடைய இன்னல்கள் அகன்று மனத் தூய்மையுடனும் சுதந்திரமாகவும் எழுத அவர்களுக்கு எங்கு வாய்ப்பும் நல்ல சூழ் நிலையும் ஏற்படுகின்றதோ அங்குதான் உயர்ந்த இலக்கியம் பிறக்கும்; நாடும் சிறப்புற்றோங்கும். இலங்கையிலும் தமிழ், சிங்களர், ஆங்கில எழுத்தாளர்களின் பொது மாநாடு ஒன்று விரைவில் நடைபெறுமென அறிகின்றோம். இது வரவேற்கத்தக்க ஒரு நன் முயற்சியேயாகும்.

---

## அல்ஜீரியா தீர்மானம்

ஐக்கிய நாடுகள் சபையிலே அல்ஜீரியா விஷய்மாகச்சென்ற வாரம் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிராகரிக்கப்பட்ட முறை, அல்ஜீரிய மக்களுக்கு நீதி வழங்காததுடன், ஐ. நா. சபையின் நற்பெயருக்கும் இழுக்குத்தேடியுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்பாக பிரான்ஸின் தலைவர் ஜெனரல் டிகால் சுய நிர்ணய உரிமை அளிக்கக்கூடிய திட்டமொன்றை அல்ஜீரிய மக்களுக்காகப் பிரேரித்தார். அல்ஜீரிய சுதந்திர அரசாங்கத்தார் அதை நிபந்தனையுடன் ஒப்புக்கொண்டு, அதுபற்றிப் பேச்சுவார்த்தைகள்நடாத்த சம்மதித்துள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் சபையிலே ஆசிய — ஆபிரிக்க நாடுகள் ஒரு தீர்மானம் கொணர்ந்தன. அல்ஜீரிய மக்களுக்கு சுய நிர்ணய உரிமை அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில், அப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்க்க வேண்மென்பதே அத்தீர்மானம். இது தங்கள் உள்நாட்டு விஷயம் பற்றியதென்றுகூறி விவாதத்தைப் பிரான்ஸ்பகிஷ்கரித்ததுடன், இத்தீர்மானத்தை எதிர்க்கும்படி பலத்த பிரசாரம் செய்தது.

தீர்மானம் ஒவ்வொரு பகுதியாக நிறைவேறியதென்றாலும் முடிவில் தீர்மானமனைத்தையும் சேர்த்துவிட்டபோது, இரண்டு வாக்குகள் குறைந்தமையால் அது நிராகரிக்கப்பட்டு விட்டது. தீர்மானத்தைப் பிரிட்டன் எதிர்த்திருக்கையில், அமெரிக்கா நடு நிலையை வகித்தது. தென்னமெரிக்க நாடுகளில் சில கடைசியில் மனம் மாறி விட்டன. இவ்வித இரண்டுங்கெட்டான் நிலை இதுவரை ஏற்பட்டதில்லை. பெரிய வல்லரசுகளின் சுய நலமும், விசேஷ செல்வாக்கும் ஐ. நா. சபையை இன்னும் ஆட்டி வைக்கின்றனவென்பது கண்கூடு.

தீர்மானம் நிராகரிக்கப்பட்ட காரணத்தால்பிரான்ஸ் விசேஷ திருப்தி கொண்டு கண்மூடித்தனமாக இருக்க முடியாது. மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளில் இரண்டு வாக்குகள் கிடைக்காததால்தான் தீர்மானம் தோற்றது. இனி பிரான்ஸ், தனது அறிக்கையின்படி தாராளமனத்துடன் நடந்துகொள்வதன்மூலம், அல்ஜீரிய மக்களுக்கு நீதி வழங்கி, தங்கள் உள்நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதுடன், உலக மக்களின் மதிப்பையும் பெற முடியும்.

---

## தேர்தல் உற்சவம்

இன்றுதான் கொழும்பு நகர சபைத் தேர்தல் உற்சவத்தின் கடைசி நாள். தீர்த்தத் திருவிழா. அடடா! இரண்டு கண் போதவில்லை இக் காட்சிகளைக் காண!

எங்கு பார்த்தாலும் "கொடியோர்"கள் மயம்தான்! வேறு தப்பாக நினைக்காதீர்கள். தேர்தல் உற்சவத்திலே யானைக் கொடியோர், சக்கரக் கொடியோர், சாவிக் கொடியோர், நட்சத்திரக் கொடியோர், கைக்கொடியோர், வீட்டுக் கொடியோர், நாற்காலிக் கொடியோர் முதலானவர்கள் தங்கள் தங்கள் கொடிகளை உயர உயரப் பறக்கவிட்டிருக்கிறார்கள்!

கார்த்திகைத் தீபத்தன்று இந்தக்கொடி மரங்களில் வர்ண மின்சார விளக்குகள் பிரகாசித்தகாட்சியைக் காண்கையில் ஏதோ தெருவெல்லாம், ஊர் எல்லாம் திருவண்ணாமலைக் கோபுரத் தீபம்போல் காட்சி அளித்தன! நகரசபைத் தேர்தலே இவ்வளவு அமர்க்களமாக இருக்கிறதே இனி வருகிற பார்லிமெண்ட் தேர்தல் என்ன பாடுபடுமோ? எவ்வளவு 'பீஸ்' துணிகள் கொடிகளுக்காகக் கிழியுமோ?

* * *

இதுவரை எங்கள்வீட்டுக்கு வராதவர்களெல்லாம் வந்தார்கள். காணாதவர்களையெல்லாம் கண்டேன். "நான் இந்த வார்ட்டிலே தேர்தலில் நிற்கிறேன். எனக்கே உங்கள் 'வாக்கை அளிக்கவேண்டும்" என்று முன்பின் தெரியாத ஒருவர் ஒரு பெரிய கூட்டத்துடன் வந்து கேட்டார். "உங்களை எனக்குத் தெரியாதே" என்று சொல்ல முடியுமா? "சரி சரி" என்று ஒருவிதமாக அனுப்பியதும், மற்றோர் கூட்டத்தின் தலைமையில் மற்றோர் அபேட்சகர் வந்தார். தலையில் பச்சை, சிவப்புத் துணிகளைக் கட்டிக்கொண்டும், பீடிகளைப் புகைத்துக்கொண்டும் அந்தத் தேர்தல் திருக்கூட்டம் வந்ததும், சென்ற வருஷ கலககாலத்தில் வந்த கூட்டம்தான் ஞாபகம் வந்தது! அவருக்கும் "சரி சரி" என்று சொல்லி சட்புட்டென்று அனுப்பிவைத்தேன். இல்லாவிட்டால்......!

* * *

தேர்தலில் நல்லவர்களுக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் முடியவில்லை.

இவர்கள் தேர்தலுக்கு முன்பாக வந்து, ஏதாவது சமூகத் தொண்டு முதலியன செய்தால் நமக்கு அவர்களைத் தெரியும். ஆனால் தேர்தல் நெருங்கும் போதுதான் இவர்களை முதன் முதலாகப்பார்க்கிறோம். என்ன செய்வது?

சென்ற இரண்டு ஆண்டுகளாகக் கொழும்பிலே நகர சபையைக் காருண்ய அரசாங்கம் கலைத்துவிட்டது. எங்கள் பிரதிநிதிகள் யாருமே இல்லை. என்றாலும், விளக்குகள் எரிகின்றன.

புதிய அழகான விளக்குகளைப் பல தெருக்களிலும் இப்போது கொமிஷனர் போட்டு வருகிறார். அந்த விளக்குகள் புதிய சபை வந்ததும் பிரகாசிக்கலாம். தெருக்கள் சுத்தமாக்கப்படுகின்றன. எங்கள் வீட்டுச் சாக்கடை அடைத்துக் கிடக்கிறதென்று, சுகாதார அதிகாரிக்கு டெலிபோன் செய்தேன். சில மணிநேரத்துள் நான்குபேர் வந்து சுத்தம் செய்துவிட்டார்கள்.

என்றாலும், சபையும். மெம்பர்களும்தானே ஜனநாயகத்துக்கு அழகு. அவர்கள் நீடித்து இல்லாவிடில் இங்கு ஜனநாயகம் என்னவாகும்?

(9ஆம் பக்கம் பார்க்க)

பண்டாரநாயக்கா கொலை வழக்கு

# துக்க மேலீட்டினால் கண்ணீர் சொரிந்த விவசாயி

## கடைசி நேரத்திலும் பிரதமர் காட்டிய காருண்யம்

நேற்று முன்தினம், பண்டாரநாயக்கா கொலைவழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்றபோது, விஜயக்கூன் விக்கிரமசிங்கே என்பவர் சாட்சியமளித்தார். இவர் பொல்காவலையைச் சேர்ந்த ஓர் உபாத்தியாயர். பிரதமர் கொலையுண்ட அன்று, பிரதமரின் இல்லத்தில் நின்றுகொண்டிருந்தவர்களில் இவரும் ஒருவர். இவர் அங்கு நின்றவொரு பொலிஸ்காரரிடம் துப்பாக்கியை எடுத்துக் கொடுத்தாராம். அந்தத் துப்பாக்கி சூடாகவிருந்ததென்றும், தீர்ந்த வெடிமருந்தின் மணம் அதிலிருந்து கிளம்பியதென்றும் அவர் கூறினார். தான் துப்பாக்கி கொடுத்த பொலிஸ்காரரைவிட வேறு ஒரு பொலிஸ் உத்தியோகத்தரையும் தான் காணவில்லையென்றார். பிரதமர் படுக்கையில் கிடந்ததைத் தான் கண்டதாகக் கூறிய இவர், அறையிலிருந்து பிக்கு எவரும் ஓடியதைத் தான் காணவில்லையென்றார். இரத்தம் தோய்ந்த தேசிய உடையுடன் ஒருவர் காணப்பட்டார். பிரதமர் படுக்கையிலிருந்தபோது, அவருடைய உடையில் இரத்தம் இருந்தது. ஆனால், அவருடைய உடலில் காயங்களைக் காணவில்லை. படுக்கையறையில் திருமதி பண்டாரநாயக்கா, திஸ்ஸநாயக்கா ஆகியோரையும், வேறு சிலரையும் தாம் கண்டதாகவும் அவர் கூறினார்.

அடுத்துச் சாட்சியமளித்தவர் தஸநாயக்கா(42). இவர் ரற்மல் கொடையைச் சேர்ந்தவர். அவர் கூறியதாவது: பிரதமர் வீட்டு விருந்தையில் இருந்த வட்ட மேசையொன்றைச் சுற்றி நானும் எனக்குமுன் சாட்சியமளித்த விக்கிரமசிங்கேயும் நின்றோம். விருந்தையின் மூலையொன்றில் ஒரு பிக்கு வீற்றிருந்தார். அந்தச் சமயத்தில் வேறொரு பிக்குவும் அங்கு இல்லை. ஆனால், பின்னர் இன்னுமொரு பிக்கு இருவருடன் வந்தார். இரண்டாவதாக வந்த இந்தப் பிக்குவுடன் பேசியபின்னர், பிரதமர் மற்றப் பிக்குவிடம் சென்றார். மூலையிலிருந்த பிக்கு, திடீரென்று குதித்தெழுந்து பிரதமரைச் சுட்டார். பிரதமர் பிக்குவுக்கு நேர் முகமாக நிற்கவில்லை. பிக்குவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையிலேயே, பிக்கு பாய்ந்து சுட்டார். சுடும்பொழுது துப்பாக்கியை நான் காணவில்லை. ஏனெனில், அது பிக்குவின் உடலோடு ஒட்டியபடி இருந்தது. ஆனால் அவர் பிரதமரைத் துரத்திக்கொண்டு ஓடியபோது நான் துப்பாக்கியைக் கண்டேன்.

பிரதமர் படுக்கையறையிலிருந்தபடியே, “அந்தப் பிக்குவை ஒன்றும்செய்யாதீர்கள்” என்று கூறியது எனக்குக் கேட்டது. அறைக்குள் நான் சென்றேன். அப்பொழுது ஒரு வெடிச் சத்தம் கேட்டது. கீழே கிடந்த பிக்கு சுடப்பட்டிருந்ததை கண்டேன்.

பொலன்னறுவையைச் சேர்ந்த விவசாயியாகிய யத்தவரா என்பவர், ஆனந்த தேரோவுடன் வந்தவர்களில் தானுமொருவர் என்றார். பிரதமர் சுடப்பட்டதும் துக்கத்தினால் தான் கண்ணீர் வடித்ததாகவும் இவர் கூறினார்.

## ஈழநாடு கலண்டர்

ஈழநாடு 26-12-59 இதழுடன் 1960 ஆம் ஆண்டுக்குரியகலண்டரைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பிரதிகளுக்கு விற்பனையாளரிடம் முற்கூட்டியே பதிவு செய்துகொள்க.

# வட பகுதியில் சமசமாஜக் கட்சி

## ஆறு அபேட்சகர்களுக்குத் தலைமைப் பீடம் அங்கீகாரம்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

வடபகுதியில் சமசமாஜக் கட்சியில் தெரிவு செய்யப்பட்ட 6 பொதுத் தேர்தல் அபேட்சகர்களை அதன்மத்தியதலைமைப் பீடம் அங்கீகரித்து விட்டது, வடமாகாணத்தில் இன்னும் 5 தொகுதிகளுக்கு அபேட்சகர்கள் இறுதியாகத் தெரிவு செய்யப்படவில்லை. சமசமாஜக் கட்சித் தலைவர் டக்டர் என். எம். பெரேரா நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேருவார். அவர் வந்தபின் கடைசி முடிவுகள் செய்யப்படும். மத்திய தலைமைப் பீடம் அங்கீகரித்த அபேட்சகர்கள் பின் வருமாறு; திரு. ஏ. விஸ்வநாதன், யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர் (யாழ்ப்பாணம்), திரு. ஏ. துரைராஜசிங்கம், யாழ்ப்பாணம் மாநகரசபை அங்கத்தவர் (நல்லூர்), திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், நியாயவாதி (கோப்பாய்), திரு. ஆர். ஆர். தர்மரத்தினம், பிறக்டர், கிராமச்சங்கத் தலைவர் (உடுப்பிட்டி), திரு. ஏ. நல்லதம்பி, ஆசிரியர் (ஊர்காவற்றுறை), திரு. பி. நாகலிங்கம், முன்னாள் செனேட்டர் (உடுவில்). காங்கேசன்துறை, கிளிநொச்சி, வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய தொகுதிகளுக்கு வருகிற ஞாயிற்றுக்கிழமை அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். பல்கலைக் கழகக் கணக்கு பேராசிரியர் டக்டர் பி. செல்வநாயகம், ஒன்றில் காங்கேசன்துறை அல்லது கிளிநொச்சி தொகுதியில் போட்டியிடுவார். மன்னார், வவனியா ஆகிய தொகுதிகளிலும் சமசமாஜக் கட்சி போட்டியிடுகிறது.

டக்டர் என். எம். பெரேரா ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வந்தாலும் அவர் பொதுக் கூட்டம் எதிலும் கலந்து கொள்ள மாட்டார்.

சமஷ்டிக் கட்சியும் வடபகுதிக்கு முடிவாக அபேட்சகர்களை இன்னும் தெரிவு செய்யவில்லை. அடுத்த வாரத்துக்குள் இது பூர்த்தியாகுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே எம். பி. க்களாயிருந்தவர்கள் தத்தம் பகுதிகளில் போட்டியிடுகிறார்கள்.

## தி. மு. க.வும் குதிக்கின்றது

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கத்தில் வேலைபார்க்கின்றார். அவரை விசாரித்ததில் சனிக்கிழமைதான் நிர்வாகசபை கூடி எந்தெந்தத்தொகுதிகளில் போட்டியிடலாமென்று தீர்மானிக்குமென்றார். அநேகமாக ஐந்து இடங்களில், வடமாகாணத்தில் இரண்டு, கிழக்கு மாகாணத்தில் இரண்டு, கொழும்பு மத்திய தொகுதி இவ்விடங்களில் கட்சி போட்டி இடக்கூடுமென்றும் முடிவான தீர்மானம் இரண்டொருநாளில் தெரிந்து விடுமென்றும் சொன்னார்.

இலங்கையிலே தி. மு. க. வில் பிளவு ஏற்பட்டு, வேறு இரண்டு கட்சிகள் இதே பெயரில் செயலாற்றுவதாகவும் தென் இந்தியாவிலுள்ள தி. மு. க. வுக்கும் இக்கட்சிகளுக்கும் அரசியலில் தொடர்பு எதுவுமில்லைஎன்றும் கூறப்படுகிறது.

## தேர்தல் உற்சவம்

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் காற்று எந்தப் பக்கம் அடிக்கிறது என்று கேட்கிறீர்களா? இதைப்பற்றி விசாரித்ததில் யு. என். பி. பக்கம் தான் என்று கேள்விப்பட்டேன். இடது சாரிகளுக்குள் ஒற்றுமையில்லாமல், ஒரு தொகுதியிலேயே பலர் தற்கொலைப் போட்டியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் யு. என். பிக்கு மிக வசதியாக இருப்பதாயும் அக்கட்சியே தேர்தலுக்கு வேண்டிய ஏற்பாடுகளை மாதக் கணக்காகச் செய்து வந்துள்ளதாயும் அறிந்தேன்.

இன்று இரவு 9 மணிக்குள்ளாகவே முடிவுகள் தெரிந்து விடுமாம். கொழும்பு மகா ஜனங்கள் தீர்ப்பு எப்படி இருக்கிறதென்பதைப் பார்ப்போம்.

—ஐயாறன்.

# கொங்கோ – பிஜி தீவுகளில் கலவரம்

## பாரிஸ் நகரில் பெருந் தலைவர் மாநாடு

மத்திய ஆபிரிக்காவிலுள்ள பெல்ஜியன் கொங்கோவில் சென்ற 8 ஆம் திகதி தென் பாகத்திலுள்ள நகரமொன்றில் நடைபெற்ற கலவரங்களின் விளைவாக 15 ஆபிரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து நெருக்கடி நிலைமை உண்டாகியது. ஊரடங்கு உத்தரவும் பிரகடனம் செய்யப்பட்டது. சிலவாரங்களுக்கு முன் இரு ஜாதியினருக்குமிடையே நிகழ்ந்த கலவரங்களின் ஒரு மறுதலிப்பே இது.

தென்னாபிரிக்காவின் பரிபாலனத்திலிருக்கும் தென்மேற்கு ஆபிரிக்காவிலும் கலவரங்கள் சென்ற வாரத்தில் நிகழ்ந்திருக்கின்றன. பலவந்தமாக ஆபிரிக்கர்கள் இடம் பெயர்க்கப்படுவதை எதிர்த்து ஆபிரிக்கர்கள் ஆர்ப்பாட்டங்கள் செய்தபோது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சிலர் கொல்லப்பட்டனர். வேறு சில ஆபிரிக்கர்கள் காயமடைந்தனர்; ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கட்டளையை மீறி தென்னாபிரிக்கா தென்மேற்கு ஆபிரிக்காவை ஒரு உறுப்பு மாகாணமாகக் கருதி அங்கும் இன ஒதுக்கல் கொள்கையைப் பரப்பிவருகின்றது.

### பிஜி தீவுகளில்

அவுஸ்திரேலியாவுக்கு கிழக்கே தென் மேற்கு பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள பிரித்தானிய குடியேற்ற நாடாகிய பிஜி தீவுகளில் கடந்த 9ஆம் 10ஆம் 11ஆம் திகதிகளில் ஐரோப்பியருக்குமாருகக் கலவரங்கள்நிகழ்ந்தன. கடைகள், மற்றும் ஐரோப்பியருக்குச் சொந்தமான மோட்டார்வண்டிகள்முதலியன சேதப்படுத்தப்பட்டன. எண்ணை நிலையத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டமொன்றில் ஒரு தொழிற் சங்கப் பிரமுகரை உரை நிகழ்த்தப் பொலிஸார் அனுமதிக்காத காரணத்தால் இக்கலவரங்கள் மூண்டன. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் தொழிற் சங்கத்தலைவர்கள் அமைதியை நிலைநாட்ட ஒத்துழைத்தனர். இக்கலவரங்களின்போது பலர் காயமடைந்தனர். பிஜி தீவுகளில் வசிக்கும் இந்தியரே பெரும்பாலும் இக்கலவரங்களில் ஈடுபட்டனரெனத் தெரிய வருகிறது.

பிஜி தீவுகளின் மொத்த சனத்தொகை 3, 61, 000 இவர்களுள் இந்தியர் 1, 77, 000; பிஜியர் 1, 53, 000; ஐரோப்பியர் 7,990; கலப்பு ஐரோப்பியர் 8, 038.— பெரும்பான்மையோர் அங்கு குடியேறியிருக்கும் இந்தியர்களேயாவர்.

### பெருந்தலைவர் மாநாடு

மேற்கு வல்லரசுகளின் பெருந்தலைவர் மாநாடு இன்று (19-12-59) பாரிஸ் நகரில் ஆரம்பமாகிறது. இத்தாலி, துருக்கி, அப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, ஈரான், கிறீஸ், தூனீசியா, ஆகிய நாடுகளுக்கு ஜனாதிபதி ஐசனோவர் விஜயம் செய்துவிட்டுப் பிரான்சுக்கு வந்திருக்கிறார். பெருந் தலைவர் மாநாட்டில் பங்குபற்றிய பின் 22ம் திகதி ஸ்பெயின், மொறொக்கோ ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டுத் தாயகம் திரும்புவார். அமெரிக்க இராஜாங்க மந்திரி கிறிஸ்தியன் ஹேற்றர் பெருந்தலைவர் மாநாட்டில் ஜனாதிபதி ஐசனோவருக்குத் துணைபுரிய பாரிஸ் நகருக்கு வந்துள்ளார்.

## உலக நிலை

## நாகூர் ஆண்டகையின் தர்ஹா நன் கொடையும் ஆண்டு விழாவும்

தமிழ்நாட்டில் அறம்வளர்த்த முஸ்லிம் தவ சிரேஷ்டராகிய நாகூர் ஷாஹ உல் ஹமீதொலி ஆண்டகையின் விழாவுக்காக வருடந்தோறும் தென்னிந்தியாவிலுள்ள நாகூருக்கு யாத்திரை சென்றுவந்துள்ள முஸ்லிம் மக்கள் செலவாணியாலும் போக்கு வரத்துக் கஷ்டத்தாலும் இன்னலுற்றார்கள். இக்குறையை நிவர்த்திக்க யாழ்ப்பாணம் முஸ்லிம், பொது நலத்தொண்டரும், ஏழைகளன்பனுமாகிய ஜனாப். யூ. எம். ஐதுறூஸ் அவர்கள் தனது சொந்தச்செலவில் தான் முன்புகட்டி ஏழை மக்களைக் குடியேற்றியுள்ள ஐதுறூஸ் அவன்யூவில் குறித்த ஆண்டகைக்காக ஒரு தர்ஹாவைக் கட்டி முஸ்லிம் மக்களுக்கு நன்கொடையளித்தார்கள். இவ்வருட விழாவையும் சிறப்பாக நடாத்தியுள்ளார். பெருந்தொகையான மக்கள் இவ்விழாவிற் பங்குபற்றி ஆண்டகையின் அருளைப் பெற்றேகினர்.

## யு. என். பி.யும் பொதுத் தேர்தலும்

இந்தத் தேர்தலுக்கு யு. என். பி. ஒன்றுதான் தயாராக இருந்து வந்தது. மறறக் கட்சிகள் இதற்கு ஆயத்தமே செய்யவில்லை.

சில தமிழ்த் தொகுதிகளிலும்கூட யு. என். பி போட்டியிட உத்தேசித்துள்ளதாயும், தேர்தலில் தாங்களே வெற்றி பெறுவோமென்று அவர்கள் அதிக நம்பிக்கை கொண்டிருப்பதாயும் தெரிகிறது.

ஆனால் காற்று எந்தப் பக்கமும் மாறக்கூடும். எந்தக் கட்சிக்கும் தனியாக மந்திரி சபை அமைக்கும்படியான மெஜாரிட்டி பலம் கிடைக்க முடியாதென்றும்; பிற கட்சிகளுடன் கூட்டு சேர்ந்த புதிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டியிருக்குமென்றும் கருதப்படுகின்றது.

## பிலிப்பின் மூன்று ஆயுதங்கள்

பிலிப் குணவர்த்தனவின் எம். ஈ. பி. க்கும் யு. என். பிக்கும் தான் பல தொகுதிகளில் கடும் போட்டி இருக்குமென்று கூறப்படுகிறது.

அவர் பௌத்த மதம், சிங்கள மொழி, தேசிய மயம் இம் மூன்று ஆயுதங்களையும் கொண்டு புதிய தேர்தலில் போட்டியிட முஸ்தீபு செய்து வருவதாயும், அவர் வீட்டில் அதிக பிக்குகள் காணப்படுவதாயும் தெரிகிறது.

## நற்றமிழ் வளர்த்த சோமசுந்தர பாரதியார்

தமிழ்ப்பெரும் புலவர்களில் ஒருவராக விளங்கித் தமிழ் மொழிக்கு அரும்பணியாற்றிய நாவலர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் சென்ற திங்கட்கிழமை (14-12-59) மதுரையிற் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 80. பாரதியார் அவர்கள் திருநெல்வேலியில் 27-7-1879 இல் பிறந்தார். கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார், சுப்பிரமணிய பாரதியார் ஆகியோரின் கூட்டுறவு சோமசுந்தரனாருக்குக் கிடைத்தமையால் தமிழ் மொழிப்பற்று அவருக்கும் மிகுதியும் ஏற்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் 1933 இல் தமிழ்ப் பேராசிரியராகப் பதவியேற்று ஐந்தாண்டுகள் அங்கு பணியாற்றினார். வள்ளுவர் ஆராய்ச்சியில் நாவலர் கைவந்தவர். ‘திருவள்ளுவர்’ என்ற நூல் அன்னாரின் கூரிய மதிநுட்பத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

1944 இல் சோமசுந்தர பாரதியார் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது ‘நாவலர்’ என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. தமிழ்மொழி வளர்ச்சியிற் கண்ணுங்கருத்துமாக இருந்து உழைத்துவந்த பெரியார்களின் வரிசையில் இப்பேரறிஞருக்கு என்றுமே மதிப்பான ஓர் இடம் உண்டு. அன்னார் புகழ் வாழ்க!

பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க, சில புதிய கட்சிகள் தலைதூக்கி வருவதைப் பார்க்கிறோம்.

பிரதமர் தகநாயக்கா புதியதொரு கட்சியை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளார். சென்ற பொதுத்தேர்தல் முன்பாகவும், அவர் "பாஷா பெரமுன" கட்சியை ஆரம்பித்து, தேர்தலில் வென்று மந்திரியானபின் அதைக் கலைத்தார். அதே போல இப்போதும் புதுக்கட்சியை ஆரம்பித்து, பின்னர் யு. என். பி. கட்சியுடன் சேர்ந்துவிடுவதே அவரது உத்தேசமாக இருக்கலாமென்றும், அவர் வெளியிட்ட புதிய கொள்கைகளுக்கும், யு. என். பி. கொள்கைக்கும் வேற்றுமை இல்லை என்றும், அவர் இப்போது தீவிர வலது சாரியாகி விட்டதாயும், கொம்யூனிஸ்ட் கட்சி கெனமன் கூறுகிறார்.

இந்தியர்களைப் பொறுத்தமட்டில், கூடுமான எவ்வளவு இந்தியரை வெளியேற்றிவிட முடியுமோ அவ்வளவும் செய்வதே, தகநாயக்காவின் புதிய கட்சியின் உத்தேசமாம். மொழி விஷயமாக ஒன்றும் கூறவில்லை. தனிச் சிங்கள சட்டமூலம் அதை முடிவாகத் தீர்த்துக் கட்டியாயிற்று என்பதுஅவர் கருத்துப் போலும்.

# புதிய வகுப்புவாதக் கட்சிகள் தலை தூக்குகின்றன

## மேத்தானந்தா கட்சி

**தர்ம சமாஜ கட்சி** என்ற பெயரில் எல். எச். மேத்தானந்தா முதலியவர்கள் ஒரு புதிய கட்சியை ஆரம்பித்துள்ளனர். இதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில், 1–சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுக்க இன்னும் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பது, 2–குடும்பத்துடன் இந்தியர் வெளியேற சலுகைகள் அளிப்பது. 50 வயதிற்கு மேற்பட்ட இந்தியரை ஓய்வு பெறச் செய்து, இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி விடுவது. 3–தோட்டங்களில் இலங்கையரைநியமிப்பது.இன்றேல், அந்த சம்பளத்துக்கான பணத்தை ஸ்தல ஸ்தாபனங்களுக்குத் தோட்டங்கள் செலுத்தவேண்டும். 4–வெளிநாட்டு ஆஸ்திகளைப் பரிசீலனைசெய்து, எவற்றை இலங்கையர் மயமாக்கலாமென்று தீர்மானிப்பது. 5–அரசாங்க மாவட்ட சேவைகளில், ஜனத்தொகை கணக்கின்படி, எல்லா வகுப்பு, மத அடிப்படையில், உத்தியோகங்களைப் பங்கிட்டுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பது 6–சிங்கள மொழியே பல்கலைக் கழகங்களில் போதனு; மொழியாக வேண்டும். கீழ் வகுப்புகளில் தமிழும், சிங்களமும் போதனு மொழிகளாக இருக்கும். தமிழுக்கு உரிய இடம் அளிக்கப்படும். தமிழ் பேசும் மக்களுக்கு அவர்கள் மொழியைக் கற்க வசதி அளிக்கப்படும். ஆங்கிலம், ஒரு பாடமாக போதிக்கப்படும். 7–கல்வி முதலிய தர்ம ஸ்தாபனங்கள் மூலம் மத மாற்றம் செய்வது தண்டிக்கப்படும் குற்றமாகும். இவற்றுடன் வேறும் பல நோக்கங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக் கட்சியை அமைப்பதில் ஈடுபட்டவர்களென்று மேத்தானந்தா அறிவித்தவர்களில் சிலர் அதை மறுத்து அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர்.

## இன்னும் இரண்டு

இதைத் தவிர, **இரியகொல்லையின் சமாஜவாதி பெரமுனை, இராஜரத்னவின் விமுத்திபெரமுனை** முதலிய கட்சிகள் வகுப்பு, மத அடிப்படையில் தேர்தலில் போட்டியிட முஸ்தீபுகள் செய்கின்றன.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபனங்களைப் பார்க்கையில், அடுத்த பொதுத் தேர்தலிலும் வகுப்பு வாத துவேஷப் பிரசாரங்கள் அதிகமிருக்குமென்று அஞ்சப்படுகின்றது. இப்போது பொதுத் தேர்தல் நடாத்துவது நாட்டின் அமைதியைக் குலைக்குமென்று நியமன அங்கத்தவர்கூறி,நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்தார். என்றாலும் பொதுத் தேர்தல் வருகிறது. இதற்கு நாடு இன்னும் சரிவரத் தயாராகவில்லை என்றும், வகுப்புவாத மத வெறிக்கூட்டங்களும், பொறுப்பற்ற, பதவி வேட்டைக்காரரும் அமைதியைக் குலைக்க முற்படலாமென்றும், அரசியல் வட்டாரங்களில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

## ஊழியர் சேம நிதி

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

படிச் சம்பளம், சில நகரங்களுக்கென விசேடமாகக்கொடுக்கப்படும் படிச் சம்பளம் என எல்லாம் அடங்கும். நாட் சம்பளத் தொழிலாளர்களுக்கு விடுமுறைச் சம்பளமும் சேர்க்கப்படும். மொத்தச் சம்பளம் கணக்கிடும் போது கிழமைச் சம்பளம், பகிரங்க விடுதலை நாட்கள், அவர்களுக்குரிய வருட விடுமுறை நாட்கள், சந்தர்ப்ப விடுதலை நாட்கள் என்பன எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். சில சந்தர்ப்பங்களிற் தொழிலாளிகளை ஊக்குவிக்குமுகமாகக் கொடுக்கப்படும் சலுகைகளும் உதாரணமாகத் தேயிலைத் தோட்டங்களில் தொகையான தேயிலை பிடுங்கப்பட்டதற்காகக் கொடுக்கப்படும் சம்பளமும், றப்பர்த் தோட்டங்களில் அதிகபால் எடுத்ததன் பேரில் பெறப்படும் சம்பளமும் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும். ஆனல், குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கு அதிகமான மணித்தியாலங்களுக்கு வேலை செய்ததனல் பெறப்படும் சம்பளம் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. உதாரணமாக: கடைகள், தோட்டங்கள், கைத்தொழில் நிலையங்கள் முதலியவற்றில் ஒரு கிழமையில் 45 மணித்தியாலங்களுக்கு மேலாக வேலை செய்வதனல் பெறப்படும் அதிகப்படியான சம்பளம் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. பகிரங்க விடுதலை நாட்களில் அன்றேல் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்வதனல் பெறப்படும் அதிகப்படியான சம்பளம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். இவை அனைத்தும் உயர்ந்த அளவுச் சம்பளமே தவிர மேலதிக நேரச் சம்பளமாக மாட்டா.

மொத்தச்சம்பளத்தில் வீட்டு வாடகைச் சம்பளம், குழந்தைகள் சம்பளம் என்பன ஊழியர் சேமநிதி உதவு தொகைகள் கணக்கிடும்போது தவிர்க்கப்படும். எனினும் விடுதிச்சாலை, உணவுச்சாலை, வாடி வீடுகள் போன்ற இடங்களில் வேலை செய்வோருக்குக் கொடுக்கப்படும் உணவின் பெறுமதி மதிப்பிடப்பட்டு சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு உதவு தொகைகள் கணக்கிடப்படும். உணவுக்கென மதிப்பிடப்படும் தொகை குறைவானதெனக் கண்டால் தொழில் அதிபர் அதனைத் திருத்தித் தகுந்த மதிப்பு அளிப்பார்.

—அடுத்த இதழில் முடியும்


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

ஏனெனில்
அது எனக்கு
எவ்வளவோ
நன்மையளிக்கின்றது..






மெக்கானிக்குகள் குழந்தைகள், வாலிப வயதினர் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்கவல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன இழந்த சக்தியை மீட்டுத்தரவும், ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி அலாதியானது.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட்பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப்பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, $B_2$, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B 1 சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்.

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப்பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்,
த. பெ. 189 கொழும்பு.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B1 அடங்கியது.

# சிறுவர் பகுதி

## சிறுவயதிலே பெரியவர்கள் !

(சோ. மகிந்தா — பதிவு எண். 269)

**டக்டர் லென்னக்:—** சிறு வயதிலே, தன் நண்பர்களுடன் டக்டர் லென்னக் விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒருவன் ஒரு கம்பியின் முனையில் குண்டுசியால் கீறினன். மற்ற முனைக்குக் கம்பியின் வழியாக ஊடுருவி வந்த ஒலியைக் கேட்டார் டக்டர் லென்னக். இந்த விளையாட்டுமூலமே ஈற்றில் டக்டர் லென்னக் 'ஸ்டெதஸ்கோப்' கருவியைக் கண்டு பிடித்தார்.

**ஆல்வா எடிஸன்:—** மின்சாரத்தைக் கண்டு பிடித்த மேதாவி ஆல்வா எடிஸன் சிறு பையனாக இருந்தபோது, என்ன செய்தார் தெரியுமா? ஒரு வாத்துமுட்டைமீது உட்கார்ந்து அடைகாத்துக் குஞ்சு பொரிக்க முயன்றாராம்!

**ஜீன். எச். பேபர்:—** சிறு வயதிலே, சூரியனை நோக்கிய வண்ணம், வாயையும் கண்ணையும் மாறிமாறி மூடித் திறந்தபடி நின்ற சிறுவனைப் பார்த்து "என்ன செய்கிறாய்?" எனப் பெரியவர்கள் கேட்டனர். "கண் மூலமாகவா அல்லது வாய்மூலமாகவா நான் சூரிய ஒளியை அனுபவிக்கிறேன் என்பதை அறிய முயலுகின்றேன்" என்று சிறுவன் பதிலளித்தான். அச் சிறுவன்தான் பூச்சிவகைகளின் பழக்க வழக்கங்களை ஆராய்ந்து பிராணி நூலறிவைப் பெருக்கிய பிரெஞ்சு விஞ்ஞானி ஜீன். எச். பேபர்.

## சின்னச் சின்ன எறும்பே!

—திமிலைத்துமிலன்—

சின்னச் சின்ன எறும்பே
சிங்கார எறும்பே
என்னையும் நீ விரும்பே
இதோ கையில் கரும்பே.

சுறு சுறுப்பாய் வேலை!
தொலையாத வேலை
வெறும் இருட்டு மூலை
வெளியேவா காலை.

என்னுடனே ஆடு
எங்கே உன் வீடு
கன்னல் தமிழ் பாடு
கைவலித்தால் ஓடு.

சோம்பலுக்கு நானா?
சுறுசுறுப்பில் நீயா?
தேம்பியழ நானா
செய்கையிலே நீயா?

உன்போல நானே
உழைத்திடு வேனே
முன்போல தானே
முடவனிலை நானே!

## புதிய மருமக்கள்

(பெயரும் பதிவு எண்ணும்)

632. அ. இராமநாதன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
633. பூ. பாலச்சந்திரன், இந்துக் கல்லூரி, திருக்கோணமலை.
634. ஜே. ஜே. இரத்தினசாமி பத்தவத்தை, இளவாலை.
635. எஸ். நாராயணன், நியந்துருப்பொல எஸ்டேட், நியந்துருப்பொல.
636. க. கணேசராசா, மே/பா திரு. கணவதிப்பிள்ளை, சித்தங்கேணி.
637. சு குமாரநாயகம், 'ஆனந்தவாசம்', பன்விலை, கண்டி.
638. சி. தாஷாயணி, 263, டைக் வீதி, திருக்கோணமலை.
639. க. அமரசிங்கம், வற்றாப்பளை, முள்ளியவளை.
640. ச. அருட்சுப்பிரமணியம், வில்வளை, மாதகல்.
641. ஆ. மு. அபூபக்கர், முஸ்லிம்மகாவித்தியாலயம், 7A வகுப்பு, சாய்ந்தமருது.
642. ஏ. பாலசரோஜினி, 'பாக்கியகிரி', கோவிலடைவீதி, திருக்கோணமலை.
643. ந. இராஜாம்பிகை 322, டைக்வீதி, திருக்கோணமலை.
644. ஆர். மலர்வதனி, 93, கண்டிவீதி, சாவகச்சேரி.
645. ந. நிர்மலாதேவி, 105, வனப்பாதிரி வீதி, திருச்சி—2.
646. நா. சகுந்தலாதேவி, மயிலங்காடு, சுன்னுகம்.
647. எம். டி. எம். இப்றகீம், 33, காரத் அபூபக்கர்வீதி, யாழ்ப்பாணம்.
648. வ. யோ. பாலரத்தினம், அர்ச். சூசையப்பர் குருமடம், திருக்கோணமலை.
649. அ. சிவலிங்கம், 131/1, அரசடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
650. இ. கருணாகரன், 4/2, அன்னசத்திரம் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

செல்வச் சிறுவர்களே!

அனைவருக்கும் வணக்கம். உங்கள் நண்பர் மகிந்தா 'சிறுவயதிலே பெரியவர்கள்' என்ற தலைப்பில் சில பெரியார்களைப்பற்றி எழுதியிருக்கின்றார். இதனைத் தொடர்ந்து நீங்களும் சிலபெரியார்களைப்பற்றிச் சுருக்கமாக எழுதி அனுப்பலாம் அல்லவா? முயற்சி செய்யவும்.

சின்னமாமா


## மாயக் குதிரை

(மா. இந்திராணி — பதிவு எண். 33)

விஜயபுரி என்ற நாட்டை புலிகேசி என்ற ஓர் இளவரசன் ஆண்டு வந்தான். ஒருநாள் மாலை புலிகேசி காட்டிற்கு வேட்டையாடச்சென்றான். வேட்டை முடிந்து திரும்பும் பொழுது காட்டின் மத்தியில் ஓர் அழகிய குதிரை நிற்பதைக் கண்டான். அந்தக் குதிரை இளவரசனைக் கண்டதும் விரைவாக ஓடத் தொடங்கியது. அதைக்கண்ட புலிகேசி வியப்புற்று அக் குதிரையைப் பிடிக்க தன் குதிரைமீது சென்றான். ஆனல் அந்த மாயக்குதிரை கண்ணுக் கெட்டாமல் மாயமாய் மறைந்து விட்டது. எவ்வாறாயினும் அந்தக் குதிரையைப் பிடிக்கவேண்டுமென்ற ஆவல் புலிகேசிக்கு உண்டானது. காட்டில் இருள் சூழவே புலிகேசி நாடு திரும்பினான். மறுநாள் அதிகாலையிலே புலிகேசி காட்டிற்குப் புறப்பட்டான். அவன் தேடிச் சென்ற திசையில் அக்குதிரை நின்றது. முதல் நாட் போலவே அவனைக் கண்டதும் அம்மாயக் குதிரை மருண்டு ஓடியது. இளவரசனும் விடாது பின்பற்றிச் சென்றான். விரைந்து சென்ற மாயக் குதிரை ஒரு ஆச்சிரமத்தை அடைந்து அங்கே இருந்த முனிவரின் பக்கத்தில் நின்றது.

மாயக் குதிரையைப் பின்பற்றி வந்த இளவரசன் முனிவரைக் கண்டதும் வணங்கினான். "சுவாமி இவ்வழகிய குதிரையை எனக்கு ஈந்தருள வேண்டும்" என இளவரசன் கேட்டான். முனிவர் உவகையுற்று "மல்லிகா உன சாபம் தீர்ந்தது" என்றார். மறுகணம் குதிரை நின்ற இடத்தில் அழகிய மங்கை ஒருத்தி நின்றாள். புலிகேசி ஆச்சரியமடைந்தான். முனிவர் அவனைப் பார்த்து "இவள் வேங்கை நாட்டு இளவரசி. வேட்டையாட வந்த பொழுது என்னை மதியாது பேசினாள். ஆகவே என் சாபத்திற்கு இலக்காகிக் குதிரையானாள். 'குதிரையாகிய உன்னை ஒருவன் விரும்பினல் நீ சாப விமோசனம் அடைவாய்' என்றேன். அதன்படி நீ அவளை விரும்பினாய். அதனல் அவளுக்கு சாப விமோசனம் கிடைத்து விட்டது" என்று கூறி இருவரையும் மணம்புரிந்து மகிழ்ச்சியாக வாழும்படி ஆசீர்வதித்தார். மறுநாள் இளவரசன் புலிகேசிக்கும் மல்லிகாவுக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

## உண்மைக் கதைகள்: ஹென்ரி மோற்றன் ஸ்டான்லி IV



**அவநம்பிக்கை:—** லிவிங்ஸ்டனைத் தாம் சந்தித்ததாகவும், அவர் சுகவீனப்பட்டவராகக் காணப்பட்டாரெனவும், அவருக்கு உதவி அவசியமானதெனவும் ஸ்டான்லி லண்டனில் தெரிவித்தபோது அவரை ஒருவரும் நம்பவில்லை. ஆனல், லிவிங்ஸ்டன் எழுதிய கடிதமொன்றும், அவருடைய குடும்பத்தினரின் சாட்சியமும், ஸ்டான்லி கூறியது உண்மை என்பதை நிரூபித்தன.

**ஆபிரிக்கா:—** ஸ்டான்லியின் புகழ் அதிகரித்தது. பத்திரிகைக் காரியாலயங்கள் அவரை நாடின. ஆனலும், புகழையும் பணத்தையும் உதறித்தள்ளி விட்டு, ஸ்டான்லி ஆபிரிக்கா சென்றார். லிவிங்ஸ்டனின்சேவை ஸ்டான்லியை அவ்வளவு தூரம் கவர்ந்திருக்கின்றது. ஆபிரிக்காவின் காடுகளை எல்லாம் ஊடுருவிச் சென்றார் ஸ்டான்லி.

**"ருவென்ஸோரி" மலைகள்:—** "ருவென்ஸோரி" மலைகள் எனப்படும் மலைகளைக் கண்டு பிடித்தவர் ஸ்டான்லியே. அவற்றுள் மிகவும் உயர்ந்தமலை "ஸ்டான்லி மலை" என்றே அழைக்கப்படுகின்றது. மத்திய ஆபிரிக்காவிலுள்ள பல இடங்களுக்கும் ஸ்டான்லி பிரயாணம் செய்தார். மலேரியாக் காய்ச்சல் அவருடைய உடல் நிலையைப் பெரிதும் பாதித்தது.

(தொடரும்)

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்கு வெளியாகும் விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 26-12-59க்கு முன்னர் சின்னமாமா, 'ஈழநாடு சிறுவர்பகுதி', தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

(19-12-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.............................................

விலாசம்.........................................

.................................

.................................

கையொப்பம்

பெற்றார் அல்லது ஆசிரியரின் கையொப்பம்.

வயது.............

இங்கே வெட்டவும்

# தொழிலாளரும் மனிதர்களே
## தோட்டங்களில் ஏன் இந்த துப்பாக்கிப் பிரயோகம்?

— மலை மகன் —

இளமையின் முதற்படியில் நிற்கும் ஓர் ஆணும், பெண்ணும், ஒரு சிறுவனும் சென்ற வார இறுதியில் பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையான செய்தி மனத்தை உருக்குகின்றது. சென்ற வெள்ளிக் கிழமையன்று, நாவலப்பிட்டிக்கு அருகிலுள்ள லட்சுமி தோட்டத்தில் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் மேலும் எழுவர் படுகாயம் அடைந்துள்ளனர் எனத் தெரிகின்றது.

'ஈழநாடு' 7-11-59 இதழ் இதைப்பற்றி எழுதியபோது தோட்டத் தொழிலாளியின் உயிர் துச்சமாக மதிக்கப்படுவது மட்டுமின்றி, எத்தகைய சிறு சம்பவமானாலும் துப்பாக்கியும் குண்டுகளும் உபயோகிக்கப்படுகின்றதெனக் குறிப்பிட்டது.

அதேபோலப் பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுக்குத் தொழிலாளர் பலியானது இது முதல்முறையல்ல. தங்கள் பாதுகாப்பிற்கு நாட்டின் நீதியையே நம்பியிருக்கும் மக்களிடையே அதிகாரிகள் கொண்டிருக்கும் எண்ணங்களின் பிரதிபலிப்பே இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்கள்.

### நியாயமற்ற செயல்

லட்சுமித் தோட்டத்திலே நிர்வாகிகளின் நியாயமற்ற செய்கைகளின் விளைவாக இங்கு நிலை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டே வந்தது. எனவே, அங்கு உருவாகியுள்ள தொழிற் சங்கத்தை ஒழித்துக்கட்ட இவர்கள் ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது இயல்பு. ஆகையால் இதனைத் தொழிற் சங்கம் உணர்ந்து, கவனமாக நடந்திருந்தால் துக்ககரமான இச்சம்பவத்தைத் தடுத்திருக்கலாம். இந்த வழியிலே நாம் பின்சென்று பார்த்தால், ஒரு திறமைவாய்ந்த தொழிற்சங்க அதிகாரி இல்லாத சமயங்களிலேயே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருக்கின்றது என்பது புலனாகும். வேலை நிறுத்தம் நடைபெறும் பகுதிகளில், ஒரு திறமைவாய்ந்த தொழிற்சங்க அதிகாரி இருப்பின், அல்லது அடிக்கடி அங்கு வந்துகொண்டாவது இருந்தால், தொழிலாளர் திரண்டு எழுவதையோ, பொலிசாரோ தோட்ட நிர்வாகமோ தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதையோ தடுக்க ஏதுவாக இருக்கும் என்பதை அனுபவம் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது. தொழிற் சங்கங்களிலே இன்று இத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய அதிகாரிகள் இருக்கின்றனர். இவர்கள் வேலை நிறுத்தம் நடைபெறும் இடத்திலோ அன்றி அதன் அண்மையிலோ இருந்து, தொழிலாளருக்கு அவ்வப்போது ஏற்ற வழிகளைக்காட்டி அவர்களுக்கு எதிராகப் பலாத்கார சம்பவங்கள் நடைபெறுவதைத் தடை செய்யவேண்டும்.

### மிருகங்களைப்போல

கொழும்பு நகரிலே வேலை நிறுத்தங்கள் நடைபெறும்போது, முதலாளிகளும் பொலிசாரும் எவ்விதம் நடந்துகொள்கின்றனர் என்பது நாம் அறிந்ததே. கொழும்புத் துறைமுகத்திலும், இன்ன பிறவிடங்களிலும்கணக்கிலடங்காப்பலவேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. இதன் காரணமாக அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய நிலையும் பல சந்தர்ப்பங்களில் நிகழ்ந்துள்ளன. இருப்பினும் ஒருமுறையாவது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை. லுனுவில்லையில் மட்டும் இவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அந்தோனி அப்போன்சோ என்பவர் உயிர்துறக்க நேரிட்டது. ஆனால், தோட்டத் தொழிலாளி என்றால் தூசு என எண்ணுகின்றனர். சும்மா ஓடித்திரியும் மிருகங்களைப்போன்று இவர்கள் சுட்டுத்தள்ளப்படுகின்றனர்.

லட்சுமி தோட்ட சம்பவத்தின் பின்னர் எல்லாத் தொழிற் சங்கங்களும், விரைவான நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளன. மூலோயாத் தோட்டத்தில் கோவிந்தன் என்ற தொழிலாளி உயிர்நீத்த சம்பவம் மட்டுமே இதற்கென நியமிக்கப்பட்ட ஒரு கொமிஷனால் விசாரிக்கப்பட்டது என இப்பொழுது நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அதற்குப்பிறகு நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோக சம்பவங்கள்—டயகம, உடபுஸ்ஸலாவ, பொகவந்தலாவைஆகிய இடங்களில் — கேட்பாரற்றுப் போயின. தொழிற் சங்கங்கள் எவ்வளவோ கேட்டும், அரசாங்கம் எவ்வித கொமிஷனையும் நியமிக்கவில்லை,

இதைப்போன்ற ஒரு பாரதூரமான சம்பவம் நடைபெற்றிருக்கையில், தொழிற் சங்கங்கள் தாங்களாகவே ஒரு குழுவை நியமித்து, சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டு, தமக்குக் கிடைக்கும் சாட்சியங்களை அலசிஆராய்ந்த பின்னரே ஒரு கொமிஷன் நியமிக்கப்பட வேண்டும் எனக் கேட்கவேண்டும்.

### பொலிஸ் ஒப்பந்தம்

இச்சமயத்திலே முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலால் முதலாளிமார்களுக்கும் தொழிற் சங்கங்களுக்கு மிடையில் ஏற்படுத்தப்பட்ட பொலிஸ் ஒப்பந்தம் எந்தவழியில் உபயோகிக்கப்பட்டு வருகின்றது என்பதை ஆராய்தல் அவசியம். வேலைநிறுத்தங்கள் நடைபெறும்போதெல்லாம் பொலிசார் பட்சபாதம் இன்றி நடக்காமல், தோட்ட நிர்வாகிகளுக்கே சாதகமாக நடந்து வந்துள்ளனர் என்பது புகார். அட்டன், நுவரேலியா ஆகிய பகுதிகளில் இந்த ஒப்பந்தம் ஒன்றுக்கும் உபயோகமில்லாமல், பொலிசாரின் பட்சபாதமான செயல்களை மறைக்க ஒரு திரையாக இருப்பதாகவே தொழிற் சங்கங்கள் கூறுகின்றன. இதைத் தவிர, தோட்ட நிர்வாகிகளால் இறக்குமதி செய்யப்படும் காடையரும், காலிகளும் தோட்டங்களிலே தொழிலாளரைத் தாக்கினாலோ, அன்றி இவர்கள் அமைதிக்குப் பங்கம் விளையுமெனக் கருதிப் பொலிஸாருக்கு முறையிட்டாலோ, பொலிஸார் எத்தகைய நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஆனால் தோட்ட நிர்வாகிகள் ஏதேனும் ஒரு சிறு சம்பவத்தை ஒட்டி டெலிபோன் செய்தால், பொலிஸார் உடனே ஆயுதந்தரித்து அங்கு பிரசன்னமாகி விடுகின்றனர். இந்நிலையிலே தொழிற் சங்கங்கள் தோட்டங்களில் வேலை நிறுத்தங்களில் ஈடுபடும்பொழுதோ, அன்றி இந்த ஒப்பந்தத்தில் ஏதேனும் சிக்கல்கள் விளையும் எனக் கண்டாலோ,மிகவும் விழிப்பாக இருத்தல் அவசியம்.

இன்று ஒரே குரலாக எல்லாத் தொழிற் சங்கங்களும் கோருவதைபபோல், லட்சுமி தோட்ட சம்பவத்தைப் பற்றி விசாரிக்க ஒரு கொமிஷன் அவசியமாகும்.

கண்ணோட்டம் 21

# சொல் ஒன்று: செயல் இன்னொன்று!

சொல்லுவது ஒன்று; செய்வது இன்னொன்று. இது நம் நாட்டுக்கு உரியதொரு சிறப்பு. இந்தச்சொல்லொன்று, செயலொன்று என்ற வழக்கம் பாமரர் [தொடக்கம் பண்டிதர்வரை இருந்து வருகின்றது. இதனைக் கடைப்பிடிப்போர் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் தொகைதான் நாட்டில் அதிகரித்து வருகின்றது.

இந்த ஒரு சிலர் தான், 'அரசியல் வாதிகள்' எனப்படும் ஆத்மாக்கள். இவர்களின் சொல்லொன்று; செயல் இன்னொன்று; நோக்கு வேறொன்று. பகற் கொள்ளைக்காரர்களைப் பார்க்கிலும், இவர்களுக்கு அதிக துணிச்சலும், தைரியமும் உண்டு. இன்று இவர்கள் மக்களின் உள்ளங்களைக் கவர மீண்டும் அரசியல் வானிலே பவனி வரத் தொடங்கிவிட்டார்கள்!

இந்த அரசியல் வாதிகள் உங்களுக்கு அளிக்க முடியாத பொருள் உலகத்திலேயே கிடையாது. "நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வோம்; உங்கள் எல்லோருக்கும் வயிறுர உண்ண உணவு தருவோம்; உங்கள் வாழ்க்கைச் செலவைக் குறைப்போம்" என்று இப்படி எத்தனையோ வாக்குறுதிகளை அவர்கள் உங்களுக்கு அளிப்பர். (பின்னர், பார்லிமெண்ட் படிக் கட்டில் காலை வைத்ததும், அதே வாக்குறுதிகளை அழிக்கவும் செய்வர் என்பதும் உங்கள் நினைவிலிருக்க வேண்டும்).

இன்னும் சில அரசியல் வாதிகள், "சந்திரன் வேண்டுமானால், அதைக் கூடக் கீழே இறக்கிக் கொண்டு வந்து தந்து விடுகிறோம்" என்று கூடச் சொல்வார்கள். ஆனால், இது அவர்களுக்கே உரித்தான தந்திரம் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. எந்த விதத்திலும், என்ன சொல்லியும் தாம் பார்லிமெண்ட் செல்ல வேண்டும் என்பது தான் இவர்களின் ஒரே - ஒரு நோக்காகும்.

"உங்கள் கிராமத்துக்கு 'லைட்' இல்லையா? என்னை அனுப்புங்கள்" என்பார் ஒருவர். அதன் பின் அவர் கிராமத்திலிருந்தே எப்பொழுதும் 'அவுட்'தான்! "உங்கள் தொகுதியில் உள்ள பல குறைகளையும் நீக்கி, உங்களுடைய தொகுதியைச் சிறந்த முறையில் உருவாக்குவேன்; உதவி புரியுங்கள்" என்பார் இன்னொருவர். அவர் தேர்தலில் தோற்றாலும் சரி, அல்லது பார்லிமெண்ட் சென்றாலும் சரி, அவரது தொகுதி இருந்த நிலையிலேயே இருந்து வரும்.

இந்த விதமாக, இந்த அரசியல் வாதிகள் பல வருடங்களாக எம்மை ஏமாற்றிப் பிழைத்து வந்திருக்கின்றனர். இன்னும் ஏமாற்றிப் பிழைக்கலாமென்ற எண்ணமும், ஏன், நம்பிக்கையும் கூட, அவர்களிடம் இருக்கத்தான் செய்கின்றது. இவர்களால் இச் செப்படி வித்தையை எப்படி அடிக்கடி செய்ய முடிகின்றதென்பது ஓரளவுக்கு ஆச்சரியமாகத் தோன்றினாலும், பிழை எம்மைச் சார்ந்ததேயாகும்.

நாம் ஓர் அபேட்சகருக்கு எமது வாக்கை அளிக்கும் பொழுது, மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும், கடமையுணர்ச்சியுடனுமே அவ்விதம் செய்ய வேண்டும். ஏனோ தானோ என்று வாக்களித்து வருவதாலே தான், இன்று எமது நாட்டில் ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எந்த நேரமும் நாடு சர்வாதிகாரப் பொறிக் கிடங்கில் விழுந்துவிடக் கூடியவொரு அபாயகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, இம்முறை, நாம் ஒவ்வொருவரும் ஆழ்ந்த சிந்தனையின் பின்னர் தான் எமது வாக்கை அளிக்க வேண்டும். வாக்களிக்கும் விஷயம், ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு மிடையே வீடு தேடி வந்து உளங்கவரும் முறையில் பேசும் அரசியல் வாதியின் மனத்தைச் சமாதானப்படுத்தவோ அல்லது அவர் மனம் புண்ணகக் கூடாதே என்பதற்காகவோ என்று நாம் நினைக்கக்கூடாது. வாக்களிப்பது என்பது ஐந்து வருட விஷயமல்ல. அது, பல தலைமுறைகளையும் பாதிக்கக் கூடியவொரு விஷயமாகும்.

ஆகவே தான், பொது மக்கள், சந்தர்ப்பத்துக்குத் தகுந்ததாகவோ அல்லது சொந்த நலங் கருதியோ வாக்களித்தல் கூடாது. எங்கள் நாட்டின் எதிர்காலம் எங்கள் வாக்('வோட்')கில் தங்கியுள்ளது; அரசியல் வாதிகளின் வாக்கிலல்ல!

## சேமலாபநிதிக்கு அரசினரும் உதவவேண்டும்

அப்புத்தலைக்கு அருகிலுள்ள புதுத்தோட்டத்தில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தேர்தல் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஐ. தொ. கா.மாவட்டபிரதிநிதி திரு. எஸ். என். பண்டா தமிழிற் பேசும்போது கூறியதாவது:

சேமலாபநிதிக்காகத் தொழிலாளர் நடாத்திய போராட்டம் பூரண வெற்றியைத் தரவில்லை. இப்போதைய திட்டத்தின்படி இந்த நிதிக்குத் தொழிலாளியின் சம்பளத்தில் ஒதுக்கப்படும் தொகையோடு முதலாளியும் பங்கு தருகிறார். இது போதாது. தொழிலாளியிடமிருந்தும் முதலாளியிடமிருந்தும் அரசாங்கம் பெருத்த லாபத்தை அடைகிறது. எனினும் அரசாங்கம் தொழிலாளிக்காக நிதியுதவி தரவில்லை. எனவே அரசாங்கமும் தொழிலாளர் சேமலாபநிதிக்கு அரசாங்க சார்பில் ஒரு பங்கைச் செலுத்தவேண்டும்.

எஸ். மோதரலிங்கம் தலைவராகவும், எஸ். ஆண்டி காரியதரிசியாகவும், வி. எம். மலையாண்டி பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

12 பேர்கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்
ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை
மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிறுப்பர்

Std. 14

# தேசிய மயமாக்குவது நல்லதா? தீயதா?

## கொழும்பில் நடைபெற்ற விவாத அரங்கம்

சர்வதேச வர்த்தகர் சங்கத்தின் இலங்கைத் தேசிய சபையினரால் "தொழில் துறைகளைத் தேசியமயமாக்குதல்" என்ற தலைப்பில் ஒழுங்குசெய்யப்பட்ட விவாத அரங்கில், தேசியமய மாக்குவதைப்பற்றிப் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இலங்கை வங்கியின் ஜெனரல் மனேஜர் திரு. சி. லோகநாதன் விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

### பொருளாதார ஜனநாயகம்

திரு. என். கே. சோக்ஸி, கியு. ஸி. தலைமை வகித்துப் பேசும்போது இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எச். ஏ. டி. எஸ். குணசேகரா, பொருளாதார ஜனநாயகமின்றி, அரசியல் ஜனநாயகம் பயன் அற்றதாகிவிடும் எனக்குறிப்பிட்டார்.

தேசியமயமாக்குவது என்றால் நாட்டின் பெரும் பொருளாதாரப் பிரிவுகளான, தோட்டங்கள், வங்கிகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் யாவும் தேசியமயமாக்கப்படல் வேண்டும்.

முதலாளித்துவத்தின்கீழ் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டதென்றும், இதனால் யாவும் தேசியமயமாக்கப் படுவதைத் தாம் முற்றிலும் ஆதரிப்பதாகக் கூறினர்.

### தவறான எண்ணம்

செனட்டர் என். யு. ஜயவர்தன பேசும்பொழுது, நாட்டின் சகல பொருளாதார சீர்கேடுகளுக்கும் தேசியமயமாக்குதலே சிறந்த மருந்து என எண்ணுவது தவறு என்றும், எல்லாம் தேசியமயமாக்கப்பட்டால் தனி மனித சுதந்திரம் பாதிக்கப்படும் எனவும் கூறினர்.

திரு. பி. கந்தையா (கொம்யூனிஸ்ட்) பேசும்பொழுது, தேசியமயமாக்கல் எனில் நாட்டின் உற்பத்தித் துறைகளை எல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொள்வதல்லவென்றும், இதனால் நாட்டின் வருவாயைத் தரும் சகல சாதனங்களும் பொதுமக்களின் உடைமையாக இவற்றைப் பாதுகாக்கவும், உபயோகிக்கவும், நிர்வாகம் செய்யவும், தக்க அதிகாரங்கள் மக்களாற் தெரிவுசெய்யப்பட்ட சபைகளுக்கும், வேறு நியமன சபைகளுக்கும் அளிக்கப்படல் வேண்டும் எனவும் கூறினர்.

டாக்டர் என். எம். பெரேரா பேசும்போது இன்று இலங்கையின் முக்கியதேவை பொருளாதார விருத்தியே எனக் குறிப்பிட்டார். பிறநாடுகளின் விஞ்ஞான வளர்ச்சியால் அங்கு ஏற்பட்டுள்ள வாழ்க்கை வசதிகளை நம்நாட்டு மக்களும் அனுபவிக்க வேண்டும் என்றும், இதற்குரிய ஒரேவழிநம்நாட்டுப் பொருளாதார நிலையை விரைவில் விருத்திசெய்ய வேண்டும் என்றும், இதனை அடைவதற்கு நாட்டின் பொருளாதாரத் துறைகள் யாவும் தேசியமயமாக்கப்படல் வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

### லோகநாதன் திட்டம்

விவாதத்தின் இறுதியிலே திரு. லோகநாதன், தமது 'லோகநாதன் திட்டம்' என்ற புத்தகத்தின் பிரதியொன்றை டாக்டர் என். எம். பெரேராவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து அதைப்படித்தால், டாக்டர் தமது கருத்தை மாற்றிக்கொள்ளலாமென்றும், அரசாங்க உடைமையாவதால் தொழிலாளர் உற்சாகமடையமாட்டாரென்றும், தொழிலாளரையும் பங்குதாரர்களாக்கினால் அவர்கள் உற்சாகமாக உழைத்து, உற்பத்தியும் பெருகி நாடும் சுபிட்சமடையும் என்றும் கூறினர்.

---

# சத்தம் போடுங்கள் !

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

போடாதீர்' என்ற போர்ட்டுகளுக்குப் பதில் 'சத்தம் போடுங்கள்' என்று எழுதப்பட்ட விளம்பரங்கள் எங்கும் தொங்குவதைப் பார்க்கும் காலமும் வரலாம்.

வர்த்தக ஒலிபரப்பு மூலம் 'உங்களுக்கு அதிக மின்சாரம் வேண்டுமா; எங்களைக் கலந்தாலோசியுங்கள்' என்று யாராவது வாய்வீச்சாளர்கள் விளம்பரப்படுத்தினாலும் அதனை வியக்கக்கூடாத ஒரு காலமும் வரக்கூடும். இல்லாவிடில் ரேடியோவையே உரத்த சத்தத்தில் முறுக்கி விட்டு வீடு முற்றிலும் மின்சாரமயமாக்கிப் பார்க்கலாம்.

இன்னும் என் எண்ணம் எங்கெங்கோ சென்றது.

சந்தைகளிலெல்லாம் சந்தேகமில்லாமல் இந்த மின்சார சக்தி அதிகம் உருவாகும். அதுவும் விற்பனையாளர் பெண்களாயிருந்தால் விலை குறையக் கேட்பவர்களையும், விலைகேட்டுவிட்டுப்பின்னர் வாங்காமற் செல்வோரையும் தம்மிடம் சொந்தமாக மிதமிஞ்சி உருவாகும் மின்சார சக்தி கொண்டு விரும்பியபடி தாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

'மின்சாரமே உன் சமாச்சாரத்தை என்னென்று கூறுவேன்' இவ்விதம் என்னை அறியாமலே வாய்விட்டுக் கூறினேன்.

'இஞ்சேருங்கோ, கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே என்ன செய்யுறீங்கள்'

மின்சாரத்தைப் பற்றிய சிந்தனையில் புரண்டு கொண்டிருந்த நான் ஒருவேளை மின்சாரம்தான் வந்துவிட்டதோ என எண்ணி மழைகாலத்திற்கு உதவும் மிதியடிக்கட்டையை மாட்டிக்கொண்டு சென்றேன் கதவைத்திறக்க.

தண்ணீர்க் குடத்துடன் வந்தாள் என் குலவிளக்கு.

கன்றின் குரல் கேட்டுவிட்டது பசுவுக்கு!

'குழந்தை அழஅழப் பார்த்துக்கொண்டு இருக்கிறீங்களே. அப்பப்பா! ஒரு நிமிஷம் நான் வீட்டில் இல்லாவிட்டால் எல்லாம் அலங்கோலந்தான்!'

உண்மையில் அந்த இரைச்சல் மின்சாரத்தால் தாக்கியது போலத்தான் எனக்கு இருந்தது.

---

# அசுத்தம் நிறைந்த அட்டன் சீரடையுமென்ற நம்பிக்கை

## தேர்தலில் புதிய அபேட்சகர்கள் வெற்றி

— நமது நிருபர் —

அட்டன்

சமீபத்தில் 'ஈழநாடு' இதழொன்றில் அட்டன் நகரின் அவல நிலை குறித்து வெளியான கட்டுரை நினைவுக்கு வருகின்றது. கட்டுரை வெளிவந்த ஒருசில தினங்களுக்குள் அட்டன் நகரைப் பொறுத்த மட்டில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மலைநாட்டுத் தமிழரின் தலைநகராகத் திகழவேண்டிய அட்டன் நகர், பல ஆண்டுகளாக மிகவும் பிற்போக்கான நிலையை அடைந்திருக்கின்றதே யன்றி எவ்வழியிலும் முன்னேறவில்லை. அட்டன் பட்டின சபையின் ஊழல் நிறைந்த ஆட்சியே இதற்குக் காரணம். அட்டன் நகரின் பெரும்பான்மை மக்கள் இந்திய தமிழ் மக்களே. ஆனால் அவர்களுக்கு வாக்குரிமை இல்லாத கொடுமையினால் நகரின் சிறுபான்மையினர் கையில்தான் நகராட்சி இருக்கின்றது. இந்நகராட்சி இவ்வளவு காலமும் சுய காரணங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றதேயன்றி, மக்களின் முன்னேற்றத்துக்காக செயற்படவில்லை.

### அசுத்தமான நகரம்

மலை நாட்டின் மத்தியில் அட்டன் நகர் அமைந்திருந்தபோதிலும், இங்கு குடி தண்ணீர் வசதி செய்யப்படவில்லை. மக்களுக்கு குளிக்க வசதியில்லை. அட்டன் அசுத்தம்நிறைந்த நகர்.

அட்டன் பட்டின சபைத் தேர்தல் சென்ற 5-12-59 சனிக்கிழமை நடைபெற்றது. இத்தேர்தல் அட்டன் நகரைப் பொறுத்த மட்டில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என எல்லோரும் எதிர்பார்ப்பதற்கு காரணங்கள் உண்டு, இதில் முக்கியமான காரணம் கடந்த பல ஆண்டுகளாக நகராட்சியை நடாத்திய குழுவினர் இத்தேர்தலில் படுதோல்வியடைந்ததே.

(15ஆம் பக்கம் பார்க்க)



## சினிமா உலகம்

சில பிரபலதென்னிந்தியநட்சத்திரங்களைக் காணும் வாய்ப்பு சென்றவார இறுதியிற் கிடைத்தது. சினிமாஸ் லிமிடெட் அதிபர் திரு. குணரத்தினம் அவர்களின் இல்லத்தில் இவர்களைச் சந்தித்தேன்.

ஜெமினி கணேசன், சாவித்திரி, ரங்கரா்வ் இவர்களுடன் வெளியிலே பசும்புல் விரித்திருந்த பாயிலமர்ந்து பேசலானேம்.

"ஹிந்திப் படங்கள் தமிழ்ப் படங்களை விட முன்னேறியுள்ளன என்பதைத் தாங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?" என ஒரு நிருபர் கேட்டார்.

"முன்னேற்றம் என்ருல் நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்?" என்று கணேசன் திருப்பிக் கேட்டார். அனேகமாக அவர்கள் வெளியிடும் படங்களின் தொகை, கலை நுணுக்கம், ஆகியவற்றைக் குறிப்பிடுவதாகக் கூறினர் நிருபர்.

"உடலைக் குலுக்குவதையும், ரெக் அண்ட் ரேல் ஆடுவதையும் கலைநுணுக்கமெனக் கூறுகிறீர்களா? இவைதான் படவுலகமடையக்கூடிய முன்னேற்றம் என்ருல், அத்தகைய முன்னேற்றம் நமக்கு வேண்டவே வேண்டாம்". என ஒரேயடியாகக்கூறிவிட்டார்ஜெமினி.

இன்று வெளிவரும் தமிழ்ப் படங்கள் ஹிந்திப் படங்களுக்கு எந்தவகையிலும் தாழ்ந்தனவல்ல எனவும் அவர் கூறினர்.

சில வருடங்களுக்கு முன்பு 'லட்கி' (பெண்)என்னும் ஏ. வி. எம்மின் ஹிந்திப் படம்வெளியிட்ப்பட்டபொழுது இலங்கைக்குத் தாம் வந்ததாகவும், அப்பொழுது கண்டியில் ஒரு படமாளிகையில் 'சாரதியல்' என்ற சிங்களப் படத்தைப் பார்த்ததாகவும் ஜெமினி கூறினர்.

"நீங்கள் எந்த அரசியற் கட்சியையும் சேர்ந்தவரா?" என்ற கேள்விக்கு, "நான் எந்த

## நட்சத்திரப் பேட்டி

# இலங்கை மக்கள் கலையுள்ளம் படைத்தவர்கள்

—ஜெமினி கணேசன்

## படங்களின் வெற்றிக்கு நல்ல கதையமைப்பு அவசியம்

—ஸ்ரீதர்

அரசியற் கட்சியையும் சேர்ந்தவனல்ல. எனக்கென ஒரு சில அரசியற் கொள்கைகள் இருந்தாலும், அரசியலில் ஈடுபடுவதை நான் கண்டிப்பாகவெறுக்கிறேன்" என்று அவர் பதிலளித்தார். "அதெல்லாம் நமக்கு ஒத்துவராதுங்க" என்று சாவித்திரியும் சேர்ந்து பாடினர்.

தவிர்க்க முடியாத ஒரு கேள்வி! "உங்கள் அபிமான நடிகை யாரோ?"

"என் அபிமான நடிகை உண்மையில் சாவித்திரிதான்" எனக் கணேசன் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

"இலங்கைமக்கள் நாம் சென்றவிடமெல்லாம் எமக்களித்த ஏகோபித்த வரவேற்பு அவர்கள் சிறந்த கலையுள்ளம் படைத்தவர்கள் என்பதைக் காட்டுகின்றது" என்ருர் ஜெமினி.

"கல்யாணப் பரிசு" வெற்றிப் படத்தை எமக்கு அளித்த பிரபல டைரக்டர் திரு. ஸ்ரீதரிடமிருந்து அப்போதுதான் ஒரு நிருபர் விடைபெற்றுச் சென்ருர். நான் எனது நாற்காலியைப் பக்கத்தில் இழுத்துக்கொண்டேன்.

அவரது தோற்றத்தைக் கண்டதும் 'அமரதீபம்', 'கல்யாணப் பரிசு' போன்ற இணையற்ற திரைப் படங்களைத் தமிழர்களுக் களித்த பிரபல டைரக்டர் ஸ்ரீதர் இவர்தானு? என்ற எண்ணம் தான் தோன்றியது. வெள்ளை ஷேட்டும் காற்சட்டையும் அணிந்துகொள்ளும் குமாஸ்தாக்களில் ஒருவரைப் போலத்தான் அவர் தோன்றினர்.

"கல்யாணப் பரிசு' கதை எப்படி உருவாகியது?" என்றேன்.

"கற்பனை தான்"

"ஆனுல், உண்மையென்ற அடிப்படையைச் சுற்றித்தானே அத்தகைய கதை அமையமுடியும்? நீங்களே அத்தகைய சூழ்நிலையில் இருந்ததுண்டா எனக்கூடப் பலர் எண்ணுகின்றனர்" என்றேன். ஸ்ரீதர் சிரித்துவிட்டார்.

"உண்மைதான் சார்! நான் அத்தகைய அனுபவம் பெருவிட்டாலும் அத்தகைய அனுபவம் பெற்ற பலரைச் சந்தித்திருக்கின்றேன். அதன் விளைவுதான் இந்தக் கதை".

"உங்கள் கதைகளில் எல்லாம் இறுதியில் யாரையாவது கொன்றுவிடுகிறீர்களே! ஏன்?"

"மனிதர்கள் இறப்பது உண்மைக்குப் புறம்பானதா?" என்று ஸ்ரீதர் என்னைத் திருப்பிக் கேட்டார்.

"இன்று தமிழ்ப்படங்கள் பல தோல்வியுறுவதற்குக் காரணம்?"

"கதை தான். தமிழ்ப் படங்களைப் பார்ப்பவர்கள் அனேகர் கதையமைப்புக்காகத்தான் பார்க்கிருர்கள். இதனுல்தான் சிறந்த நடிகர்கள் நடிகைகள் நடிக்கும் பல படங்கள், நல்ல கதையில்லாத காரணத்தால் தோல்வியடைந்து விடுகின்றன".

"சைக்கிள் திருடன்' என்ற இத்தாலிய படத்தைப்போல் சிறிய ஒரு சம்பவத்தைக் கொண்டு தமிழ்ப் படங்களைத் தயாரித்தால் என்ன?"

"படு தோல்வியடைந்துவிடும். நமது படங்களிலே சோகம், காதல், ஹாஸ்யம் இவை யாவும் இருக்கவேண்டும். அத்துடன் படமும் மூன்று மணி நேரம் ஓடவேண்டுமல்லவா?"

"செஸில் பி. டி. மில்லின் 'பத்துக்கற்பனைகள்' போன்ற படங்களைத் தமிழில் தயாரிக்க முடியுமா?"

"முடியாமலென்ன? ஆனுல் தமிழ்ப்பட முதலாளிகள் இருபது இருபத்தைந்து இலட்சத்திற்கு மேல் செலவு செய்யமாட்டார்களே! அவர்களையும் குற்றம் சொல்ல முடியாது. அதற்கதிகமாக அவர்களால் செலவிட முடியாது".

'ரத்த பாசம்' என்ற படத்தின் மூலமே தான் திரையுலகுக்கு அறிமுகமானதாகவும், தனக்கு இத்தகைய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது திரு. டி. கே. சண்முகமே எனவும் ஸ்ரீதர் கூறினர்.

பக்கத்திலிருந்த ஒரு நிருபர் கேட்டார்; "சரோஜா தேவியைப்பற்றி உங்கள் கருத்து?"

"ஒரு சிறந்த நடிகை. சந்தர்ப்பம் கிடைத்தால் திறன் வெளிப்படும்".

"உங்களுக்கு எப்பொழுது திருமணம்?"

"ஏன் 'கல்யாணப் பரிசு' கொடுக்கவா? திருமணத்தின் போது அவசியம் தெரிவிக்கிறேன்!"

"இலங்கை இரசிகர்களைப் பற்றி அறிய எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆனுல், அவர்கள் எங்களுக்கு அளிக்கும் வரவேற்பிலிருந்து ஒருவாறு அவர்களைப்பற்றி அறிய முடிந்தது" என ஸ்ரீதர் தொடர்ந்து கூறினர்.

இலங்கை தம்மைப் பெரிதும் கவர்ந்துவிட்டதாகவும் அடிக்கடி இங்குவரத் தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுப்புது முகங்கள் படங்களில் தோன்றுவதைத் தாம் வரவேற்பதர்கவும் ஸ்ரீதர் கூறினர்.

* * *

சாவித்திரியின் பேட்டி சுருக்கமாக முடிந்தது.

"நான் கூறவேண்டியதையெல்லாம், அவரே கூறிவிட்டாரே" என வணக்கம் தெரிவித்து விடைபெற்றுக்கொண்டார் அவர்!

பிரபல நடிகர் ரங்கராவ், தயாரிப்பாளர் கோவிந்தராஜன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் இப் பேட்டியின் போது சமுகமளித்திருந்தனர்

— பொ.கிருஷ்ணசாமி.

## பத்துக் கற்பனைகள்

### பட விமர்சனம்

ஹொலிவூட் படத்தயாரிப்பாளருள் முதன்மை ஸ்தானம்வகித்தவர் செஸில் பி. டி' மில். மறைந்த இத்திரை மன்னனின் மகோன்னத தயாரிப்புத்தான் பத்துக் கற்பனைகள்.

கதை கிறிஸ்தவ வேதமான பைபிளிலிருந்து பெறப்பட்டுள்ளது. மூலக்கதையில் அவ்வளவு பிரமாதமாகக் கூறுமளவுக்கு ஒன்றுமில்லை. ஆனுல், கதைக்கு உயிரூட்டுவன சிறந்த நட்டுவாங்கமும், நடிப்புமேயாகும். அத்துடன் காட்சி ஜோடனைகள், வெளிப்புறக் காட்சி அமைப்புக்கள் யாவும் பெரிய அளவிலேயே எடுக்கப்பட்டுள்ளன. இப்படத்தில் எத்தனையோ காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக விளங்குகின்றன.

மோஸெஸ் என்பவரின் பாத்திரம் பொறுப்புவாய்ந்த பாத்திரம். அந்தப் பாத்திரத்தில் தோன்றி நடிக்கும் சார்ல்ஸ் ஹெஸ்டன், தமதுபாத்திரத்தின் மகிமையை உணர்ந்து நடித்திருக்கிருர். இறைவனுடன் பேசிவிட்டுத் திரும்பிய மோஸெஸ் உருவத்தில் மட்டுமல்ல, உள்ளத்தில், பேச்சில், நடிப்பில் எல்லாவற்றிலுமே முன்னைய மோஸெஸிலிருந்து வேறுபட்டே விளங்குகின்ருர். இறைவனுடன் தான் பேசியதுபற்றித் தன் மனைவியிடமும், நண்பனிடமும் விவரிக்கும்பொழுது, சார்ல்ஸ் ஹெஸ்டன் தமது முகத்தில் புனிதத் தன்மையையே பிரதிபலிக்கச் செய்துவிடுகிருர்!

பாத்திரமாகவே மாறிவிடும் விசேஷ தன்மையைப் பெற்ற ஒருசில நடிகருள் யூல் பிறைனரும் ஒருவர். ஈவிரக்கமற்ற சர்வாதிகாரியாக நடிக்கும் இவருடைய ஒவ்வொரு பேச்சிலும், அசைவிலும் பாத்திரம் உயிர் பெற்று நடமாடுகின்றது.

இவருடைய தந்தையாக, பேரோ (Pharoah) வாக நடிப்பவர் மிகத்திறமையாக நடித்துள்ளார். சிறிய பாகமெனினும், நடிப்பைப் பொறுத்தவரையில், இப்படத்தில் இவருக்கே முதல் ஸ்தானம் அளிக்கவேண்டும்.

மோஸெஸ்மீது மோகங் கொள்ளும் அரச குமாரியாக நடிப்பவர், காதலையும் கோபத்தையும் மாறிமாறிப் பரிமாறுகிருர். மோஸெஸ் கைப்பிடிக்கும் இடையர் மகளாக நடிக்கும் யோன் டி' கார்லோ அழகு நிறைந்தவர்; ஆடம்பரம் குறைந்தவர். மோஸெஸின் வளர்ப்புத் தாயாக வருபவரும், இவ்விரு பெண்களுக்கும் ஈடுகொடுக்கும் விதத்தில் நடித்திருக்கிருர். இவர்களில் எவரும் திறமையாக நடித்ததாகத் தெரியவில்லை; நடிப்பதற்குப் போதிய சந்தர்ப்பமும் இல்லை.

இப்படத்தில் வரும் ஒரு கட்டத்தில், கசப்பான உண்மையும் கனிவான நகைச் சுவையும் சேர்ந்து விளங்குகின்றன. பிரம்மாண்டமானவொரு கட்டடத்தின் அடியில் ஒரு கிழவி அகப்பட்டுக்கொள்கிருள். அவள் உதவிக்கு ஓடிச்சென்ற வாலிபனை அதிகாரிகள் பிடித்திழுத்துக் கட்டிவிடுகிருர்கள். அவர்களில் ஒருவன் வாலிபனைப் பார்த்து "ஏய்! இந்தக் கிழவி உனக்கு என்ன முறை?" என்று அதட்டுகின்ருன். பளிச்சென்று வாலிபன் பதிலளிக்கிருன்: "ஒரு கிழவி!" மனிதத் தன்மையற்று விளங்கிய அதிகாரிகளுக்கு இப்பதில் விளங்காத புதிராகத் தோன்றினும், அதில் ஆச்சரியமில்லையே!

படத்தில் பல பெரிய காட்சிகள் வருகின்றன. அத்தனையும் இங்கு சொல்லிவிடமுடியாவிட்டாலும், சமுத்திரம் இரு கூருகப் பிரிந்து மோஸெஸுக்கும், அவனது சிஷ்யர்களுக்கும் வழிவிட்டுக் கொடுக்கும் காட்சி அற்புதம்!

சிற்சில இடங்களில் ஓரளவுக்குச் சலிப்புத்தட்டினுலும் பத்துக் கற்பனைகள் படத்தயாரிப்பாளர் ஸெஸில் பி. டி' மில்லுக்கு மங்காத புகழ்தேடித் தரும் விதத்தில் அமைந்துள்ளது.

பார்க்காவிட்டால் 'பாவம்' என்றுகூடச் சொல்லலாம்போலிருக்கே!

—மின்மினி


**எதிர்பாருங்கள்!**

**சிலோன் என்றேரெயின்மெண்ட்ஸ் தாபனத்தாரின் தியேட்டர்களில்!**

என். டி. ராமராவ், எம். என். ராஜம், தேவிகா, கிரிஜா, நாகேஸ்வரராவ்

நடிக்கும்

**சபாஷ் ராமு**



**இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!**

**சென்ட்ரல்** (கொழும்பு)

பரபரப்பு நிறைந்த சம்பவங்களும், பரவசமாக்கும் இன்னிசையும் இணைந்தவோர் அரிய சித்திரம்!

**கைதி நெ. 911**

நடிகர்கள்: ஷேக் முக்தார், நந்தா, மகமத், மினூ மும்தாஸ், டெய்ஸி இராணி

**இரண்டாவது வாரம்!**

**ராணி** (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 5-30, இரவு 9-30 மணிக்கும்,
சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் காலை 10 மணிக்கும்.

செஸில் பி. டி' மில்லின்

**பத்துக் கற்பனைகள்**

பிரவேச கட்டணங்கள்: ரிசேவ்ட் ரூ. 3-25, முதலாம் வகுப்பு ரூ. 2-25, இரண்டாம் வகுப்பு ரூ. 1-50, கலரி 80 சதம்.

விளையாட்டுப் பகுதி

# யாழ்ப்பாணம் தோற்றது

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், அரசாங்க சேவைகள் கோஷ்டிக்கும் இடையே உதைபந்தாட்டப் போட்டியொன்று சென்ற சனி, ஞாயிறு இரு நாட்களும் நடைபெற்றது. சனிக்கிழமையன்று அரசாங்க சேவைகள் கோஷ்டி, யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கத்தை எதிர்த்து விளையாடியது. இந்த விளையாட்டில் அரசாங்க சேவைகளுக்கு 3 கோலும், யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கத்துக்கு 1 கோலும் கிடைத்தன. யோகராஜாவும், அலுவிகாராவும் முறையே 1 கோலும், 2 கோலும் அரசாங்க சேவைகளுக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

இரண்டாவது போட்டி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. இப்போட்டியில் அரசாங்க சேவைகள் கோஷ்டியும், அகில யாழ்ப்பாண கோஷ்டியும் பங்குபற்றின. இதில் எவருக்குமே வெற்றி கிட்டவில்லை. 2 — 2 கோல் இரு தரப்பினரும் பெற்றனர்.

## மக்கள் கிண்ண ஆட்டம்

அனுராதபுரம்.

மக்கள் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் யுனைட்டட் கோல்ட்ஸ் கோஷ்டியினர் ஜோசப்பியன் கோஷ்டியினரை 3—1 கோல்களால் தோற்கடித்து வெற்றி பெற்றனர்.

திரளான மக்கள் முன்பு விளையாடப் பெற்ற இவ்வாட்டம் தரமாக இருந்தது. சென்னை மெடிக்கல் கல்லூரியினர் இங்கு விஜயம் செய்யும் போது பரிசளிப்பு விழா நடைபெறும்.

## அசுத்தம் நிறைந்த அட்டன்

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை தேர்தலில் வெற்றியீட்டியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திரு. வாமதேவனும் திரு. ஆரியதிலக்காவுமாவர். பல ஆண்டுகளாக அட்டன் நகரசபையில் அங்கம் வகித்து சேவை செய்து வருபவர்களில் திரு. வாமதேவன் குறிப்பிடத்தக்கவர். இத்தேர்தலில் வெற்றியீட்டிய ஒரே தமிழர் அவர்தான். பெரும்பான்மையான சிங்கள வாக்காளர்களிருந்த ஒருதொகுதியில் திரு. வாமதேவன் வெற்றியீட்டியது மகிழ்ச்சிக்குரியது.

அட்டன் டிக்கோயா பட்டின சபைக்கு, திருவாளர்கள் எச். சோமபால, டொன் வில்பர்ட், வி. வாமதேவன், ஏ. டீன். ஜி. ஆரியதிலகா, எஸ். அபூசாலி, அந்தோனி பயோ, ஆகியோர் முறையே ஏழு வட்டாரங்களுக்கும் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பழைய சபையில் அங்கம் வகித்த இரண்டு முஸ்லிம்களும் இம்முறை மீண்டும் வெற்றி பெற்றுள்ளனர். இரண்டாம் வட்டாரத்தில் போட்டியிட்ட திரு. கிளாசர் என்னும் ஜேர்மனியர் 54 வாக்குகள் பெற்று தோல்வியுற்றுர்.

### வரவேற்பு


இத்தேர்தலில் வெற்றிபெற்ற அபேட்சகர்களுக்கு நகர மக்கள் அளித்த வரவேற்பு வைபவத்தில் சொற்பொழிவாற்றிய திரு. ஆரியதிலகா, திரு. வாமதேவன் ஆகியோரும் மற்றவர்களும், தங்களுடைய காலத்தில் பட்டின சபை ஆட்சி நல்ல முறையில் நடாத்தப்படுமென்றும், வீடு, தண்ணீர் முதலிய அத்தியாவசிய தேவைகள் உடனடியாகக் கவனிக்கப்படுமென்றும் உறுதிகூறினர்.

லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு. ஆரியதிலகா நகர சபையின் தலைவராக நியமிக்கப்படுவாரெனத்தெரிகின்றது.

## கணபதி வித்தியாலயம் பெற்றேர்—ஆசிரியர் சங்கம்

பாடசாலையின் முன்னேற்றத்திற்குப் பெற்றேரின் ஒத்துழைப்பு மிகமிக அவசியம். ஒருநாளில் சிலமணி நேரத்தைப் பாடசாலையில் கழிக்கும் மாணவன் நீண்ட நேரத்தை வீட்டிலேயே கழிக்கிறுன். அப்பொழுது அவனைப் பேணி அவன் ஆற்றல்களை, தனி வல்லவங்களை நல்வழியிற் திருப்பிவிட்டு நல்ல மனிதனுக ஆக்கவேண்டியது பெற்றேர் தம் கடமையாகும். இவ்வாறு திரு. கே. பரிபூரணனந்தர் (சட்ட மொழிபெயர்ப்புப்பகுதி) கொழும்பு தட்டாதெரு கணபதி வித்தியாலய பெற்றேர்—ஆசிரியர் சங்க ஆண்டுவிழாவில் பேசும்போது குறிப்பிட்டார். வித்தியாலய முகாமைக்காரர் திரு. எஸ். கணபதிச் செட்டியார் தலைமைவகித்தார். சித்தாந்தப்புலவர் இ. சி. சோதிநாதன், தலைமை ஆசிரியர் பொ. நடராசா ஆகியோரும் பேசினர். புது உத்தியோகத்தராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: திரு. எஸ். கணபதிச் செட்டியார். தலைவர்: வித்துவான் இ. சி. சோதிநாதன். உபதலைவர்: திரு. ச. இராமையா ஐயர். காரியதரிசி: திரு. எம். தம்பிமுத்து. உபகாரியதரிசி: திரு. எஸ். சீதாராமையர். தனதிகாரி; திரு. எஸ். ஸ்ரீ இராஜசிங்கம். நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.



அமெரிக்காவில் கோலி ('மாபிள்') விளையாட்டுக்கான போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் கீழே காணப்படும் இவ்விரு சிறுவருமே. பெண்களுக்கான போட்டியில் சன்ட்ரா ஸ்றெபான்சிச் என்னும் 12 வயதுச் சிறுமியும், ஆண்களுக்கான போட்டியில் மற்வைஸோக்கி என்னும் 13 வயதுச் சிறுவனும் வெற்றி பெற்றனர்.

1. சன்ட்ராவுக்கு இரு தம்பிகளும், ஒரு தங்கையும்இருக்கின்றனர்.

2. மற்வை ஸோக்கியின் தந்தை கரிச் சுரங்கத் தொழிலாளி. மற்றுக்கு ஒரு ஐந்து வயதுத் தம்பி இருக்கிறுன். அவனுக்கும் கோலி விளையாட்டில் அதிக விருப்பம்.

## பிறமண்டு வித்தியாலய பெற்றுர் ஆசிரியர்சங்கம்

தாண்டிக்குளம் பிறமண்டு வித்தியாலயப் பெற்றுர்-ஆசிரியர்சங்கத்தின்உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. த. யோகநாதன் (தலைமை ஆசிரியர்). உபதலைவர்: திரு. சங்கரப்பிள்ளை. காரியதரிசி: திரு. வே. இராசரத்தினம். தனதிகாரி: திரு. முத்தையா.

1960 சித்திரைத்திங்களில்பரிசளிப்பு விழா நடாத்துவதெனவும் வித்தியாலய தாபகர் திரு. சி.பிறமண்டுக்குப் பொன்னுடை போர்ப்பதெனவும் பரிசளிப்பு விழாச்சபை முடிவுசெய்தது. பரிசளிப்பு விழாச்சபையின் போஷகர் சுவாமி நடராஜானந்தா ஆவர்.

## திருமலையில் சுகாதாரப் பணி

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது போன்ற சுகாதார வகுப்புக்கள் அனுராதபுரத்தின் புளியங்குளத்து உணவு உற்பத்தி மேற்பார்வைப் பயிற்சியாளர்கள் நிலையத்திலும், விவசாயப் பயிற்சியாளர்கள் நிலையத்திலும் நடாத்தப்படவிருக்கின்றன.

### தேர்தல் ஆயத்தங்கள்

இலங்கை அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட திடீர் மாற்றங்கள் போல, அனுராதபுரத் தேர்தல் ஆயத்தங்களிலும் பற்பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அனுராதபுரத் தொகுதியில் போட்டியிடப் புது முகங்கள் முன்வந்திருப்பது போலவே, அனுராதபுரத் தொகுதியை விட்டுச் சிலர் விலகியுமிருக்கின்றனர். யு. என். பி. சார்பாக, இங்கு டி. ஆர். ஓ. கந்தோரில் முன்னர் பணியாற்றிய திரு. தென்னக்கோன், அல்லது வழக்கறிஞர் திரு. அசோக மஹாதில் போட்டியிடக்கூடும்.

அதே போல் முன்னர் யு. என். பி. யில் போட்டியிட எண்ணியிருந்த திரு. டபிள்யு. ஏ. பி. ஆரியதாசாவை (வர்த்தகர்) மிகுந்தலையில் சுயேச்சையாகப் போட்டியிடுமாறு அவரது ஆதரவாளர்கள் கேட்டுள்ளனர். அதற்கிணங்க அவர் அங்கு போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். திரு. எஸ். தலுவத்தை என்ற வர்த்தகரும் அனுராதபுரத்தில் சுயேச்சையாகப் போட்டியிடலாமெனத் தெரிகின்றது.

## சீனர் துன்புறுத்தினர்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற வாரம் புது டில்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் பெரு முன்னேற்றம் காணப்பட்டதாக அறிக்கை வெளியாகியிருக்கிறது. பிரிவினையால் பாதிக்கப்பட்ட அஸாம், வங்காளம், பஞ்சாப் ஆகிய மாகாணங்களின் நிதிப் பங்கீடு குறித்து இரு தரப்பினரும் உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றனர். இதர பிரச்சினைகளைப் பரிசிலனை செய்வதற்கு இம்மாநாடு இம்மாதப் பிற்பகுதியில் மீண்டும் கூடும்.

### இந்தியாவில் அமெரிக்க ஜனதிபதி

புது டில்லிக்குச் சென்ற 9-ம் திகதி வந்து சேர்ந்த அமெரிக்க ஜனதிபதி தமது ஐந்து நாட் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு சென்ற திங்கட்கிழமை ஈரானுக்குப் புறப்பட்டார். அவரும் இந்தியப் பிரதமரும் விடுத்துள்ள கூட்டறிக்கை இரு நாடுகளின் இலட்சியங்களுக்குமுள்ள ஒருமைப் பாட்டையும் சமாதானத்திற்காக உழைத்து வருவதையும் வற்புறுத்துகின்றது.

### ருஷிய ஜனதிபதியின் விஜயம்

ருஷிய ஜனதிபதி ஜெனரல் வொரோசிலோவ் அடுத்த மாதப் பிற்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### பெங்களூரில் மாணவரின் ஆர்ப்பாட்டம்

பெங்களூரில் நடைபெறும் சர்வ பல்கலைக் கழக இளைஞர் விழாக்காலத்தில் தமக்கு விடுமுறை அளிக்கவேண்டும் எனக் கோரி மைசூர் இராச்சிய பல்கலைக்கழக மாணவர் கடந்த வாரம் பலத்த ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலிஸார் தாக்குதலினுல் ஒருவர் கொல்லப்பட்டார். 6 பொலிஸார் உட்பட 11 பேர் காயமடைந்தனர். மாணவரின் காடைத்தனத்தினுல் போக்குவரத்து வாகனங்களும் சேதமடைந்தன. டிசம்பர் 7 தொடக்கம் 17 வரை நடைபெற்ற இவ் விழாவைக் கண்டுகளிக்கக் கல்லூரி மாணவருக்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தும் ஆயிரக் கணக்கில் மாணவர்வலோற்காரமாக உட்புக முயன்றதனுல் பொலிஸார் தடைசெய்து தாக்கவேண்டி நேரிட்டது என்று மைசூர் முதலமைச்சர் பி. டி. ஜற்றி கூறியிருக்கிறுர். டிசம்பர் 20ஆம் திகதி வரை மைசூர் இராச்சியத்திலுள்ள கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன.

### கேரளத்தில் தேர்தல்

கேரளத்தில் இடைக்காலப் பொதுத் தேர்தல் 1-2-1960 இல் நடைபெறும் என்றும் அபேட்சகர்கள் நியமனப் பத்திரங்களை 2-1-1960 இல் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## கொழும்புத்துறை மத்திய ஐக்கிய நாணயசங்கத்தின் வெள்ளி விழா

கொழும்புத்துறை சைவ வித்தியாசாலை மண்டபத்தில் சமீபத்தில் கொழும்புத்துறை மத்திய ஐக்கிய நாணய சங்கத்தின் வெள்ளிவிழா நடைபெற்றது.

இவ்வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில், சங்கத் தலைவர் திரு. வி. எஸ். நடராசா, சங்கக் காரியதரிசி திரு. கே. இராஜசிங்கம், இளைப்பாறிய கூட்டுறவு ஆணையாளர் திரு. ஆர். ஸி. செல்வரசுகுக், யாழ்ப்பாணம் மேற்குப்பகுதி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. வி. நடராசா ஆகியோர் அச்சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன் பல்வேறு சேவைகள் என்பனபற்றிப் பேசினர். கொழும்புத்துறை சைவவித்தியாசாலை உதவித் தலைமை ஆசிரியர் திரு. கு. குருநாதபிள்ளை அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

'போட்டோ' அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழநாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது 'ஈழநாடு' இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ 15 என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.

**போட்டோவின் அளவு, 6" X 4"**

**முடிவு திகதி 31-12-59**

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப்படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும். கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

## இதயங்கவர்ந்த 3-வது வாரம்!

காமினி (மருதானை) பிளாஸா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு)

வெம்பிளி (கண்டி) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா)

கொண்ட கொள்கைகளைக் கண்ட கணவனுக்காகக் கைவிடாமல் காப்பாற்றிய காரிகையின் கருத்தோவியம்!




★ எஸ். எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி
★ ஆர். எஸ். மனோஹர்
★ பண்டரிபாய்
★ எம். எஸ். திரௌபதி
★ ஏ. கருணாநிதி
★ டி. பி. முத்துலட்சுமி

நடித்த

# பெற்ற மகனை விற்ற அன்னை


நடனம்:
ஹெலன், ஜி. பாலா, கண்ணன், பி. டி. சரோஜா

## கிங்ஸ்லி வெலிங்டன் சிலோன் டூறிங்

(கொழும்பு) (யாழ்ப்பாணம்) (அம்பாறை)

## மங்களகரமான 10-வது வாரம்!

ஜெமினி கணேசன், சரோஜாதேவி, விஜயகுமாரி,
ஏ. நாகேஸ்வரராவ், கே. ஏ. தங்கவேலு, எம். சரோஜா
நடித்த




எதிர்பாருங்கள்!

ரஞ்சன்
ராஜசுலோசனா
நடித்த

# ராஜ மலய சிம்ஹன் (தமிழ்)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

## எல்பின்ஸ்டன் (மருதானை) றெக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி) குமாரன் (மன்னார்) அசோக்கமாலா (நீர்கொழும்பு)

எம். வி. ராமனின் அற்புத சிருஷ்டி!

இந்தி, தமிழ்ப்படங்கள் இரண்டிலுமே மங்காத புகழீட்டி வரும் வைஜயந்திமாலாவின் வண்ண நடனங்கள்!

எல்லாமே டெக்னிக்கலரில்! கண்டு களியுங்கள்!

வைஜயந்திமாலா தோன்றும்

# அதிசயப் பெண்

லண்டன், பாரிஸ், மொஸ்கோ, பிராக் ஆகிய ஐரோப்பியத் தலைநகரங்களில் வைஜயந்திமாலா ஆடிப்புகழ்பெற்ற நடனங்கள் சிலவற்றை அழகிய வண்ணத்தில் கண்டு மகிழ அரியதோர் சந்தர்ப்பம்!

மூன்றுவது வாரம்!

## கெயிட்டி (கொழும்பு)

ஜெமினி கணேசன், எம். என். ராஜம், எம். என். நம்பியார்
நடிக்கும்

# பெண் குலத்தின் பொன் விளக்கு

ஆண்களிலும் பெண்கள் மேம்பட்டவரென விருப்புப் பேசிய படித்த பெண் தனது கணவனால் அடக்கப்படுவதைச் சித்திரிக்கும் அருமையான ஹாஸ்யப் படம்!

## செல்லமஹால் (கொழும்பு)

டிசம்பர் 24 தொடக்கம்!

எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி, பத்மினி பிரியதர்சினி
நடிக்கும்

# தாமரைக்குளம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ந் திகதி வெளியிடப்பெற்றது.